

7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05



NORD OPTICAL



லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30



ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 03 | 31 ஒக்டோபர் - 13 நவம்பர் 2017 | முழக்கம் 059



## பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே

உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்

பரிஸ்தமிழ் .கொம்
www.ParisTamil.Com

பரிஸ்தமிழ்.கொம்மில் விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com




# தமிழர்களுக்கு சம்பந்தர் பரிசளித்திருக்கும் கறள் பிடித்த பெட்டகம்



## மைத்திரி ஆட்சியில் சத்தமின்றி நடக்கும் வன்முறைகளும், படுகொலைகளும்

## ஊடகங்களை அச்சுறுத்தும் சிறீலங்காவின் ஏவல் நாய் - கிழியும் முரளியின் முகத்திரை!

## தமிழர் பகுதிகளில் புத்த சிலைகளை கைவிட்டு சிங்களப் பிரதேசங்களாக மாற்ற முயற்சி

## குருதி ஆற்றிலிருந்து சிலிர்த்தெழுந்த தேசம்

## இலங்கையை முற்றுகையிட்டுள்ள 7 நாடுகளின் போர்க் கப்பல்கள்

## உயிர்பறிக்கும் உதவிகள்!


BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Boulangerie - Pâtisserie
208 Rue du Faubourg Saint Denis - 75010 Paris
Tél: 01 42 05 00 00 / e-mail : hotbreads@hotmail.fr
Hot Breads
திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் தேவையான கேக்குகள், சிற்றுண்டி வகைகள், பாண், பிஸ்கட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்
Eggless கேக்குகள் எமது சிறப்புத் தயாரிப்புக்கள்

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான்
சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்



64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

ஒலிம்பிக் அச்சகம்
லாச்சப்பலில்...!
அழைப்பிதழ்கள் – விளம்பர பிரசுரங்கள்
அனைத்தும் அழகாக – மலிவாக – விரைவாக
அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள
அச்சுப்பதிப்பு வேலையில் நீண்டகாலம் அனுபவம் பெற்றவர்கள்
31, rue Philippe de Girard
75010 Paris
Contact : 06 51 10 44 78

விரைவில்... TKTV.TV TAMILKATHIR.COM
இணையத் தொலைக்காட்சி!
தொடர்புகளுக்கு
tktv.info@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# 21ம் ஆண்டு நினைவு வணக்கம்

வீரச்சாவு
26 - 10 - 1996

**லெப். கேணல் நாதன்**
கந்தையா பேரின்பநாதன்
அரியாலை - யாழ்ப்பாணம்

**கப்டன் கஜன்**
கந்தையா கஜேந்திரன்
கோண்டாவில் - யாழ்ப்பாணம்



உயிர் வற்றிய மனிதம்
விழிகளில் ஜீவன் தேக்கி
மௌனப் புலம்பலுடன்
வைகறை வரம் தேடி
தவம் செய்து கிடக்கும்
மானிடத் தேடலில்
இந்த மரணங்கள்
மறுபடியும் உயிர்க்கும்
புலம் பெயர்ந்த மண்ணிலும்
தாய்நிலம் விடிய





வையமெல்லாம்
சுதந்திரப்பாடல் இசைத்துத்
திரிந்த இந்த விடுதலைப்
பறவைகள் பாரிஸ் நகரத்து
வீதியில் கடந்த 26.10.1996
அன்று கொடிய
கொலைக்கரங்களால்
வீழ்த்தப்பட்டார்கள்
விதையாய்....



-அன்புத்தம்பிகள், குடும்பத்தினர்-

# ASCES நடாத்தும்
# தமிழ்மொழித் தேர்வு - 2017

**சித்தியடைந்தோருக்கு சான்றிதழ் வழங்கப்படும்!**

**தரம் 1 முதல் 10 வரை**
**காலம் 23-12-2017 சனிக்கிழமை பி.ப 2மணி**
**நடைபெறுமிடம்**
18, avenue Lenine
93120 La Courneuve
M° La Courneuve (Ligne n° 7)
**மேலதிக விபரத்திற்கு தொ.இல 07 82 88 59 16**
**விண்ணப்ப முடிவு திகதி 08-12-2017**

# ஈழமுரசு®

mediacentre ஊடகமையம்

முரசு 03 | 31 ஒக்டோபர் – 13 நவம்பர் 2017 | முழக்கம் 059


"எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும் வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது."

– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்






# தமிழர்களுக்கு சம்பந்தர் பரிசளித்திருக்கும் கறள் பிடித்த பெட்டகம்



கலாநிதி சேரமான்

**09**.01.2015 அன்று சிங்கள தேசத்தின் சிம்மாசனத்தில் மைத்திரிபால சிறீசேன அமர்ந்ததும் தான் தாமதம்: இதோ வருகின்றது அரசியல் தீர்வு என்று இராஜவரோதயம் சம்பந்தர் தண்டோரா போட்டு அறிவித்தார்.

ஆனால் அரசியல் தீர்வு வரவில்லை. எட்டு மாதங்கள் கழித்து 17.08.2015 அன்று நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் மட்டும் வந்தது. ஆனாலும் என்ன? சம்பந்தரின் வாக்கை வேத வாக்காக நம்பி, அவருக்கும், அவரது பரிவாரங்களுக்கும் தமிழ் மக்கள் வாக்குகளை வாரி வழங்கினார்கள்.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வந்ததோ இல்லையோ, சம்பந்தரின் தலையில் மட்டும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற கிரீடம் அமர்ந்து கொண்டது. கூடவே சம்பந்தரின் ஆணவமும் நிலத்திற்கும், வானத்திற்கும் இடையில் எகிறிப் பாயத் தொடங்கியது. ஒரு காலத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்குப் பின்னால் பவ்வியமாகக் கோவைகளைக் காவிச் சென்ற சம்பந்தர், காலின் மேல் காலைப் போட்டுக் கொண்டு பேட்டி கொடுத்தார்.

சிறையில் இருந்து வெளியில் வந்ததுமே சக அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிப் பேசுவதற்காகத் தன்னைத் தேடி வந்த கோமகன் என்ற முன்னாள் அரசியல் கைதிக்குத் தனது ஒரு காலின் மேல் போடப்பட்டிருந்த மறு காலைக் காண்பித்தவாறு சம்பந்தர் பத்திரிகை படித்தார். கோமகனின் முகத்தை நிமிர்ந்து பார்க்காமல், பத்திரிகையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தவாறு ஏதேதோ எல்லாம் சம்பந்தர் பிதற்றினார்.

அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவில்லை. இதோ வருகின்றது என்று ஏலவே சம்பந்தர் பறையடித்த அரசியல் தீர்வும் வந்து சேரவில்லை.

2016ஆம் ஆண்டும் பிறந்தது. இதோ, இந்த ஆண்டின் இறுதிக்குள் தமிழர்களின் கைகளில் அரசியல் தீர்வு வந்து தவழும் என்றார் சம்பந்தர்.

பத்து மாதங்கள் கடந்து தீபாவளியும் வந்தது. ஆனால் அரசியல் தீர்வு மட்டும் வரவில்லை. அடுத்த தீபாவளிக்குள் நற்செய்தி கிட்டு என்றார் சம்பந்தர். மெல்ல 2016ஆம் ஆண்டும் கடந்து போனது. சம்பந்தர் மட்டும் அசரவில்லை. அடுத்த ஆண்டின் இறுதிக்குள் அரசியல் தீர்வு கிட்டும் என்றார். இதோ வருகின்றது தீர்வு, அந்தோ தெரிகின்றது தீர்வு என்றெல்லாம் சம்பந்தரும், அவரது பரிவாரங்களும் பறையடித்தார்கள்.

இரண்டாவது தீபாவளியும் வந்தது. புதிய அரசியலமைப்பிற்கான வரைபு பற்றிய இடைக்கால அறிக்கை என்ற ஒரு அலாவுதீன் அற்புத விளக்கை சிங்களப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ச்சி 14ம் பக்கம்


Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு வகைகள்
Ria | MoneyGram money transfer | WESTERN UNION MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்

29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com

மக்கள் கடை
NEW CASTEL

உங்கள் தேவைகளே எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

ஈழமுரசு

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel Gratuit

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

**Impression:**
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

**லாச்சப்பலில்**
**ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு**
**பாலன்:**
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

# இலங்கையை முற்றுகையிட்டுள்ள

# 7 நாடுகளின் போர்க் கப்பல்கள்!



The Uss Nimitz
Carrier Strike Group

இலங்கையின் கடற்பிராந்தியத்துக்குள் நவம்பர் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் 7 நாடுகளின் போர்க் கப்பல்கள் வருகைதரவுள்ளன. போர் நிறைவடைந்த பின்னர் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் போர்க் கப்பல்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளன. பல்வேறு நாடுகளின் போர்க் கப்பல்கள் நல்லெண்ணப் பயணம் என்ற போர்வையில் இலங்கைக்கு அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில் மிகக் குறுகிய காலத்தினுள் 7 நாடுகளின் 10ற்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் சிறீலங்காவிற்கு கடந்த வாரமும் இவ்வாரமும் படையெடுத்துள்ளன.

பங்களாதேஷ், இந்தோனேசியா, தென்கொரியா, அமெரிக்கா, இந்தியா, சீனா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் போர்க் கப்பல்கள் இவ்வாறு இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளன. இதில் பங்களாதேஷ், இந்தோனேசியா, தென்கொரியா போர்க் கப்பல்கள் வந்து சென்றுள்ளன. அமெரிக்க போர்க் கப்பல்கள் இன்னமும் நங்கூரமிட்டுள்ளன. இந்தியப் போர்க் கப்பல்கள் 2ம் திகதியும், பாகிஸ்தானுக்குச் சொந்தமான போர்க் கப்பல் 7ம் திகதியும், சீன போர்க் கப்பல் 10ம் திகதியும் கொழும்புத்துறைமுகத்தை வந்தடையவுள்ளன.

## இந்தோனேசியா

இந்தோனேசியக் கடற்படையின் இலகு ரக பல நோக்குப் போர்க்கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணமாக வந்து சென்றுள்ளது. கடந்த 19ம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பல் மூன்று நாட்கள் தரித்து நின்றுள்ளது. கே.ஆர்.ஐ பங் ரோமோ என்ற இந்தப் போர்க்கப்பலில் 107 இந்தோனேசியக் கடற்படையினர் பணியாற்றுகின்றனர். கொழும்புத் துறைமுகத்தின் தரித்து நின்றபோது சிறீலங்காக் கடற்படையினருடன் இணைந்து இந்தோனேசியக் கடற்படையினர் பயிற்சிகளிலும் நிகழ்வுகளிலும் பங்கேற்றனர். அத்துடன், கடந்த 19ம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்தோனேசிய போர்க்கப்பல் புறப்பட்டுச் சென்றுள்ள நிலையில், இந்தோனேசியாவுக்குச் சொந்தமான இன்னொரு போர்க் கப்பல் 4ம் திகதி கொழும்புத் துறைமுகத்திற்கு வரவுள்ளது.

## பங்களாதேஷ்

பங்களாதேஷ் நாட்டுக்குச் சொந்தமான Somudra Avijan என்ற போர்க் கப்பல், கொழும்புத் துறைமுகத்தை கடந்த 25ம் திகதி வந்தடைந்தது. பங்களாதேஷ் போர்க் கப்பல் நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாக கொழும்புத் துறைமுகத்திற்கு வந்து சென்றுள்ளது. கொழும்புத் துறைமுகத்தை இக்கப்பல் வந்தடைந்த போது, சிறீலங்காக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர். அதில் உள்ள கடற்படையினர் சிறீலங்காக் கடற்படையினருடன் இணைந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

## தென் கொரியா

தென்கொரிய போர்க் கப்பல்கள் இரண்டு கடந்த 26ம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன. தென்கொரியக் கடற்படையின் நாசகாரி போர்க்கப்பல் ஒன்று, எண்ணெய் விநியோக துணைக்கப்பலுடன் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. தென்கொரிய கடற்படையின் நாசகாரி கப்பலான, காங் காம் சான், எரிபொருள் விநியோக துணைக் கப்பலான, ஹவாசியோனுடன் இணைந்து நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாக கொழும்பு வந்து சென்றுள்ளது. இந்தப் பயணத்தின்போது அதில் பயணம் செய்த சுமார் 630 தென்கொரிய கடற்படையினர் சிறீலங்காவில், தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றதாக தென்கொரிய தூதரகம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்கா

32 வருடங்களின் பின், அமெரிக்க விமானம் தாங்கிப் போர்க் கப்பல் ஒன்று இலங்கைக்கு வந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் Uss Nimitz என்ற மிகப் பெரிய போர் கப்பல் கடந்த 28ம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இந்தக் கப்பல், அதன் துணைக் கப்பல்களான அதிவேகப் போர்க் கப்பலான யுஎஸ்எஸ் பிரின்சிரோன், நாசகாரிக் கப்பல்களான யுஎஸ்எஸ் ஹவார்ட், யுஎஸ்எஸ் சூப், யுஎஸ்எஸ் பின்க்னி, யுஎஸ்எஸ் கிட் ஆகியவற்றுடன் வந்துள்ளது. இக் கப்பல்கள் 31ம் திகதி செவ்வாக்கிழமை வரை இலங்கையில் தரித்து நிற்கவுள்ளது. சிறீலங்கா – அமெரிக்க கடற்படையினர் கப்பல் தயார் நிலை ஒத்துழைப்பு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சிறீலங்கா – அமெரிக்க கடற்படைகளுக்கிடையிலான உறவுகளின் வளர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில், இந்தப் போர்க்கப்பல்கள் கொழும்பு வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இலங்கைக்கு ஒரே நேரத்தில் அதிகளவு அமெரிக்கப் போர்க்கப்பல்கள் பயணம் மேற்கொள்ளும் முதல் சந்தர்ப்பம் இதுவென்றும் கூறப்படுகிறது.

1985ம் ஆண்டுக்குப் பின், முதன்முதலாக ஒரு விமானம் தாங்கிக் கப்பல் இலங்கைக்கு வருவதன் மூலம், அண்மைக் காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கத்தை வெளிக்காட்டுவதாக அமைகிறது என்றும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. அத்துடன், விமானந் தாங்கி போர்க்கப்பலுக்கு சிறீலங்காவின் அமைச்சர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் அழைத்துச் செல்லப்பட்டு சுற்றிக் காண்பிக்கப்பட்டனர். கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய, அமெரிக்க கடற்படையின் சீ ஹோக் உலங்குவானூர்தி மூலம், அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப், அமைச்சர் மகிந்த சமரசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசம், கூட்டுப்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகளும், சில ஊடகவியலாளர்களும், யுஎஸ்எஸ் நிமிட்ஸ் விமானந்தாங்கி போர்க்கப்பலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சுமார் 23 மாடிக் கட்டடத்தின் உயரத்தைக் கொண்ட இந்தக் கப்பலின் நீளம் 333 மீற்றர்கள். ஐயாயிரம் பேர் பயணிக்கக்கூடிய இந்தக் கப்பலின் சமையலறையில், நாளொன்றுக்கு பதினெட்டாயிரம் பேருக்கு உணவு சமைக்க முடியும். இந்தக் கப்பலின் படையினர்கள் இலங்கையின் தொண்டு நிறுவனங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் ஆகியவற்றில் நடைபெறும் சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், அமெரிக்கப் போர்க்கப்பல்களின் அணி கொழும்புப் பயணத்தின் மூலம், சிறீலங்காவின் பொருளாதாரத்துக்கு 1.54 பில்லியன் ரூபா மேலதிகமாக கிடைக்கும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. கப்பல்களுக்கான விநியோக கொள்வனவு, ஆயிரக்கணக்கான அமெரிக்க மாலுமிகள் சிறீலங்காவின் தரைக்கு வருவதன் உள்ளூர் வர்த்தகத்துக்கு வருவாயை ஈட்டித் தந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## இந்தியா

இந்தியக் கடற்படையின் ஐஎன்ஸ்எஸ் சுற்லேஜ் என்ற ஆய்வுக் கப்பலும் கடந்த வாரம் கொழும்பு வந்துள்ளது. சிறீலங்கா கடற்படையினருடன் இணைந்து சமுத்திரவியல் ஆய்வை மேற்கொள்வதற்காக, இந்தக் கப்பல் கொழும்பு வந்துள்ளது. ஐஎன்ஸ்எஸ் சுற்லேஜ் டிசெம்பர் 21ம் நாள் வரை இலங்கைக் கடற்பரப்பில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் என்று கூறப்பட்டுள்ளது. இந்திய – சிறீலங்காக் கடற்படையினரின் கூட்டு சமுத்திரவியல் ஆய்வின் இரண்டாவது கட்டம் இது. தெற்கு மற்றும் மேற்கு கடற்பரப்புகளில், ஆரம்பமாகியுள்ள இந்த ஆய்வு, டிசெம்பர் 21ம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது. கடற்படையின் ஆய்வுப் பிரிவினர், இந்திய கடற்படைக் கப்பலில் உள்ள நவீன வசதிகளைப் பயன்படுத்தி, ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் இந்திய – சிறீலங்காக் கடற்படையினர் மேற்கொள்ளும் இரண்டாவது கட்ட சமுத்திரவியல் ஆய்வு இதுவாகும். ஏற்கனவே, ஐஎன்எஸ் தர்ஷக் என்ற இந்தியக் கடற்படையின் ஆய்வுக் கப்பலைப் பயன்படுத்தி முதலாவது கட்ட ஆய்வு கடந்த மே மாதம் மேற்கொள்ளப்பட்டது. இது ஒன்றரை மாதங்கள் நீடித்திருந்தன. இதேவேளை, நவம்பர் மாதம் 2ம் திகதி இந்தியாவின் இரண்டு போர்க் கப்பல்கள் இலங்கை வரவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தியாவிடம் இருந்து கொள்வனவு செய்துள்ள புதிய கடற்படை பாதுகாப்பு கப்பல் கடந்த 21ம் திகதி சிறீலங்காவந்தடைந்துள்ளது. இக் கப்பலுக்கு சுரக் ஷா என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இந்தியாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் இரண்டாவது பாதுகாப்பு ஆயுதக் கப்பல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னரும் இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 4ம் திகதி இந்தியாவிடம் இருந்து வருண என்ற கடல் பாதுகாப்பு ரோந்துக்கப்பலை சிறீலங்காக் கடற்படை கொள்வனவு செய்திருந்தது. அதேபோல் 2010ம் ஆண்டிலும் இந்தியாவிடம் இருந்து சிறீலங்காக் கடற்படை சயுர என்ற போர்க்கப்பலை கொள்வனவு செய்திருந்தது. இந்நிலையில் குறுகிய காலத்தில் இந்தியாவிடம் இருந்து சிறீலங்கா கொள்வனவு செய்யும் மூன்றாவது போர்க் கப்பல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஈழமுரசு

# தமிழர்கள் தேடி அலையும் நீதியும் ஐ.நா. விசேட நிபுணரின் வருகையும்

இலங்கைத் தீவு முழுவதும் 14 நான்கு நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்ட உண்மை, நீதி, நட்ட ஈடு மற்றும் மீள் நிகழாமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணர் பப்லோ டி கிரீப்பின் தனது பணிகளை முடித்துக்கொண்டு நாடு திரும்பி விட்டார். ஏற்கனவே நான்கு தடவைகள் அவர் இலங்கை வந்து சென்றிருந்தபோதும், இம்முறைப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் பட்டது. ஏனெனில் சிறீலங்காவிற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை வழங்கிய கால அவகாசத்தில் என்ன என்ன நடைபெற்றுள்ளன, எவை இன்னமும் நடைபெறவில்லை என்பனபோன்ற பல்வேறு விடயங்களை இவர் ஆராயவிருந்ததால் குறிப்பாகத் தமிழர்கள் இவரின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இலங்கைத் தீவில் நின்றிருந்த கடந்த 14 நாட்களில் இனஅழிப்புப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் உட்பட வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றிருந்தார். பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் உண்மை நிலைமைகளை அறிந்துகொண்டார். அத்துடன், சிறீலங்காவின் மாத்தறை உட்பட அங்குள்ள மேலும் சில பிரதேசங்களிலும் தனது பணிகளை அவர் முன்னெடுத்திருந்தார்.

அத்துடன், சிறீலங்காவின் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர், தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள் அமைச்சர், சிறைச்சாலை மறுசீரமைப்பு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், இந்துசமய விவகார அமைச்சர், நீதி அமைச்சர், கல்வி அமைச்சர், ஜனாதிபதி செயலாளர், பாதுகாப்பு செயலாளர், சபாநாயகர், பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், இராணுவத்தளபதி, கடற்படை தளபதி, விமானப்படைத் தளபதி, தேசிய புலனாய்வு சேவை தலைமை அதிகாரி, காவல்மா அதிபர், சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான அதிகாரசபையின் தலைவர், நல்லிணக்கத்தை கூட்டிணைப்பதற்கான செயலகத்தின் செயலாளர், மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், காவல்துறை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், இராஜதந்திர முக்கியஸ்தர்கள், கல்வியாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், பாதிக்கப்பட்டவர்கள், வடக்கு, மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்கள் என இலங்கையில் சந்திக்கவேண்டிய அத்தனை தரப்பினரையும் சந்தித்து பேச்சுக்களை நடத்திவிட்டே அவர் தகவல்களைப் பெற்றுக்கொண்டு நாடு திரும்பியிருக்கின்றார்.

தனது பயணத்தின் நிறைவில் அவர் நாடு திரும்புவதற்கு முன்பதாக, கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்தித்து தனது மதிப்பீடுகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்தபோது வெளியிட்ட கருத்துக்கள் சிங்கள தேசத்தை சீற்றமடைய வைத்துள்ள அதே வேளை, தமிழ் மக்களை சற்று ஆறுதலடைய வைத்திருக்கின்றது என்றால் அது மிகையில்லை.

19வது திருத்தச்சட்டம், நல்லிணக்க பொறிமுறைக்கான ஆலோசனகளை முன்னெடுப்பதற்கான செயலணி உருவாக்கம், காணாமல்போனோருக்கான அலுவலகம் அமைக்கும் சட்டம் போன்ற சிறீலங்காவின் சில முன்னெடுப்புக்களைப் பாராட்டிய அவர், அவற்றுக்கும் மேலாக ஏராளமான பரிந்துரைகளை முன்வைத்ததன் மூலம் சிறீலங்கா செய்யாதுள்ள பல விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

- பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக நீக்குவதுடன் அதற்குப் பதிலாக கொண்டுவரப்படும் சட்டம் சர்வதேச தரங்களைப் பின்பற்றுவதாக அமைய வேண்டும்.
- பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விடயங்களை உடனடியாக மீளாய்வு செய்யவேண்டும்.
- இராணுவத்தினால் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவதை நிறுத்தவேண்டும் என்பதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்ற இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கவேண்டும்.
- இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள காணித் தொடர்பான ஒரு வரைபடத்தை உடனியாக தயாரித்து, காணி விடுவிப்பு தொடர்பான ஒரு நேர அட்டவணையை வெளியிடவேண்டும்.
- மனித உரிமை காப்பாளர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் முக்கியமாக பெண்கள் ஆகிய தரப்பினர் மீதான பாதுகாப்பு தரப்பின் கண்காணிப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.
- கடந்த காலங்களில் செயற்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் (வெளியிடப்படாதவை) உடனடியாக வெளியிடப்படவேண்டும்.
- சர்வதேச மனித உரிமை தரங்களை உள்நாட்டில் நிறைவேற்றவேண்டும். குறிப்பாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமைத் தொடர்பாக சர்வதேச சாசனத்தை சிறீலங்கா நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்.

என்பன உட்பட ஏராளமான பரிந்துரைகளை சிறீலங்காவிற்கு வழங்கியுள்ள அவர், உள்நாட்டில் நம்பகரமான மற்றும் சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுத்து நீதியை நிலைநாட்டாவிடின் சர்வதேசத்தின் நீதியை தேடுவதற்கான முயற்சிகள் மிகவும் வலுவானமுறையில் இடம்பெறும் என்பதை அனைவரும் மனதில் கொள்ளவேண்டும் என்றும் எச்சரித்திருக்கின்றார். இந்த எச்சரிகையை அவர் விடுவதற்கு பிரேசிலில் சிறீலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதி மீது தொடரப்பட்ட வழக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

'இனப்படுகொலை' என்ற பாரிய குற்றச்சாட்டில் இருந்து சிறீலங்காவைப் பாதுகாத்து, வெறும் 'போர்க் குற்றம்' என்ற சிறிய வரையறைக்குள் கொண்டுந்து அவர்களைப் பாதுகாத்துவிட உலகம் விரும்புகின்றது. ஆனால், அந்த சிறிய வரையறைக்குள்ளும் வந்துவிட மாட்டோம் என்று சிறீலங்கா அடம்பிடிக்கின்றது. சிறீலங்கா ஆட்சியாளர்களும், மதவாதிகளும், பேரினவாதக் கட்சிகளும் இராணுவத்தை நீதிமன்றில் நிறுத்தக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றன. இராணுவத்தை நீதிமன்றில் நிறுத்தாமல் போர்க் குற்ற விசாரணைகளை முன்னெடுக்க முடியாதென்பது உலகின் கருத்து. இந்நிலையில், இராணுவத்தை நீதிமன்றின் முன் கொண்டுவந்து நிறுத்தும் அழுத்தத்தை பிரயோகிப்பதற்காகவே, இராணுவத்தினரை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரமாட்டோம் எனக்கூறுவது சுயாதீன நீதித்துறையின் பண்புகளை மீறுவதாக அமைந்திருக்கின்றது என்றும் அண்மையில் பிரேசில் நாட்டில் முன்னாள் இராணுவத் தளபதி ஒருவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்த செயற்பாடானது நீதியானது உள்நாட்டில் நிலைநாட்டப்படாவிடின் சர்வதேச மட்டத்திலாவது பெறப்படும் என்பதற்கான ஒரு சான்றாகும் என்றும் விளக்கமளித்து அவர் சிறீலங்காவிற்கு சர்வதேச விசாரணை என்ற அந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார்.

ஆனால், இவரது கருத்துக்களை கேட்கவேண்டிய அல்லது அவற்றை நடைமுறைப் படுத்தவேண்டிய தேவை சிறீலங்காவிற்கு இல்லை. 'ஐ.நா. விசேட நிபுணர்களின் பரிந்துரைகள் சட்டத்தினால் பிணைக்கப் பட்டவை அல்ல' என்பதையும் விசேட நிபுணர் பப்லோ டி கிரீப்பின் தனது வாயாலேயே கொழும்பில் தெரிவித்திருக்கின்றார். எனவே, இவரது கருத்துக்களைக் கேட்டு சிங்களம் கொதித்துக் கொந்தளித்தாலும் இவற்றை ஒருபோதும் நடைமுறைப்படுத்தப் போவதில்லை.

ஆனால், ஒன்றே ஒன்று மட்டும் உண்மை. அது தமிழர்களுக்கு உரிய நீதி கிடைக்கவேண்டும் என்றால் சிங்கள தேசத்தை சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்தாமல் அது சாத்தியமாகப்போவதில்லை என்பதுதான் அது. தமிழ் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களே ஐ.நா. விசேட நிபுணர் பப்லோ டி கிரீப்பை இலங்கைக்கு வருகைதரவேண்டிய நிலைமையை உருவாக்கியது. எனவே, சர்வதேசம் முழுமையாகத் தலையிடுவது, தமிழ் மக்கள் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாகவே சாத்தியப் படும்.

# விடுவிக்கப்பட்ட போராளிகளின் விபரம் திரட்டுகிறது சிறீலங்கா முன்னாள் போராளியை நாடு கடத்த பிரித்தானியா முடிவு



வவுனியா, கனகராயன்குளம் பகுதியிலுள்ள சிறீலங்கா தடுப்புச் சிறை சித்தரவதை முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்ட புனர்வாழ்வு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் முன்னாள் போராளிகளின் விபரங்களை சிறீலங்காக் காவல்துறையினர் திரட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

2017ம் ஆண்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவருடைய விபரங்களை பெறுவதற்காக கடந்த 27ம் திகதி முற்பகல் உறவினருக்கு கனகராயன்குளம் காவல் நிலையத்திலிருந்து தொலைபேசியில் அழைப்பு எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது குறித்த முன்னாள் போராளி எங்குள்ளார்? என்ன தொழில் புரிகின்றார்? திருமணமாகியுள்ளதா? போன்ற விபரங்களை கேட்டுப் பெற்றுள்ளதாக முன்னாள் போராளியின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு முன்னாள் போராளிகளின் விபரங்களை சந்தேக கண்ணோட்டத்துடன் விபரங்களைப் பெற்றுவருவது தமக்கு தர்ம சங்கடங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் முன்னாள் போராளியின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் கனகராயன்குளம் பகுதியில் பல இடங்களிலும் முன்னாள் போராளிகளின் விபரங்களை பல கோணங்களில் காவல்துறையினர் சிவில் உடையில் சென்று திரட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

நிலைமை இவ்வாறிருக்க, மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ள பிரித்தானியாவில் புகலிடம் கோரியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரை நாடு கடத்த பிரித்தானியா முடிவு செய்துள்ளது. அரச தலைமைச் சட்டத்தரணி முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கையில், கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் உளவியல் சித்திரவதையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தமக்குப் பிரித்தானியாவில் சிகிச்சை பெற அனுமதி அளிக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால், பிரித்தானியா புகலிடம் வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்களின் அகதிக் கோரிக்கை விண்ணப்பத்தை நிராகரித்து, அவர்களை இலங்கைக்கு நாடுகடத்த முடியும் என்று ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நீதிபதிகள் ஆலோசனைக் குழுவின் சட்டத்தரணி ஒருவர், இந்த ஆலோசனையை வழங்கி இருப்பதாக சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது. பிரித்தானியாவில் அகதி அந்தஸ்த்து கோரியிருந்த இலங்கையர் ஒருவர் நாடுகடத்தப்படுவதற்கு எதிராக தொடுத்திருந்த வழக்கின் நிமித்தம், இந்த ஆலோசனை கோரப்பட்டிருந்தது.

இதன்படி இலங்கையில் துன்புறுத்தல்கள், மருத்துவ நிராகரிப்புகள், உயிராபத்து என்பன தொடர்வதாக கூறப்பட்டாலும், விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்களது அகதி உரிமைக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று குறித்த சட்டத்தரணி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த ஆலோசனையின் அடிப்படையிலேயே குறிப்பிட்ட முன்னாள் போராளிக்கு அகதிளுக்கான தீர்ப்பு வழங்கப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## திருடர்களின் தொல்லை

யாழ். தென்மராட்சி தெற்கு நாவற்குழி முதல் அறுகுவெளி வரையான பகுதிகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக உரிய தரப்பினருக்கு மக்கள் முறையிட்ட போதிலும் கண்காணிப்பு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லையெனவும் தெரிவித்தனர்.

இப் பகுதியிலுள்ள உள்ள நாவற்குழி, தச்சன்தோப்பு, மறவன்புலோவு, கோவிலாக்கண்டி, தனங்கிளப்பு, அறுகுவெளி போன்ற இடங்களில் முகமூடி அணிந்த நிலையில் உந்துருளில் வருவோர் வீடுகளுக்குள் புகுந்து மக்களை ஆயுத முனையில் அச்சுறுத்தி பணம் நகை உள்ளிட்ட பொருட்களை திருடிச் செல்கின்றனர். இதனால் தாம் தினமும் இரவு வேளைகளில் அச்சத்துடன் இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

## படையினருக்கு சந்தர்ப்பம்!

படைப்பிரிவுகளில் இருந்து தப்பிச் சென்ற சிறீலங்கா இனப்படுகொலை இராணுவச் சிப்பாய்களுக்கு சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் சந்தர்ப்பம் வழங்கியுள்ளார். கடந்த 23ம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 15ம் திகதி வரையான காலப் பகுதிக்குள் தப்பிச் சென்றவர்கள் சரணடைந்தால், அவர்கள் சட்ட ரீதியாகப் படைகளில் இருந்து விடுவிக்கப்படுவர் என்றும் அறிவித்துள்ளார்.

## 25,624 பேர் சாவு!

கடந்த பத்தாண்டுக் காலத்தில் விபத்துக்களால் மாத்திரம் 25 ஆயிரத்து 624 பேர் சாவடைந்துள்ளனர். போர்க் காலத்தில் கூட இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கவில்லை. இவ்வாறு சிறீலங்கா போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். நாடாளுமன்றத்தில், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன் போது அவர் ஆண்டு வாரியாக இடம்பெற்ற விபத்துக்களையும், ஏற்பட்ட உயிரிழப்புக்களையும் குறிப்பிட்டார். இதில் 2016ம் ஆண்டு 39 ஆயிரத்து 200 விபத்துக்களும் அதன் காரணமாக 3 ஆயிரத்து 20 உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளதே அதிகமாக விபத்துக்களும், உயிரிழப்புக்களுமாக இருந்துள்ளது.

## நகை கடத்தலில் சிப்பந்தி!

சட்டவிரோதமான முறையில் தங்க நகைகளைக் கடத்தி வர முற்பட்ட சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானச் சிப்பந்தி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஜெகத்தாவில் இருந்து சிறீலங்கா வந்த விமானத்தில் பணிபுரிந்த ஐம்பது வயதுடைய இவர், விமான நிலையத்தை விட்டு வெளியேற முயற்சித்தார். எனினும், வழக்கமாக நடத்தப்படும் பரிசோதனைகளின்போது இவர் மீது சந்தேகம் கொண்ட சிறீலங்கன் சுங்கத் துறையினர் அவரை முழுமையாகப் பரிசோதனை செய்தனர். அப்போது, இவரது உடலிலும் விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஒரு அங்கியிலும், காலில் அணிந்திருந்த விசேட பட்டியிலுமாக மொத்தமாகச் சுமார் ஐந்தரைக் கிலோ தங்க நகைகளை இவர் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட நகைகளின் பெறுமதி இரண்டரைக் கோடி ரூபாவுக்கும் அதிகம்.

# அழியும் தமிழர் தேசம் 10

## வவுனியாவில் தமிழர்களின் பிரதேசங்களுக்கு சிங்களப் பெயர் சூட்டி சிங்களவர்களுக்கு வழங்கிய மைத்திரி!

வவுனியாவுக்கு கடந்த வாரம் வருகை தந்த சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன, தமிழர்களது பிரதேசங்களைக் கபளீகரம் செய்து, அதற்கு சிங்களப் பெயரிட்டு அந்தப் பிரதேசங்களை தமிழர்களிடம் இருந்து பறித்து சிங்கள மக்களுக்கு வழங்குவதான உறுதிமொழிகளை வழங்கியுள்ளதாக ஈ.பி.ஆர்.எல.எப். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரமேச்சந்திரன் குற்றம்சாட்டியுள்ளார். அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் தமிழ் பிரதேசங்களை சிங்களப் பிரதேசமாக்கும் அரசின் சூழ்ச்சிக்குத் துணைபோகின்றனர் என்றும் அவர் பகிரங்கமாகக் குற்றம்சாட்டினார். கூட்டமைப்பு என்கின்ற பேரில், தமிழரசுக் கட்சி தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு, இவ்வாறான விடயங்களைக் கையாள்வதாகவும் அவர் கூறினார்.



அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது, காணாமல் போனவர்கள், அரசியல் கைதிகளுடைய விடயங்களில் எந்த வித மாறுதல்களும் இல்லாது அரசு தனது முடிவில் உறுதியாக இருக்கின்ற நிலமை கண்டிக்கப்படவேண்டியது. அரசு கூறுகின்ற நல்லெண்ணங்கள் எல்லாம் அரசாலேயே குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன. புதிய, நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற அரசு கூட எந்தவிதமான மாற்றங்களையும் செய்யயாமல், மகிந்த எவ்வாறு தமிழ் மக்களுக்கு மாறான செயற்பாடுகளைச் செய்தாரோ, அதே விடயங்களுக்காக உறுதி வழங்கும் நிகழ்வையே செய்திருந்தது.

அந்த வைபவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் கலந்து கொண்டமையானது நிச்சயமாக இவர்கள் எல்லோரும் சேர்ந்து தமிழர் பூமியை சிங்களப்பூமி ஆக்குவதற்கு அரசுடன் உடந்தையாகப் போகின்றார்களா என்ற விமர்சனங்களை எழுப்பியது என்றார்.

## தமிழர் வாழ்ந்த பகுதியில் 650 சிங்கள குடும்பங்கள் குடியேற்றம்

திருகோணமலை சலப்பையாறு பகுதியில், அநுராதபுர மாவட்டத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட 650ற்கு மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள், அரசாங்கத்தினால் குடியேற்றப்பட்டுள்ளன. சலப்பையாறு பிரதேசம், தமிழ்ப்பேசும் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த பகுதியாகும். இங்கு யான் ஓயா திட்டம் என்ற போர்வையில், சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோமரங்கடவெல என்று சிங்களப் பெயர் சூட்டப்பட்டுள்ள, குமரேசன்கடவை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, யான் ஓயாவுக்கு அருகே கல்லப்பத்தை பிரதான வீதியை அண்டியே இந்த சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுமதியுடனேயே இந்த சிங்களக் குடியேற்றத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 650ற்கும் அதிகமான சிங்களக் குடும்பங்கள், அநுராதபுர மாவட்டத்தில் இருந்து கொண்டு வந்து இங்கு குடியேற்றப்பட்டுள்ளன.

அரசின் அமைச்சர்கள், அதிகாரிகளின் துணையுடன் இடம்பெற்றுள்ள இந்தக் குடியேற்றத் திட்டத்தில், நிரந்தர வீடுகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்ப்பேசும் மக்களின் இனவிகிதாசாரத்தைக் குறைக்கும் நோக்கில் இந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதனால், திருகோணமலை மாவட்டத்தின் இனவிகிதாசாரம் பெரிதும் மாற்றமடையும் ஆபத்து இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### விபத்தில் ஒருவர் உயிரிழப்பு இருவர் படுகாயம்

வாழைச்சேனை பாசிக்குடா பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்துள்ளனர். பாசிக்குடா பிரதேசத்தில் இருந்து வாழைச்சேனை நோக்கி வந்த இரண்டு உந்துருளிகள் ஒன்றன் பின் ஒன்று மோதியதில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் கிண்ணையடி நாகதம்பிரான் ஆலய வீதியைச் சேர்ந்த செல்வகுமார் புவிதன் வயது 18 என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார். இதில் சுங்கான்கேணி வம்பியடி வீதியைச் சேர்ந்த யோகராசா கிரிசாந்தன் (19 வயது), பிறைந்துறையைச் சேர்ந்த எம்.நவாஸ் ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### மனைவி கொலை - கணவன் கைது

பலத்த தீக்காயங்களுடன் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண், சிகிச்சை பலனின்றி கடந்த 22ம் திகதி உயிரிழந்துள்ளார். நீர்கொழும்பில் வசித்துவந்த மூர்த்தி லோகேஸ்வரி (வயது 34) என்ற பெண்ணே, இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது கணவனாலேயே இவர் பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்டார் என்று சந்தேகிக்கப்படுகிறது. குறித்தப் பெண்ணை, அவரின் கணவரான ஜுட் குமார (வயது 41) என்பவர், தொடர்ச்சியாகச் சித்திரவதைக்கு உள்ளாக்கி வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், கடந்த மாதம் 30ம் திகதி, மனைவியுடன் ஏற்பட்ட தகராறின் போது, மனைவி மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்தார் என்று கூறப்படுகிறது. இதையடுத்து, அயலவர்களால் தீயணைக்கப்பட்டு, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

### கிணற்றில் இருந்து இளைஞனின் சடலம் மீட்பு

வவுனியாவில், கிணற்றிலிருந்து இளைஞன் ஒருவரின் சடலத்தை கடந்த 27ம் திகதி மீட்டுள்ளனர். வவுனியா – உக்கிளாங்குளம், பிள்ளையார் கோவில் வீதியில் வசித்து வந்த தியாகலிங்கம் ரகுவரன் (26) என்ற இளைஞன் கடந்த மூன்று தினங்களுக்கு முன் காணாமல் போயுள்ளார். இது குறித்து வவுனியா சிறீலங்காக் காவல் நிலையத்தில் முறைப்பாடும் அளிக்கப்பட்டிருந்தது. வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்பினால் மனமுடைந்த நிலையில் ரகுவரன் இருந்ததாகவும் அவரது குடும்பத்தினர் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், ரகுவரனின் வீட்டுக் கிணற்றிலிருந்தே அவரது சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### பணத்தை மீளப்பெறச் சென்றவர் படுகொலை

குடும்பஸ்தர் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் வவுனியா, குடியிருப்பு பூங்கா வீதியில் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, வாரிக்குட்டியூரை சேர்ந்த கனகராசா (56) என்பவர் குடியிருப்பு பூங்கா வீதியில் அமைந்துள்ள கடையொன்றில் பணிபுரியும் வர்த்தகருக்கு கொடுத்த பணத்தினை மீளப்பெற சென்றுள்ளார். அந்த சமயத்தில் குறித்த இருவருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறி கத்திக்குத்தில் முடிவடைந்தது. இதன் போது பணத்தினை மீளப்பெறச் சென்ற கனகராசா சம்பவ இடத்திலிலேயே உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை வவுனியா காவல்துறை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


### மீன்கள் கடித்ததால் மீனவர் உயிரிழப்பு

காக்கைதீவுக் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர் மயக்கமடைந்த நிலையில் உயிரிழந்தார். ஜெலி மீன்கள் கடித்ததனால் பாதிக்கப்பட்டே அவர் உயிரிழந்தார் என இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் தெரிவித்தார். இந்தச் சம்பவம் கடந்த 28ம் திகதி அதிகாலை காக்கைதீவுக்கடலில் இடம்பெற்றது. சுதுமலை தெற்கு, சாவக்கட்டுப் பகுதியைச் சேர்ந்த தெய்வேந்திரம் சாந்தராஜா (வது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர். காக்கை தீவுக் கடலில் இருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தில் பூநகரிக் கடலில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது அழுக்கு நீரில் இறங்கியபோது அவருக்கு மீன்கள் கடித்துள்ளன. இதனையடுத்து அவருக்கு நெல்சுவலி ஏற்பட்டடு மயக்கமடைந்தார். உடன் இருந்த மீனவர்கள் அரை கரைசேர்த்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்தனர். எனினும் அவர் உயிழந்துள்ளார்.

### கழுத்தறுத்துக் கொல்லப்பட்ட தாயும் மகனும்

ஏறாவூர், புன்னக்குடா பகுதியிலுள்ள வீடொன்றில் தாயும் மகனும் கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலங்களாக கடந்த 17ம் திகதி மீட்கப்பட்டனர்.

தொடர்ச்சி 22ம் பக்கம்



CITYEXPRESS
We Move the Businessclass

சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# ஊடகங்களை அச்சுறுத்தும் சிறீலங்காவின் ஏவல் நாய்

# கிழியும் முரளியின் முகத்திரை!

சோழ கரிகாலன்



தமிழர்களை அச்சறுத்துவதவும், விடுதலை உணர்வுள்ளவர்களை வேட்டையாடவும், இனப்படுகொலை செய்யவும், சிங்களப் பேரினவாதம், என்றும் தமிழினத் துரோகிகளையும், தமிழ் ஏவல் நாய்களையும் பயன்படுத்தி வந்தது என்பது கசப்பான வரலாறு. இது இப்பொழுதும் வடமாகணத்தில், முக்கியமாக யாழ்ப்பாணத்தில் நடந்து வருகின்றது. எங்கு மீண்டும் தமிழ்த்தேசிய விடுதலை உணர்வு முகிழ்த்து விடுமோ என்ற அச்சம் சிங்களப் பேரினவாதத்தை அச்சம் கொள்ள வைத்துள்ளது. கிட்லர் தனக்கு எதிரான பேராட்டவாதிகள், பொது மக்கள் போன்றவர்களை, மக்களிற்குள் மக்களாக உலவவிட்டு, காட்டிக்கொடுப்பவர்களின் தகவல்களின் மூலம், தனது 'கெஸ்தெப்போ (Gestapo)' படையினரால் அழித்து வந்தான். சிங்களப் பேரினவாத அரசு தனக்கெதிரான கருத்துக்களை அல்லது போராட்டங்கள் செய்பவர்களை, கெஸ்தெப்போ போன்ற தமிழினத்துரோக ஒட்டுக் குழுக்களின் மூலம் அச்சுறுத்தியும் அழித்தும் வருகின்றது.

தமிழினத் துரோகிகளை ஏவல் நாய்களாக உபயோகித்து, வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கீழ் பணிபுரியும், அரசாங்கப் பணியாளர்களையும், ஊடகங்களையும், சிங்களப் பேரினவாத அரசின் உளவுத்துறையினர் மிரட்டியும் அச்சுறுத்தியும் வருவது அம்பலமாகி உள்ளது. இதற்கான பிரதான ஏவல் நாயாக, கைக்கூலியாக, இனத்துரோகியாக, முப்பது வயதுடைய 'முரளி' எனப்படும் சிவராசா சிவகுலன் இயங்கிவருகின்றான். இவன் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் வரதர் அணியில் செயற்பட்டு, பின்னர் வடமாகாண சிங்கள ஆளுநரின் செயலகத்தின் சுகாதாரத் துப்பரவுப் பிரிவில் 'சுகாதாரப் பணியாளர்' என்ற போர்வையில் இணைந்துள்ளான்.

முரளி ஏற்கனவே, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறீ, 2005 இலிருந்து 2009 வரை யாழ்ப்பாணத்தின் இராணுவத் தளபதியாக இருந்த சமயத்திலேயே, காட்டிக்கொடுப்புக்களில் ஈடுபட்டு இயங்கி வந்துள்ளான். இவனைச் சிறீலங்காவின் பராமிலிட்டரியின் பயிற்சிக்கும் சந்திரசிறீ அனுப்பி வைத்திருந்துள்ளார். அங்கு சிறீலங்காவின் உளவுப் படை இவனிற்குப் பயிற்சிகளை

உளவுப் பிரிவினரால் பயிற்றுவிக்கப்பட்ட முரளி மற்றும் அவரது அணி, வெளிநாட்டில் இருந்து விடுமுறைக்காக வரும் தமிழர்களையும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது. இவர்களின் செயற்பாடுகளில் சந்தேகங்கள் ஏற்பட்டால், அல்லது இவர்களின் முன்னைய செயற்பாடுகள் தொடர்பாக தகவல்கள் கிடைக்கப்பெற்றாலோ, அவர்களின் மீதான அச்சுறுத்தல்கள் மேற்கொண்டு தாக்குதல் அல்லது படுகொலைகளை நடாத்தப்படுகின்றன.






மீண்டும் வழங்கி உள்ளது. அதன் பின்னர் சந்திரசிறீ வடமாகாணத்தின் ஆளுநராகப் பதவியேற்றவுடன், இவனை மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, பலாலி இராணுவ முகாமில் இருந்து நேரடியாகக் கையாண்டு வந்துள்ளார்.

இனத்துரோகி முரளி, மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவின் மிகவும் நம்பிக்கைக் குரியவனாக மாறியதுடன், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மகிந்த இராஜபக்ச முகாமின் நம்பிக்கைக்குரியவனாகவும் மாறினான். சிறீலாங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதியின் தேர்தற்பிரச்சாரப் பிரிவின் தலைவராக ரெஜனால்ட் கூரே இயங்கிய போது, ஹத்துருசிங்கவினால், முரளி கூரேக்கு அறிமுகப்படுத்தப்பட்டான். அதன் பின்னர் அவருடன் இணைந்து பல காட்டிக்கொடுப்புக்களைச் செய்து வந்துள்ளான்.

கடந்த வருடம் மறவன்புலவில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிகுண்டுகளின் விவகாரத்தில், முரளியின் பங்கு பெரிதாக இருந்துள்ளது. இந்த விடயத்தில் முரளி சிக்கி விடாதிருக்க, இதே ரெஜினால்ட் கூரே காப்பாற்றியிருந்தும் உள்ளார். 'விடுதலைப் புலிகளின் தாக்குதலிற்குத் தயாராகவிருந்த வெடிகுண்டுகள் மீட்கப்பட்டதென்ற' போலிப் பிரச்சாரத்திற்கு முரளி முக்கிய காரணமாக இருந்துள்ளான்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

## மகிந்த இந்தியா பயணம்

இரண்டு நாட்கள் பயணத்தை மேற்கொண்டு, முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச, இந்தியாவுக்கு சென்று திரும்பியுள்ளார். சர்வதேச பௌத்த கலாசார சம்மேளனம் மகராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 29 மற்றும் 30ம் திகதிகளில் நடத்திய பௌத்த கலாசார மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்துகொள்வதற்காகவே அவர் இந்தியா சென்றதாகக் கூறப்பட்டுள்ளது.



மகிந்த ராஜபக்சவுடன், நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த, பொதுஜன முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் அந்தரங்க செயலாளர் உதித லொக்குபண்டார ஆகியோரும் படையெடுத்துச் சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் சீனாவிற்கு பயணம் மேற்கொள்ள மகிந்த திட்டமிட்டிருந்தபோது, இந்தியாவிற்கு வந்துவிட்டு போகுமாறு வலியுறுத்தப்பட்டது. இதனால் இரு நாடுகளுக்கும் செல்லும் பயணத்தை இடைநிறுத்தியிருந்த மகிந்த, பின்னர் ஜப்பான் சென்றார்.

## மாரப்பன சீனா பயணம்

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன உத்தியோக பூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு சீனாவுக்கு பயணமாகியுள்ளார். சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யின் அழைப்பை ஏற்று சீனா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, கடந்த 29ம் திகதி தொடக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் 4ம் திகதி வரை சீனாவில் தங்கிருந்து, சீன வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடிவருகின்றார். இது திலக் மாரப்பனவின் சீனாவுக்கான முதலாவது அதிகாரபூர்வ பயணமாகும். அவரது பயணத்துக்கு சீனா முக்கியத்துவம் அளிக்கிறது என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் தெரிவித்துள்ளார். இருதரப்பு உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடும் நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்பார் என்றும் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## 1500000 பேர் தலைமறைவு

இலங்கையிலிருந்து தொழில் வாய்ப்புக்காகச் சென்று, சட்ட விரோதமாக வெளிநாடுகளில் சுமார் 15 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது என்று சிறீலங்கா வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மத்திய கிழக்கு நாடுகள் உட்பட தென்கொரியா, சைப்பிரஸ், இஸ்ரேல் போன்ற நாடுகளில் இவ்வாறு இலங்கைப் பணியாளர்கள் சட்ட விரோதமாகத் தங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## நொருக்கப்பட்ட பிள்ளையார்!

மன்னார் திருக்கேதீஸ்வரம் செல்லும் வீதியிலுள்ள பிள்ளையார் சிலை ஒன்று உடைக்கப்பட்டுள்ளது. சிலை



உடைக்கப்பட்டதற்கான காரணம் வெளியாகவில்லை. குறித்த பிள்ளையார் சிலையை அப்பகுதியில் உள்ள இன்னொரு மதப் பிரிவினர் அடித்து நொருக்கியுள்ளதாக கூறப்படுகின்றது. இந்த சம்பவம் தொடர்பில் சிறீலங்கா காவல்நிலையத்தில் முறையிடப்பட்ட போதிலும், எவரும் கைது செய்யப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

## மாதா சிலை உடைப்பு

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் வேளாங்கன்னி மாதா திருஉருவச்சிலை இனந்தெரியாத நபர்களினால் உடைத்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இனந்தெரியாதோரால் சிலை வைக்கப்பட்டிருந்த கண்ணாடி கூடு உடைக்கப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளது. கண்ணாடி கூட்டுக்குள் வெளியில் காணப்பட்ட சிறிய திருஉருவச்சிலையொன்றும் எரியூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

## வல்லுறவுத் தந்தை கைது

மட்டக்களப்பு, களுவன்கேணியில் 10 வயது மகளை, வன்புணர்வுக்கு உட்படுத்திய தந்தை கைது செய்யப்பட்டார். குறித்த சிறுமியின் தாய், 10 நாட்களுக்கு முன்னர் மத்திய கிழக்கு நாடொன்றுக்குத் தொழிலுக்காகச் சென்றுள்ளார். குடும்பத்தின் மூத்த பிள்ளையான சிறுமி, தனது இரு சகோதரர்களுடன் தந்தையினதும் பாட்டியினதும் பராமரிப்பில் இருந்த வந்த நிலையில், கடந்த 21ம் திகதி சனிக்கிழமை நண்பகல் வேளையில், தந்தையால், சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பில், சிறுமியால் பாட்டியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, வழக்கு பதிவு செய்யப்பட்டது. 32 வயதான குறித்த சிறுமியின் தந்தையை சிறீலங்காக் காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர்.

## 2016ல் 2036 துஷ்பிரயோகம்

இலங்கைத் தீவில் கடந்த வருடம் 2036 பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக புள்ளிவிபரத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. இவ்வாறு பதிவாகியுள்ள முறைப்பாடுகளில் 350 முறைப்பாடுகள் 16 வயதுக்குட்பட்டோர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு அவர்களது விருப்பமின்றியே உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 229 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் விருப்பத்துடன் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலியல் குற்றச் செயலிகள் அதிகரித்த மாகாணமாக தென்மாகாணம் பதிவாகி உள்ளதுடன், குறைந்த மாகாணமாக கிழக்குமாகாணம் பதிவாகியுள்ளது.

### மகிந்தவின் அடிதடி ஆலோசகரின் செலவில்

# பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரின் உல்லாசப் பயணங்கள்!

முன்னாள் சிங்கள அதிபர் மகிந்த ராஜபக்சவின் அடிதடி ஆலோசகர் என்று பெயர் போன சஜின் வாஸ் அவர்களின் செலவில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்குப் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குடும்பத்துடன் உல்லாசப் பயணங்கள் மேற்கொண்டமை பிரித்தானிய அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



பிரித்தானியாவின் வட அயர்லாந்தில் இயங்கி வரும் சனநாயக ஐக்கியவாதக் கட்சி எனத் தமிழில் பொருள்படும் டி.யூ.பி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பவர் இயன் பெய்ஸ்லி. கடந்த பொதுத் தேர்தலில் போதிய அளவு பெரும்பான்மையை மரபுவாதக் கட்சியின் தலைவரான தெரீசா மே அம்மையார் பெறத் தவறிய நிலையில் அவர் ஆட்சி அமைப்பதற்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்குவதற்கு சனநாயக ஐக்கியவாதக் கட்சி முன்வந்தது. இக்கட்சியானது அயர்லாந்து குடியரசுடன் வட அயர்லாந்து இணைவதற்கு எதிராகவும், பிரித்தானியாவின் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட மாநிலமாக வட அயர்லாந்து இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் கொண்ட கடும்போக்குவாதக் கட்சியாகும்.



சஜின் வாஸ்

இக் கட்சியில் 2010ஆம் ஆண்டிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் இயன் பெய்ஸ்லி, சிறீலங்காவிற்கும், பிரித்தானியாவிற்கும் இடையில் பின்கதவு வணிக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான பகீரத பிரயத்தனங்களில் ஈடுபடுவதாக அண்மையில் பிரித்தானியாவின் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்நிலையில் மகிந்த ராஜபக்சவின் அடிதடி ஆலோசகர் என்று பெயர் போன சஜின் வாஸ் அவர்கள் முழுச் செலவையும் பொறுப்பேற்க, ஒரு இலட்சம் பவுண்கள் பெறுமதியான உல்லாச விடுமுறைகளில் 2013ஆம் ஆண்டு தனது குடும்பத்துடன் இயன் பெய்ஸ்லி சென்று வந்துள்ளமை பிரித்தானியாவின் முன்னணி நாளேடான த ரெலிகிராப் பத்திரிகையின் விசாரணைகளில் ஆதாரபூர்வமாக அம்பலமாகியிருக்கின்றது.

கடந்த மாதம் பிரித்தானியா நாடாளுமன்ற கட்டிடத் தொகுதிக்கு சிறீலங்கா தூதுவர் அமாரி விஜேவர்த்தன அவர்களை அழைத்து பேச்சுவார்த்தைகளில் இயன் பெய்ஸ்லி ஈடுபட்டிருந்த நிலையிலேயே இவரது உல்லாச விடுமுறைகள் பற்றிய ஆதாரங்களை த ரெலிகிராப் பத்திரிகை அம்பலப்படுத்தியிருக்கின்றது.

## சிறீலங்கா அதிகாரிக்கு விமானத்தில் வாழ்நாள் தடை

ரஷ்யாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்ற சிறீலங்காப் பிரதிநிதிகளில் ஒருவருக்கு கட்டார் விமானத்தில் பயணிப்பதற்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது குறித்துத் தெரியவருவதாவது, கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் சிறீலங்காப் பிரதிநிதிகள் குழு ரஷ்யா நோக்கி சென்றனர். இக் குழுவில் சுய வேலைவாய்ப்பு ஊழியர் சங்கத்தின் தலைவர் விமானத்தில் புகைப் பிடித்தபோது விமான அதிகாரிகளிடம் சிக்கியுள்ளார். அதன் பின்னர் விமானம் டோஹா சர்வதேச விமானத்தில் தரையிறங்கியபோது ஆறு மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டதுடன், கட்டார் நிறுவனத்தின் எந்தவொரு விமானத்திலும் பயணம் செய்ய அவரை அனுமதிக்காது வாழ்நாள் தடைவிதித்ததோடு மூன்றரை இலட்சம் ரூபாய் தண்டபணத்துடன் அவரை விடுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பின்னர் மொஸ்கோவிற்கு வேறு விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் அவர் சென்றுள்ளார்.



# செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** சமாதானத்திற்கும், சகிப்பு தன்மைக்குமான விருது வீ.ஆனந்தசங்கரிக்கு நீதிக்கும் சமாதானத்துக்குமான அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது.

**எழும் கேள்வி:-** இவரது கடிதங்களைப் பார்த்து சகித்தக்கொண்ட தமிழர்களுக்கு அல்லவா இவ்விருது வழங்கப்பட்டிருக்கவேண்டும்?

★★★★ ★★★★

**செய்தி:-** வடக்கு மாகாணத்தில் பொதுமக்களின் காணிகளை சரணாலயம் என்ற பெயரில் வனவளத் திணைக்களம் அபகரித்து வருகின்றது. இந்த நில அபகரிப்பை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறீலங்கா அமைச்சர் றிசாட் பதியுதீன் வலியுறுத்தினார்.

**எழும் கேள்வி:-** தமிழரின் காணிகள் பறிக்கப்பட்டபோது, சிங்களத்துடன் சேர்ந்திருந்து ஆதரித்தவருக்கு, முஸ்லீம்களின் காணி பறிக்கப்படும்போது மட்டும் வலிக்கின்றதாமோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** யாழ்ப்பாணத்தில் பேசிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தனக்குள் இருக்கும் பேயைக் குறிப்பிட்டாரே தவிர, தன்னைப் பேய் என்று குறிப்பிடவில்லை என்று சிறீலங்காவின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.



**எழும் கேள்வி:-** இது என்ன பேய்கள் கதையாக இருக்குது..?

★★★★ ★★★★

**செய்தி:-** ஆசியாவின் மிகப்பெரிய இரும்புத் தாதுப்படிவு சிறீலங்காவின் மொனராகலை மாவட்டத்தின் புத்தல பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக புவியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**எழும் கேள்வி:-** சுரண்டியெடுக்க நிறையப்பேர் வருவார்களே..?

★★★★ ★★★★

**செய்தி:-** மொழிக் கொள்கை, தரப்படுத்தல் போன்ற பாரபட்ச நடைமுறைகளைத் தென்பகுதி பெரும்பான்மையினத் தலைவர்கள் கொண்டு வந்ததனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர் என வவுனியாவில் இடம்பெற்ற இரத்தின தீப விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சிறீலங்கா வர்த்தக கைத்தொழில் அமைச்சருமான றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.?

**எழும் கேள்வி:-** இதனை இப்பதான் கண்டுபிடித்தாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** தமிழ் மக்கள் அந்த ஒளியைத் தேடுகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், சிறீலங்காவின் எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** எந்த ஒளி என்பது சம்பந்தருக்குத் தெரியுமா..?

★★★★ ★★★★

**செய்தி:-** தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தும் எந்த நகர்வுகளும் வடக்கில் இடம்பெறவில்லை. அந்த மக்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை என சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலர் கபில வைத்தியரத்ன தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** பிறகும் எதற்கு இலட்சக் கணக்கான இராணுவத்தை வடக்கில் குவித்து வைத்திருக்கின்றீர்கள்..?

★★★★ ★★★★

**செய்தி:-** நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு தனக்கு போதுமான கால அவகாசம் இருக்கவில்லையென்றும் அதை ஒழிக்கும் முகமாகவே தனது இரண்டாவது பதவிக்காலம் முடிவடைவதற்கு இரு வருடங்கள் மீதியாக இருந்த நிலையில், முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தியதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறினார்.

**எழும் கேள்வி:-** ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு முன் உங்கள் ஆட்சியையே ஒழித்துவிட்டார்களே..?

★★★★ ★★★★

**செய்தி:-** மகிந்த ராஜபக்சவின் கடந்த காலத் தவறுகளை அம்பலப்படுத்துவதற்காகவே அரசியலில் நுழைந்து அமைச்சர் பதவியைப் பெற்றேன். இவ்வாறு சிறீலங்கா அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** அப்ப மக்களைப் பற்றிய சிந்தனை உங்களுக்கு இல்லை?

# மைத்திரி ஆட்சியில் சத்தமின்றி நடக்கும்

## வன்முறைகளும், படுகொலைகளும்

'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்

தமிழர் தாயகத்தைக் கைப்பற்றி அங்கு ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்திவிட்டதாக சிங்கள தேசம் உலகெங்கும் பறைசாற்றிக்கொண்டிருக்கின்ற போதிலும், அராஜகம் நிறைந்த காட்டாட்சி இங்கு இடம்பெற்று வருகின்றன என்பதற்கு அவ்வப்போது சில சான்றுகள் வெளித்தெரிகின்றன.

காலம் பிந்திய சான்றாக அரியாலைப் படுகொலை அமைந்திருக்கின்றது. கடற்றொழிலாளியான இளைஞன் ஒருவன் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றான். சிங்கள காவல்துறை இதை ஒரு சாதாரண பிரச்சினையாகவே எடுத்துக்கொண்டிருக்கின்றது.

நல்லாட்சி அரசு எனக் கூறப்படுகின்ற தென்னிலங்கை அரசு இந்தப் படுகொலை தொடர்பாக எந்தக் கருத்துக்களையும் வெளிப்படுத்தவில்லை. மாறாக தனது வழமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

பொதுவாக ஆட்சியாளர்களிடையே ஒப்பீடு கூறப்படுவது வழமை. அந்த வகையில் தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்சவின் கடந்த அரசையும் மைத்திரிபால சிறிசேனவில் தற்போதைய நல்லாட்சி அரசையும் மிக எளிதாகவே விளங்கிக்கொண்டிருக்கின்றனர். மகிந்த வெளிப்படையாகச் செய்தார். மைத்திரி மறைமுகமாகச் செய்கின்றார் என்பதே இந்த ஆட்சியாளர்கள் தொடர்பாக தமிழ் மக்களின் ஒப்பீடு.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் தமிழ் இளைஞர்கள் மீது வெளிப்படையாக அராஜகம் பிரயோகிக்கப்பட்டது. யாரை எப்போது போட்டுத்தள்ள முடியுமோ, அப்போது, நினைத்த மாத்திரத்திலேயே போட்டுத்தள்ளினர்.

ஆனால், மைத்திரியின் காலத்தில் சற்று ஆராய்ந்து, சாட்சியங்கள் வெளிதெரியாத வகையில், தமிழ் இளைஞர்கள் மீது அராஜகம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இராணுவம், கடற்படை, காவல்துறை என அனைவருமே தமிழ் மக்கள் மீது தங்கள் அராஜகத்தை அரங்கேற்றி வருகின்றனர்.

கடந்த வருடம் (2016) ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் காவல்துறையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். ஜனநாயக ஆட்சி நடப்பதாக சிங்கள அரசு கூறுகின்ற யாழ். மண்ணில், ஏன்? எதற்கு? என்ற கேள்விகள் இன்றி, எந்தவிதக் காரணங்களும் இன்றி இரு மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன், மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த நடராஜா கஜன் ஆகிய இரு மாணவர்களும் காவல்துறையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

அப்போது பல்கலைக்கழகத்தில் எந்த வித போராட்டங்களும் இடம்பெற்றிருக்கவில்லை. புலிகள் சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கவில்லை, மாணவர்கள் முழு மனதோடு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தபோது இந்தப் படுகொலை இடம்பெற்றது.

விபத்து என்ற காரணத்தைக் கூறி, அந்தப் படுகொலையை மறைப்பதற்கு சிங்களக் காவல்துறையினர் கடும் பிரயத்தனம் எடுத்தபோதிலும், அர்ப்பணிப்புமிக்க, நேர்மையான தமிழ் நீதிபதி ஒருவரின் (எஸ். சதீஸ்தரன்) உத்தரவின் பேரில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டு காவல்துறையினர் ஐவர் கைது செய்யப்பட்டனர். ஆனாலும், இன்றுவரை அதற்கான நீதி வழங்கப்படவில்லை.

மேலும், கடந்த யூலை மாதம் 09 ஆம் திகதி வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் ஏற்றிச்சென்றார் எனக் கூறப்பட்டு அப்பாவி இளைஞன் ஒருவரைப் காவல்துறையினர் சுட்டுக்கொன்றனர். யோகராசா தினேஸ் (வயது-24) என்ற இளைஞரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்.





இவர் ஏன் கொல்லப்பட்டார்? அதற்கான பின்னணி என்ன? என்பது தொடர்பாக இதுவரை காவல்துறையினரோ சிறீலங்கா நீதித்துறையோ பதில் கூறவில்லை.

அதைவிட, கடற்படையினர் கடலில் மேற்கொள்ளும் பல அராஜகங்கள் வெளித்தெரிவதில்லை. வெளியே கூறினால் தாங்கள் தொடர்ந்தும் தொழில் செய்ய முடியாதே என்ற ஏக்கத்தில் தமிழ் மீனவர்கள் அவற்றை மறைத்து வருகின்றனர்.

> கடற்படையினர் கடலில் மேற்கொள்ளும் பல அராஜகங்கள் வெளித்தெரிவதில்லை. வெளியே கூறினால் தாங்கள் தொடர்ந்தும் தொழில் செய்ய முடியாதே என்ற ஏக்கத்தில் தமிழ் மீனவர்கள் அவற்றை மறைத்து வருகின்றனர்.

சமீபத்தில் காரைநகர் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்ட அதே பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் படகு மீது தமது படகால் மோதி ஒருவரைப் படுகொலை செய்தது சிங்களக் கடற்படை.

அதை மறைக்க முற்பட்டு, அதில் இருந்து விலகிச் செல்லவதற்கு கடற்படைத் தரப்பு முயன்ற போதிலும் அப்பிரதேச மீனவர்களும் பொதுமக்களும் இணைந்து உறுதியுடன் நின்ற காரணத்தால் அது கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட படுகொலை எனப் பதிவாகியது.

காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் (வயது -38) என்பவரே கடற்படையால் படுகொலை செய்யப்பட்டார். இதில் படுகாயமடைந்த தவராசா சத்தியராசா என்ற இளைஞர் இன்றுவரை சுகவீனமாகவே இருக்கின்றார்.

இதைவிட, அவ்வப்போது கடலில் மீனவர்கள் தாக்கப்பட்டு வருகின்றனர். கடந்த வாரம் மாதகல் கடற்பரப்பில் தொழில் செய்துகொண்டிருந்த நான்கு மீனவர்கள் கடற்படையால் தாக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

### 50 கிராமங்களில் 1200 வீடுகள்

இந்திய அரசின் நிதியுதவியுடன் 50 மாதிரிக் கிராமங்களில் ஆயிரத்து 200 வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தியத்தூதுவர் தரஞ்சித் சிங் மற்றும் சிறீலங்கா வீடமைப்புப்துறை அமைச்சின் செயலாளர் அத்துகோரல ஆகியோருக்கு இடையில் இந்த ஒப்பந்தம் கடந்த வாரம் கைச்சாத்திடப்பட்டது. மலையகம் உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று கூறப்பட்டது. ஏற்கனவே இந்தியா கட்டிக் கொடுத்த வீடுகள் பல இடிந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மிருக பலிக்கு தடை

யாழ் குடாநாட்டு எல்லைக்குட்பட்ட இந்து ஆலயங்களில் மிருகங்கள் பலியிடப்படுவதற்கு முற்றாக தடை விதித்து யாழ் நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது. அகில இலங்கை சைவ மகா சபையினால் ஆலயங்களில் வேள்விகளை தடுத்து நிறுத்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு யாழ். மேல் நீதிமன்றம் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றை பிறப்பித்தது. இந்நிலையில் குறித்த மனு மீதான விசாரணை மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிபதி இளஞ்செழியன் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

### திருமலை துறைமுகம்!

கொழும்பு துறைமுகம், ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் ஆகியவற்றுக்கு அப்பால் திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யப்படும் என்று சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தெரிவிக்கையில். அபிவிருத்திப் பணிகளுக்காக சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகள் உதவி செய்வதாக அவர் குறிப்பிட்டார். அடுத்த பத்து வருடங்களில் வங்காள விரிகுடா கரையோர நாடுகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அதன் மூலம் திருகோணமலைத் துறைமுகமும் அபிவிருத்தியடையும் இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெரும் பங்களிப்பு இடம்பெறும் என்றும் ரணில் தெரிவித்தார்.

### தமிழனை ஏமாற்றிய பெண்கள்

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவர் வெளிநாட்டிற்கு செல்வதற்காக தென்னிலங்கை பகுதியில் உள்ள நிறுவனம் ஒன்றின் மூலம் விசாவுக்கு விண்ணப்பம் செய்திருந்தார். விசா பெறுவதற்கு வங்கிக் கணக்கில் 2 மில்லியன் ரூபா வைப்பில் இருக்க வேண்டும் என முகவர் நிலையம் கூறியதை அடுத்து, குறித்த தொகையினை வைப்புச் செய்துள்ளார். இந் நிலையில் வங்கி கணக்கு புத்தகம் உள்ளிட்ட ஆவணங்களை வெளிநாட்டு தூதரகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என கூறி குறித்த நிறுவனம் அதனை பெற்றுக் கொண்டுள்ளது. எனினும் சில நாட்களின் பின்னர் குறித்த நபர் தனது வங்கிக் கணக்கினை சோதனை செய்தபோது வைப்பில் இட்ட பணத்தில் 1.9 மில்லியன் ரூபா மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. பின்னர் குறித்த நபர் யாழிலுள்ள சிறீலங்காக் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை யடுத்து அந்த நிறுவனத்தில் பணியாற்றிய 5 பெண்களையும் அவர்கள் கைது கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்தினர்.

## இந்தியப் படுகொலை : 30ம் ஆண்டு நினைவு

இந்திய இராணுவத்தினரால், யாழ் போதனா வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட உறவுகளின் 30ம் ஆண்டு நினைவுதினம் யாழ்



போதனா வைத்தியசாலையில் நினைவு கூறப்பட்டது. இதன்போது, மருத்துவப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்திய மூர்த்தி நினைவுச்சுடர் ஏற்றினார். தொடர்ந்து வைத்தியசாலை அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஆகியோர் உயிரிழந்தவர்களின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, தீபமேற்றி, மலரஞ்சலி செலுத்தினர்.

1987ம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி இந்தியப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த மூன்று வைத்தியர்கள், இரண்டு தாதிமார்கள், ஊழியர்கள் மற்றும் நோயாளார் உட்பட மொத்தம் 21 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

---

## பல்கலைகழக பீடங்களுக்கு இந்திய அன்பளிப்புகள்

இந்திய அரசின் 90 மில்லியன் ரூபா பெறுமதியில் வாகனங்கள் மற்றும் உபகரண தொகுதிகள் என்பன யாழ் பல்கலைகழகத்தின் கிளிநொச்சி விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளால் முன்னர் உருவாக்கப்பட்ட கிளிநொச்சி அறிவியல் நகர்லுள்ள விவசாய பீடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்திய அரசின் 90 மில்லியன் ரூபா பெறுமதியில் 48 மில்லியன் ரூபாவுக்கு இரண்டு அதி சொகுசு பேரூந்துகள், டபுள் கப் வாகனம் மற்றும் உழவு இயந்திரம் என்பன பல்கலைகழக நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. மிகுதி தொகுதி வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன விரைவில் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. யாழ் இந்திய துணைத்தூதுவர் ஆர்.நடராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இவற்றை கையளித்துள்ளாார்.

---

## மன்னாரில் சிறைச்சாலை

மன்னாரில் சிறைக்கூடம் அமைப்பதற்கு சிறீலங்கா அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அமைச்சரவைக் கூட்டத்தில் மன்னாரில் சிறைக்கூடம் அமைப்பதற்கான பத்திரத்தை சிறீலங்கா அமைச்சர் சுவாமிநாதன் சமர்ப்பித்திருந்தார். வவுனியா சிறைச்சாலையில் இருந்து 85 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மன்னார் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் சந்தேகநபர்கள், தற்காலிகமாக, சுங்கத் திணைக்கள அறை ஒன்றிலேயே தற்போது தடுத்து வைக்கப்படுகின்றனர்.

# ஒட்டுமொத்த தமிழர்களையும் இமானுவெல் சிலுவையில் அறைகின்றார்

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை குற்றச்சாட்டு!

யூதாஸ் காட்டிக்கொடுத்து இறைமகன் இயேசு சிலுவையில் அறையப்பட்டார். ஒட்டுமொத்த தமிழர்களையும் வணபிதா எஸ்.ஜே.இமானுவெல் சிலுவையில் அறைகின்றார். என அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை கடும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. வணபிதா எஸ்.ஜே.இமானுவெல் சிறீலங்காவுடன் கரம்கோத்துள்ளது உலகத் தமிழர்களிடம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இது குறித்து அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழர்களின் பாதுகாப்புக் கவசமாக இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதம் 2009ம் ஆண்டு மௌனிக்கப்பட்டபோது என்ன செய்வதென்று தெரியாது தமிழினமே நிராதரவாக நின்ற நேரத்தில் எமது விடுதலை வேட்கையை வென்றெடுக்க உருவானது தான் உலகத்தமிழர் பேரவை.

2009ம் ஆண்டு 8ம் திகதி ஆவணி மாதம் பாரிஸ் நகரில் ஐந்து கண்டங்களிலும் இருந்து வந்த புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களால் உருவாக்கப்பட்டது தான் உலகத் தமிழர் பேரவை. 15 நாட்டுப் புலம்பெயர் தமிழர்களால் எமது தேசியப் போராட்டத்தைத் தெடர்ந்து போராடவென இறுக்கமான முடிவுடன் உருவாக்கப்பட்டதுதான் இந்த அமைப்பு.

உலகத் தமிழர் பேரவை உருவாக்கத்தின் போது ஒன்று கூடி இருந்த அனைவராலும் முக்கியமாக கருத்திலும் எழுத்திலும் இந்த அமைப்பின் உருவாக்கத்தில் 'இழந்த தமிழர் இறைமையை வென்றெடுப்பது, தமிழ் மக்களின் கடல் – நில எல்லைகளை பாதுகாப்பது' என்ற சிந்தனையுடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு இன்று ஒரு சில வல்லரசுக்களின் கைக்கூலிகளாகி இன்று ஒரு சிலரால் கொண்டு நடத்தப்படுகிறது.

எஸ்.ஜே.இமானுவெலின் தலைமையில் இயங்கி வந்த உலகத்தமிழர் பேரவை 2010ம் ஆண்டு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் றொபேட் ஓ பிளாக் உடன் திரு.சுரேன் சுரேந்திரன், மதகுரு இமானுவெல், திரு.எலியாஸ் ஜெயராஜ் மற்றும் திருமதி. புஸ்பராணி ஆகியோர் ஒரு சந்திப்பொன்றை ஏற்படுத்துகின்றனர். இச்சந்திப்பிற்குப் பின் உலகத் தமிழர் பேரவையில் அங்கம் வகித்த அத்தனை அமைப்புக்களும் தூக்கி எறியப்படுகின்றன. இவ்வமைப்பு மதகுரு உட்பட ஒரு சில தனிநபர்களின் கட்டுப்பாட்டில் இன்று இயங்கி வருகின்றது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அருகிதையை இவ்வமைப்பு இழந்து நிறுவனமயப்படுத்துப்படுகின்றது. மேய்ப்பவராக இருந்த மதகுரு மேய்க்கப்படுபவராக மாறுகின்றார்.

COIN (Counterinsurgency) வியூக அடிப்படையில் இலங்கைத்தீவில் பொருளாதார நலன் சார்ந்த சர்வதேசத்தின் சூழ்ச்சி அரசியலை நகர்த்த வேண்டுமானால் அரசுகளுக்கு எதிரான மாற்றுக்கொள்கை உடைய அரசியற்கட்சிகள், அமைப்புக்களைப் புறந்தள்ளி அரச ஆதரவான கட்டமைப்புக்களை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவை சர்வதேசத்திற்குத் அவசியம். அந்த வலைக்குள் நின்றுதான் பாதிரியாரின் தலைமையில் உள்ள GTF போன்ற அமைப்புக்கள் வல்லரசுகளுக்கும், இந்தியாவிற்கும், இலங்கை அரசிற்கும் ஊதுகுழலாக இயங்குகின்றது.

சிறீலங்கா அரசின் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்திய ஒற்றையாட்சிக் கோட்பாட்டை நிறைவேற்றுவதற்கு சிங்கப்பூரில் நடைபெற்ற அரசியல் சட்ட முன்னமர்வுக் கூட்டத்தில் உலகத் தமிழர் பேரவை வேறு அமைப்புக்களுடன் கலந்து பேசாமல் சென்றது கூட ஒரு சர்வதேசத்தின் நெறிப்படுத்தலில் உருவான COIN வீயூக அடிப்படையிலான அரசியல் முன்னகர்வு என்றும் கூறலாம். சிறிலங்கா அரசின் தடைப்பட்டியலில் இருந்த பாதிரியாரின் பெயர் பின்பு விலக்கப்பட்டதும் இணக்க அரசியலில்



உடன்பட வைக்கும் நோக்கில் தான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

உலக அரங்கில் வல்லரசுகளின் செயல்பாடுகளை பார்ப்போமானால் – தம்மோடு தமது சிந்தனையோடு ஒட்டி ஓடுபவர்கள் ஒட்டிக்கொண்டு செல்லக்கூடியவர்களை முன்னிறுத்தி அவர்களுக்குச் சிவப்புக்கம்பளம் விரித்து தமிழினத்தின் பிரதிநிதிகளாக பிரச்சாரம் செய்து ஒரு மாயையை உருவாக்கி தமது சிந்தனையை கொண்டு செல்வார்கள். இவ்வாறு தான் இந்த உலகத்த தமிழர் பேரவை திசை திருப்பப்பட்டது. கொள்கையை விட்டு உலகத்தமிழர் பேரவை தனிநபர்களால் கையாளப்பட்ட போது 'இழந்த தமிழர் இறைமையை வென்றெடுப்பது, தமிழ் மக்களின் கடல் – நில எல்லைகளைப் பாதுகாப்பது' என்ற சிந்தனையை, 1976 – 1977களில் மக்கள் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு கொடுத்த ஆணையை நிறைவேற்ற 15 நாடுகளின் அமைப்புகள் சேர்ந்து உருவானதே அனைத்துலக ஈழத் தமிழர் அவை.

இந்த சூழலில் உலகத் தமிழர் பேரவையில் இருந்து வெளியேறிய அமைப்புகள், மற்றும் ·, தாயகத்தில் இருந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் சிவில் சமூகம், EPRLF, டெலோ, ஆகிய அமைப்புக்களைக் கையகப்படுத்த ஒரு சில வல்லரசுகள் மற்றும் அவர்கள் பின்னணியில் இருக்கும் ஒரு சில நாடுகள் உதவியுடன் தமது பினாமிகள் ஆனா உலகத் தமிழர் பேரவை – TNA யின் வலைப்பின்னலுக்குள் பெர்லின் நகரில் Bergoff Foundation என்ற அமைப்பின் ஊடாக பொது அரசியல் கொள்கைத் தீர்மானங்கள் வகுத்தல் என்று கூறி எடுத்த முயற்சி கைகூடாத சூழலில் கைக்கூலி அமைப்புகள் ஆகிய உலகத் தமிழர் பேரவை (GTF) தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) ஆகிய அமைப்புக்களைத் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக ஒரு பிம்பத்தை உருவாக்கிக்கொண்டு தமது புவிசார் பொருளாதார நலன்களை நோக்கி ஒரு சில சர்வதேச நாடுகள் முன் நகர்த்தியது.

2000ம் ஆண்டிலிருந்து தலைவர் பிரபாகரனின் புகழ்பாடிய மதகுரு 2010களில் இருந்து மெதுவாகக் குத்துக்கரணம் அடிக்கத் தொடங்குகிறார். தேசியத் தலைவர் தலையில் சுமந்த போராட்டத்தை நாம் தோளிலாவது சுமக்க வேண்டாமா என்று போதித்த போதகர் இப்போ சிறிசேனாவை தனது தலைவர் என்று ஏற்றுக்கொண்டு தமிழினத்தைச் சிலுவையில் அறைந்து விட்டார். இனவழிப்புச் செய்த சிங்களத் தலைவர்களுடன் நல்லிணக்கம் என்ற போர்வையில் தமிழினத்தின் அரசியரபிலாசைகளை அடமானம் வைத்துவிட்டார்.

அன்று மதகுரு பேசிய வார்த்தைகள்...

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க துணிச்சலுடனும் முதுகெலும்புடனும் நீங்கள் செயற்பட வேண்டும் இல்லையேல் அரசியலில் இருந்து ஒதுங்குங்கள் என தமிழ்த்தேசியக் கூட்மைப்புக்கு மதகுரு விடுத்த எச்சரிக்கை

அநீதியான முறையில் நான் அடக்கப்பட்டு நிலத்தில் வீழ்த்தப்பட்டால் எந்த ஆயுதத்தையும் பாவித்து சண்டையிடும் உரிமை எனக்கு உண்டு என்று இமானுவேல் அடிகளார் அமெரிக்காவில் பேசினார்.

உண்மை எங்கள் விடுதலைக்கு வழி வகுக்கும் என்று தான் எழுதிய நூல் ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு அனுப்பிவைத்தார்.

இன்று இறைபோதகரின் திருவிளையாடல்கள்...

தமிழர்களின் அடிப்படை உரிமைகளைக் கூட நிராகரிக்கும் ஒன்றுமில்லாத யாப்பைத் தலையில் வைத்துக் கொண்டு தனது தலைவர் சிறிசேன மற்றம் ரணிலின் ஆட்சியில் தமிழர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகச் சொல்லி தமிழினத்தையே ஏமாற்றுகின்றார் மதகுரு எஸ்.ஜே.இமானுவெல்.

**இச்சந்திப்பிற்குப் பின் உலகத்தமிழர் பேரவையில் அங்கம் வகித்த அத்தனை அமைப்புக்களும் தூக்கி எறியப்படுகின்றன. இவ்வமைப்பு மதகுரு உட்பட ஒரு சில தனிநபர்களின் கட்டுப்பாட்டில் இன்று இயங்கி வருகின்றது.**

மிகஇரகசியமாக இலங்கை சென்ற மதகுரு இமானுவெல் அவர்கள் ரணில், மங்கள, போன்ற சிறீலங்கா அரச தலைவர்களைச் சந்தித்துப் பேசியதோடு நாகர்கோவிலில் சிறார்களைக் கொன்று குவித்துவிட்டு இப்போ குழந்தைகளை வைத்தே நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போகிறேன் எனறு கொடுக்குக் கட்டிக்கொண்டு நிற்கும் முன்னாள் சனாதிபதி சந்திரிகாவையும் பார்த்துப் பேசியுள்ளார். ஈழத்தமிழர் வரலாற்றில் துரோகிகளுக்குப் பஞ்சமே இல்லை, அந்த வரிசையில் மதகுருவும் சேர்துள்ளார்.

தமிழ் மக்களின் இறைமை, தமிழிழர் தாயகத்தின் கடற்பரப்பு, நில எல்லைகளை பாதுகாக்க புறப்பட்ட மதகுரு எஸ்.ஜே.இம்மானுவல் இன்று தமிழ் இன அழிப்பின் உச்ச கருவியாக செயற்படுகிறார்.

போராட்ட காலங்களில் கிறிஸ்தவப் பாதிரிகளின் பங்களிப்பு அளப்பெரியது. இறுதி யுத்தத்தின் போது போராளிகளுடன் சரணடைந்த அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப், மன்னார் வங்காலையில் காணாமல் ஆக்கப்பட்ட வணபிதா பஸ்ரியான், அல்லைப்பிட்டியில் காணாமல் ஆக்கப்பட்ட வணபிதா ஜிம் பிரவுண் போன்ற தேசத்தின் மீது நேசம் கொண்ட வணபிதாக்களுடன் ஒப்பிடும் போது எஸ்.ஜே.இமானுவெல் என்ற இந்தப் பாதிரியாரின் செயல்கள் எல்லாம் தமிழர் விரோதப் போக்காகவே உள்ளது.

பைபிளில் உள்ள நற்செய்தி நூல்கள் இயேசு சிலுவையில் அறையப்பட்டார், உயிர்த்தெழுந்தார், பின் வானத்திற்கு எழுந்தருளி பரலோகத்திற்கு சென்றார் என்று கூறுகின்றன. அவர் மீண்டும் வருவார், அப்பொழுது பூமியின் அழிவு நிகழும், அன்று நல்லவர்கள் மட்டும் அவரோடு பரலோகத்திற்கு அழைத்து செல்லப்படுவர் என்றும் கூறுகின்றன. அதேபோன்று தமிழர்கள் மீண்டும் மீண்டும் இந்த அழிவுகளிலிருந்தும் காட்டிக்கொடுப்புகளிலிருந்தும் எழுவர், தமது தாயகத்தை வெல்வர் என்பது உறுதி.

என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'கிழக்கில் இருந்து' எழுவான்

# தமிழர் பகுதிகளில் புத்த சிலைகளை கைவிட்டு

## சிங்களப் பிரதேசங்களாக மாற்ற முயற்சி

கிழக்கு மாகாணத்தில் சிறீலங்காவின் ஆக்கிரமிப்புப்படைகள் நிலைகொண்ட பகுதியில் இருந்து வெளியேறும் போது அவர்களினால் வைக்கப்பட்ட புத்தர் சிலை மற்றும் அதன் கட்டடங்கள் அகற்றப்படாது விட்டுச் செல்கின்றமை அந்த இடங்களில் பௌத்தர்கள் வாழ்ந்ததாக கூறி இடங்களை ஆக்கிரமிப்புச் செய்வதற்கான நடவடிக்கை மிகவும் திட்டமிட்டமுறையில் சிறீலங்கா அரசின் திட்டவரைவுக்கு அமைவாக அதன் படைகள் செயற்பட்டுவருகிறது.

அமைதியாக வாழ்கின்ற தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் புத்தர் சிலைகளை நிறுவி, அதை சிங்களவர்களின் பிரதேசமாக மாற்றுகின்ற முயற்சி முன்னெடுக்கப்படுகிறது. நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டுவந்த தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பரிசுப் பொருளாக புத்தர் சிலைகளை வழங்கி வருகின்றனர். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு அடிமைகளாக, வாய்மூடி மௌனிகளாக தமிழ் பேசும் அரசியல் தலைவர்கள் இன்னும் நல்லாட்சிக்கு ஊது குழலாக செயற்படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் படைகள் நிலைகொண்ட இடங்களிலிருந்து தற்போது வெளியேறியிருந்தாலும், அவர்களினால் வைக்கப்பட்ட புத்தர் சிலைக்கான கூடாரங்கள் இன்னும் காணக்கூடியதாக உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு முஸ்லிம் பிரதேச செயலாளர் பகுதிகள் தவிர ஏனைய 10 தமிழ் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர், காவல்துறையினர் இடங்களில் அவர்களின் தேவைகளுக்காக வைக்கப்பட்ட சிறியளவிலான புத்தர் சிலைகளும் அதன் கட்டடங்களையும் அகற்றாது உள்ளன. அவற்றை அகற்ற பொதுமக்கள், அரச அதிகாரிகள் அச்சமடைந்துள்ளனர். இதனால், முன்னொரு காலத்தில் பௌத்தர்கள் இப்பகுதிகளில் வாழ்ந்ததாக பிக்குகள், பௌத்தர்கள் தெரிவித்து அந்த இடங்களை அபகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முறாவோடைத் தமிழ் கிராமத்தில் ஆக்கிரமிப்புப்படை 1993 ஆம் ஆண்டு பாரிய படை முகாம் அமைக்கப்பட்டு நிலைகொண்டிருந்தனர். சுமார் 46 குடும்பங்களில் காணிகள் இம்முகா-மிற்குள் உள்ளடக்கட்டிருந்தன. இதில் கிருஸ்ணப்பிள்ளை என்ற தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் விகாரை வடிவில் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு புத்தர் சிலை வைக்கப்பட்டதுடன், அரச மரம் ஒன்றையும் நாட்டியுள்ளனர். 26 வருடங்களாக இந்த முகாமில் படையினர் நிலைகொண்டிருந்தனர். இந்த முகாமிருந்து கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் படையினர் வெளியேறிருந்தனர். எனினும் அவர்களினால் வைக்கப்பட்ட புத்தர் சிலை மற்றும் கட்டடம் இன்னும் காணப்படுகிறது. இதனை அகற்றுவதற்கு அந்தநபர் அச்சமடைந்துள்ளார். இதனையடுத்து குறித்த பகுதியில் பௌத்தர்கள் வாழ்ந்ததாக தெரிவித்து மட்டக்களப்பு நகர் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரெட்ண தேரர் தலைமையிலான சிங்களக் குழு ஒன்று அப்பகுதிக்கு செல்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எனினும், இது தொடர்பான முறைப்பாட்டை பிரதேச செயலாளரிடம் காணி உரிமையாளர் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.



அடுத்ததாக கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சந்திவெளி கிராமத்திலுள்ள சந்திவெளி ஏற்றம் எனக் குறிப்பிடப்படும் இடத்தில் நிலைகொண்டிருந்த ஆக்கிரமிப்புப் படைகளினால் அமைக்கப்பட்ட கட்டடம். இந்த இடத்திலிருந்து படையினர் வெளியேறினாலும் அவர்களினால் நிறுவப்பட்ட கட்டடம் அப்படியே இன்றும் காணக் கூடியதாக உள்ளது. அதேபோன்று மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேச செயலளர் பிரிவில் அரச நெசவாலையில் நிலைகொண்டிருந்த விசேட அதிரடிப்படையினரால் நிறுவப்பட்டது கூடாரம். இதனை அகற்ற அரச அதிகாரிகள் அச்சமடைவதினால் அவற்றுக்கு இந்துக் கடவுளான விநாயகரின் திரைச்சீலையை முன்பக்கத்தில் தொங்கவிட்டுள்ளனர். இதே பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 5ஆம் கட்டைப் பகுதியில் இந்த மாதம் முதல்வாரத்தில் 11ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த ஆக்கிரமிப்புப் படையினர் வெளியேறி தாழங்குடா கடற்கரையோரமாக நிலைகொண்டுள்ளனர்.

5ஆம் கட்டையில் தனியார் காணியில் நிலைகொண்டிருந்த போது அவர்களினால் அமைக்கப்பட்ட அனைத்து கட்டடங்களும் அழிக்கப்பட்ட நிலையில், அவர்களின் வணக்கத்திற்கென அமைக்கப்பட்ட சிறியளவிலான புத்தர் சிலை வைக்கப்பட்ட கட்டடம் மட்டும் அகற்றப்படவில்லை. பௌத்தர்கள் எந்த ஒரு காலப்பகுதியிலும் இல்லாத பகுதியில் சிலை வைக்கப்பட்ட கட்டடத்தை வைத்துவிட்டுச் செல்லவது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.

**இந்த முகாமிருந்து கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் படையினர் வெளியேறிருந்தனர். எனினும் அவர்களினால் வைக்கப்பட்ட புத்தர் சிலை மற்றும் கட்டடம் இன்னும் காணப்படுகிறது. இதனை அகற்றுவதற்கு அந்தநபர் அச்சமடைந்துள்ளார். இதனையடுத்து குறித்த பகுதியில் பௌத்தர்கள் வாழ்ந்ததாக தெரிவித்து மட்டக்களப்பு நகர் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரெட்ண தேரர் தலைமையிலான சிங்களக் குழு ஒன்று அப்பகுதிக்கு செல்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.**

தொடர்ச்சி 22ம் பக்கம்

### சிவாஜிலிங்கம் போர் நிறுத்தம்!

உள்ளூரிலும் வெளிநாட்டிலிருந்தும் வரும் கோரிக்கையையடுத்து கஜேந்திரகுமாருக்கு எதிரான விடயங்களைப் பகிரங்கமாகப் நிறுத்துகிறேன். அதனைப் பலவீனமாகக் கருதி கஜேந்திரகுமார் எனது செயலில் சேறு பூச முயன்றால் மீண்டும் அவருக்கான பதில் பலமானதாகவே இருக்கும். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். யாழ்.நகர விடுதி ஒன்றில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: தற்போதைய சூழலில் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரைக்கும் என்றாலும் கஜேந்திரகுமாருடனான மோதல் போக்கைக் கைவிடுங்கள் என்று உள்ளூரிலும் வெளிநாடுகளில் இருந்தும் பலரும் தொடர்ந்தும் கோரிக்கை விடுக்கின்றனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று ஒரு தலைப்பட்டசமான போர் நிறுத்த அறிவிப்பை விடுக்கின்றேன். மக்களின் கருத்தை ஏற்று அறிவிக்கும் இந்தப் போர் நிறுத்தத்தினையும் மீறி தாக்குதல் தொடுத்தால் பதிலடி தொடரும். அதன்பின்னர் என்னைத் தடுக்க முடியாது என்றார்.

---

### மக்களை கடனாளிகளாக மாற்றியுள்ள நல்லாட்சி!

சிறிலங்கா தமது கிராமங்களுக்கு எந்த அபிவிருத்தியையும் ஏற்படுத்தாத போது, அரச நிறுவனங்கள் தங்களைக் கடனாளியாக்கியுள்ளன என, கிளிநொச்சி யூனியன்குளம் பகுதியில் வாழும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். மகிந்த அரசாங்கத்தைப் போலவே நல்லாட்சி அரசு எனக் கூறப்படும் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் மூலமும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் அவர்கள் கூறினர். கடன் திட்டத்தில் வீடுகளைத் தந்து கடனாளிகளாக்கிவிட்டு வாக்குகளுக்



காகவும் ஆர்ப்பாட்டங்களுக்காகவுமே அனைவரும் எங்களைப் பயன்படுத்துகின்றனர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். நாம் மீளக்குடியமர்ந்த பின்னர், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் காணிகளின்றி அன்றாடம் கூலிவேலை செய்து வாழ்ந்த 23 குடும்பங்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுக் கடன் திட்டத்தின் 250,000 ரூபாய் வீட்டுக் கடன் வழங்கப்பட்டன. எமது பிரதேசத்தில் உள்ள சிலருக்கு இந்த வீடுகள் கிடைத்துள்ள நிலையில், குறித்த வீடுகளை அமைக்க முடியாமலும் இப்போது கடன்களை கட்ட முடியாமலும் இந்த மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக அம்மக்கள் கருத்து தெரிவிக்கையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்ந்தவர்களுக்கு இலவசமாக வீட்டுத் திட்டங்களும் காணிகளும் வழங்கப்பட்டு இருக்கின்றன எனத் தெரிவித்த அரசியல்வாதிகளின் கருத்தை நம்பி நாங்கள் ஏமாந்து விட்டோம். இந்த நல்லாட்சி அரசாங்கம் இந்தக் கடன்களை இரத்துச் செய்து எங்களது வீடுகளை நாம் கட்டி முடிக்க உதவ வேண்டும் என்றனர்.




**கேள்வி:–** அரிச்சந்திரன் உண்மை மட்டும்தானே பேசுவார். இப்போது சொல்லுங்கள் தலைவர் இருக்கின்றாரா? இல்லையா..?

க.தில்லைநாதன் இலண்டன் பிரித்தானியா

**பதில்:–** இது ஆத்திகனுக்கும் நாத்திகனுக்கும் உள்ள சந்தேகம் போன்றது. கடவுள் இருக்கென்று நம்புகின்ற ஆத்திகன் தனக்கு பாதகம் வரும்போது கடவுள் இல்லையோ என்று சந்தேகப்பட்டுக்கொள்வான். கடவுள் இல்லை என்று நம்புகின்ற நாத்திகன், தன் சக்திக்கு மீறிய சம்பவம் ஒன்று நடந்துவிட்டால் கடவுள் இருக்கின்றாரோ என்று





சந்தேகப்படுவான். எனவே, ஆத்திகனாக இருந்தாலும் நாத்திகனாக இருந்தாலும் இருக்கின்றதா, இல்லையா என்று சந்தேகம் வருவது இயல்பானது.

ஆனால் இருந்தாலும் இல்லையென்றாலும் எதிரிக்கு எப்போதும் ஒரு பயம் இருக்கின்றது பாருங்கள். இருந்தாலும் இல்லையென்றாலும் போராடும் துணிவு எப்போதும் வருகின்றது பாருங்கள், இருந்தாலும் இல்லையென்றாலும் விடியல் கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்னும் இருக்கின்றது பாருங்கள். இவை இருந்தாலும் இல்லையென்றாலும் இருக்கும்.

இன்னொன்று, பொலிவியாவில் சேகுவராவின் உடலம் புதைக்கப்பட்ட இடம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து மீட்கப்பட்ட எலும்புகள் கியூபாவிற்கு மிக உயர்ந்த மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டன. அப்போது கியூபாவின் அதிபரான பிடல் கஸ்ரோ, மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். 'எங்கள் நாட்டுக்கு சே மீண்டும் திரும்பிவருகின்றார். யாரும் அவரது உடலம் வருகின்றது என்று அவரை அவமானப்படுத்தி விடாதீர்கள்' என்பதுதான் அது.

உயிர் வாழத்தான் உடல் தேவை. உடல் வாழ உயிர் தேவையில்லை. ஆனால், உடலும், உயிரும் இல்லையென்றாலும் சில மனிதர்கள் வாழ்வார்கள், வழிநடத்துவார்கள்.

உயிரிழந்து 50 வருடங்கள் கடந்தும் இப்போதும் சேயின் வழிநடத்தலில் நடப்பவர்கள் பல்லாயிரக் கணக்கில் உலகெங்கும் இருக்கின்றார்கள். எனவே, எழும் சந்தேகங்களை விடுத்து, அவரின் இலட்சிய வழியில் நடக்கப்பாருங்கள்.



**கேள்வி:–** சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவது தொடர்பில் எதுவித பிரச்சினையும் இல்லை என்று மெதகொட அபேதிஸ்ஸ தேரர் கூறியுள்ளார். இது எந்த நம்பிக்கையில்?

திருஞானம் பரிஸ் பிரான்ஸ்

**பதில்:–** இது என்ன கேள்வி? சம்பந்தன், சுமந்திரன், ஹக்கீம், பதியுதீன் போன்ற அதிமேதாவி விசுவாசிகள் தங்கள் வசம் இருக்கும்போது, இலங்கையை சிங்களவர்கள் ஆண்டாலென்ன, சிறுபான்மையினர் ஆண்டாலென்ன என்ற நம்பிக்கைதான்.

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com

தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc

குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

# உயிர்பறிக்கும் உதவிகள்!




– கந்தரதன்

யாழ். அரியாலைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை (27ம் திகதி) இடம்பெற்ற சோக சம்பவம் அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இளம் தாய் தனது 3 குழந்தைகளுடன் நஞ்சருந்தி தற்கொலை செய்துள்ளமை என்பது நினைத்துப்பார்க்க முடியாத வலியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பெண்ணின் கணவர் கடந்த 2 மாதங்களுக்கு முன் தற்கொலை செய்துகொண்டுள்ள நிலையிலேயே அவரும் இந்த முடிவை எடுத்துள்ளார் என்பதுடன் நண்பர்கள் ஏமாற்றியமையே இதற்கு முக்கிய காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றமை மேலும் தாங்கொணாத் துயராக உள்ளது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பாக



ஊடகங்கள், இணையங்கள் எங்கும் உயிரிழந்தவர்களின் குடும்ப நிழற்படம் தாங்கிச் செய்திகள் வந்தவண்ணமே உள்ளன.

புலம்பெயர் தேசங்களிலும் குறித்த சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தத் தவறவில்லை. குறித்த பெண் தனது குழந்தைகளையாவது யாரிடமும் ஒப்படைத்திருக்கலாம் என்றும், இது ஒரு முட்டாள்தனமான முடிவு என்றும் பலரும் பலவாறாகப் பேசிக்கொள்வதை காதில் கேட்க முடிந்தது.

கடந்த வாரம், இப்பகுதியில் 'திணிக்கப்படும் கடன் சுமை' எனும் தலைப்பில் நாம் இதுகுறித்து எழுதியிருந்தமை நினைவிருக்கலாம். இதன் தொடர்ச்சியாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் உயிர்களை அபகரிப்பதற்கே குறித்த கடன் சுமை திணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், உதவியாகக் கடனை வழங்குபவர்களின் உயிர்களும் பறிக்கப்படும் நிலையும் இடம்பெறத்தான் செய்கின்றது.

அதாவது, ஒரு கோடியே 17 லட்சம் ரூபா பணத்தை வாங்கியவர்கள் ஏமாற்றியதால் குறித்த குடும்பத்தைச் சேர்ந்த கணவர், தாய் மற்றும் 3 குழந்தைகள் உட்பட 5 பேர் பொட்டாசியம் அருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உட்பட தனது சிறிய தாயாருக்கும், தனது குடும்பத்தினருக்கும் கடிதம் எழுதி வைத்துவிட்டு தானும் நஞ்சருந்தி தனது குழந்தைகளுக்கும் கொடுத்து குறித்த தாய் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

யாழ்.அரியாலை ஏ.வி.வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த தற்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கிரிசாந்தன் சுனேந்திரா எனும் தாய் மற்றும் அவரது பிள்ளைகளான கிரிசாந்தன் சர்சா (வயது 4) மற்றும் இரட்டையர்களான கிரிசாந்தன் சஜித் (வயது 2), கிரிசாந்தன் சரவணா (வயது 2) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவரு-கையில், குறித்த பெண்ணின் கணவர் நகைக் கடை வேலை செய்பவர். கடந்த ஓகஸ்ட் மாதம் அவர் தற்கொலை செய்துள்ளார். தற்கொலை செய்த குடும்பத்தினர், தமது குடும்ப நண்பர்களுக்கு நட்பின் அடிப்படையில் ஒரு கோடியே 17 இலட்சம் ரூபா கடன் கொடுத்துள்ளனர். 6 மாத கால தவணையில் மீளத் தருவதாகக் கூறியிருந்தும் பணம் மீளக்கொடுக்கப்படவில்லை. வீட்டிற்கு சென்று கேட்ட போது, காசு வாங்கியவரின் உறவினரை வெளிநாட்டிற்கு அனுப்பியுள்ளனர்.

மூத்த சகோதரனிடம் கேட்டபோது, 10 இலட்சம் ரூபா தானே நான் தர வேண்டும். 'நீ செய்வதை செய்' என்று பதிலளித்துள்ளார். பணம் பெற்றுக்கொண்டவரின் மனைவியிடம் கேட்டபோது, 'நான் பொறுப்பு நின்றதற்கு என்ன ஆதாரம் உள்ளது. திரும்ப வாங்கிப் பார்' என்று கூறியுள்ளார். இதனையடுத்து யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கில் தனக்கு சாதகமான நிலை இல்லை என்பதை அறிந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் நடைபெற்ற வழக்கிற்கு சென்று வந்த கணவர் கிரிசாந்தன் தாம் குடும்பத்துடன் தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார். கணவர் முதலில் நஞ்சருந்தியுள்ளார். கணவர் துடிதுடித்ததை கண்டவர் கணவனை காப்பாற்ற முயற்சித்தமையினால் தான் நஞ்சருந்தும் எண்ணத்தை மனைவி கைவிட்டுள்ளார்.

கணவர் இறந்துபோன விரக்தியின் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை கடிதம் எழுதி வைத்துவிட்டு மூன்று குழந்தைகளுடன் தானும் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என அவரின் சிறிய தாயார் தெரிவித்தார்.

கணவர் தற்கொலை செய்து கொண்டதால்

தொடர்ச்சி 16ம் பக்கம்

# மலரும் சுதந்திர பூமியில் 3



கலாநிதி சிறீஸ்கந்தராஜா

# குருதி ஆற்றிலிருந்து சிலிர்த்தெழுந்த தேசம்

எனக்கு அருகில் இரண்டரை மணிநேரம் அமர்ந்திருந்து தமிழர்களினதும், குர்தி மக்களினதும் சுதந்திரப் போராட்டங்கள் பற்றி அளவளாவிய றிஸ்கார் அலி கமஜான் யாராக இருக்கக் கூடும் என்ற குழப்பம் என்னைப் பீடித்திருக்க, விமானத்தில் இருந்து இறங்கத் தொடங்கினேன். கீழே கண்ணாடி அணிந்தவாறு ஒருவர் நின்றிருந்தார். அவர் என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பது போன்று இருந்தது. அவரை உற்றுப் பார்த்தேன்.

சந்தேகமே இல்லை: றிஸ்கார் அலி கமஜான் தான். விமானத்தில் இருந்த பொழுது கண்ணாடி அணியாத அவர் இப்பொழுது கண்ணாடி அணிந்திருந்தார். அவரது அருகில் அவரது மெய்ப்பாதுகாவலர் நின்று கொண்டிருந்தார். எல்லாப் பயணிகளும் விமானத்திலிருந்து இறங்கி விமான நிலைய நுழைவாயிலை நோக்கி நடந்து கொண்டிருக்க, றிஸ்கார் அலியின் குடும்பத்தினர் மட்டும் அவருக்குப் பின்னால் நின்ற சொகுசு பேருந்து ஒன்றில் ஏறிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது எனக்கு ஒரு விடயம் தெளிவாகியது: றிஸ்கார் அலி ஒரு அரசியல்வாதியாக இருக்க வேண்டும்.

விமானத்துடன் இணைக்கப்பட்டிருந்த படிக்கட்டில் இருந்து நான் இறங்கிய மறுகணமே எனக்கு றிஸ்கார் அலி கைலாகு கொடுத்தார். பின்னர் என்னைக் கட்டியணைத்து, 'உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி,' என்று மீண்டும் கூறினார். அப்பொழுது நான் அவரிடம் சொன்னேன்: 'உங்கள் தொழில் என்ன என்பதை நான் கண்டுபிடித்து விட்டேன். நீங்கள் ஒரு குர்தி அரசியல்வாதி...' அப்படி நான் கூறியதும் றிஸ்கார் அலி வாய்விட்டுச் சிரித்தார். எனது தோள்பட்டையில் தன் கையால் தட்டிக் கொடுத்து விட்டு, 'விரைவில் நான் உங்களை சந்திப்பேன்,' என்று வாஞ்சையுடன் கூறினார்.



படம்: கலாநிதி இனெஸ் ஹசன் Photo : Dr Ines Hassen

அவரிடமிருந்து விடைபெற்று விமான நிலையத்தின் நுழைவாயிலை நோக்கி நான் நடக்கத் தொடங்கிய பொழுது எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த அரசறிவியலாளர்கள் எனது திசையில் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடன் கலாநிதி அடெல் பகவானும் வந்தார். என்ன நடக்கின்றது என்பது எனக்குப் புரியவில்லை. அப்பொழுது எனது கையை எட்டிப் பிடித்த அடெல் பகவான், பிரெஞ்சு மொழியில் ஏதோ கூறினார். அவரது அருகில் நின்ற கலாநிதி இனெஸ் ஹசன் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 'உங்களை அந்தப் பேருந்தில் ஏறுமாறு கூறுகின்றார்.' எனக்கு எதுவுமே புரியவில்லை. என்னுடன் வந்த எல்லா அரசறிவியலாளர்களும் இப்பொழுது றிஸ்கார் அலி அவர்களின் குடும்பத்தினர் ஏறியிருந்த சொகுசு பேருந்தில் ஏறிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது என் அருகில் வந்த கலாநிதி ஜோன்-லுஸ் ரசீன், 'அருகில் உள்ள விமான நிலைய நுழைவாயிலுக்குச் செல்வதற்கு எதற்காக நாங்கள் இந்தப் பேருந்தில் ஏற வேண்டும்?' என்று என்னிடம் புறுபுறுத்தார்.

நான் குழம்பிப் போயிருந்தேன். ஆனாலும் பேருந்தில் ஏறினேன். அந்த இருள் சூழ்ந்த வைகறைப் பொழுதில் வெளியில் மிதமாக வருடிக் கொண்டிருந்த வெப்பக் காற்று நீங்கிக் குளிர் காற்று பரவியிருந்தது.

உள்ளே நான் ஏறிய கணமே என்னை றிஸ்கார் அலி வரவேற்றார். தனக்கு அருகில் இருந்த இருக்கையை ஒதுக்கி அதில் அமருமாறு கூறினார். அப்பொழுது அடெல் பகவான் அவர்களும், றிஸ்கார் அலி அவர்களும் தமக்குள் குர்தி மொழியில் ஏதோ பேசினார்கள். ஆனால் அவர்கள் பேசும் பொழுது அடிக்கடி 'தமிழ்' என்ற வார்த்தையைப் பிரயோகித்தார்கள். அப்பொழுது அடெல் பகவான் 'தமிழிஸ்தான்' என்ற புதிய சொல்லைப் பிரயோகித்தார். அதனை றிஸ்கார் அலியும் ஆமோதித்தார். உடனே பேருந்தில் இருந்த ஏனைய குர்தி பிரமுகர்கள் ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தார்கள். பின்னர் வாஞ்சையுடன் என்னைப் பார்த்து சிரித்தார்கள். அக்கணம் ஒரு விடயம் எனக்குத் தெளிவாகப் புரிந்தது: தமிழர்கள் மீது குர்தி தலைவர்கள் நன்மதிப்பைக் கொண்டுள்ளார்கள் என்பதுதான் அது.

மீண்டும் என் கவனம் நாம் அமர்ந்திருந்த சொகுசுப் பேருந்தின் பக்கம் திரும்பியது. இப்பொழுது பேருந்து நகரத் தொடங்கியிருந்தது. ஆனால் கலாநிதி ஜோன்-லுஸ் ரசீன் அவர்கள் புறுபுறுத்தது போல் அது எல்லாப் பயணிகளும் நடந்து கொண்டிருந்த விமான நிலைய நுழைவாயிலை நோக்கிச் செல்லவில்லை. மாறாக அவர்கள் நடந்து கொண்டிருந்ததற்கு இடப்பக்கமாகப் அது பயணித்துக் கொண்டிருந்தது. அப்பொழுதுதான் அவதானித்தேன். சுலைமானியா விமான நிலையம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை விடப் பெரிதாக இருந்தது. விமான ஓடுபாதைகளும் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்தன. ஆக நான் வந்திறங்கியிருப்பது ஒரு பனானா றிபப்ளிக் அல்ல என்பது நிதர்சனமாகிக் கொண்டிருந்தது.

**குருதியாற்றில் குளித்த குர்தி மக்கள், அதிலிருந்து சிலிர்த்தெழுந்து ஒரு பிரமாண்டமான தேசத்தைக் கட்டியெழுப்பியிருப்பதைப் பார்த்த பொழுது ஒரு புறம் பெருமையாகவும் இருந்தது: மறுபுறம் குர்திஸ்தானைப் போன்று எமது தேசமும் அழிக்கப்படாமல் இருந்திருக்கும் பட்சத்தில், தென்னாசியாவில் தமிழீழம் என்ற தேசம் இப்படித்தானே ஒரு அபிவிருத்தியடைந்த நாடாக மாறியிருக்கும் என்று எண்ணத் தோன்றியது.**

மூன்று தொடக்கம் ஐந்து நிமிடங்கள் வரை பேருந்து பயணித்திருக்கும் என்று நினைக்கின்றேன். நேரம் அதிகாலை மூன்று மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. பேருந்து தனது பயணத்தை முடித்து நின்ற இடத்திலிருந்து நான் வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தேன். மின்விளக்குகளால் விமான நிலையமும், ஓடுபாதையும் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும், எமது விமானம் வந்திறங்கிய இடம் தெரியவில்லை. விமானம் இறங்கிய இடத்திலிருந்து தொலைதூரம் நாம் வந்திருப்பது புரிந்தது. அப்பொழுது என் முன்னால் இருந்த நுழைவாயிலைப் பார்த்தேன். உள்ளே ஒரு கண்ணாடிக் கட்டிடம் தெரிந்தது. ஆனால் அதற்கு வெளியில் உள்ள பகுதி வெறிச்சோடிக் கிடந்தது. எங்கு நிற்கின்றோம், என்ன நடக்கின்றது என்பது புரியவில்லை.

தானியங்கிக் கதவுகள் ஊடாகக் கண்ணாடிக் கட்டிடத்திற்குள் நுழைந்த பொழுதுதான் எனக்குப் புரிந்தது நான் நிற்பது இராசதந்திரிகளும், அமைச்சர்களும், பிரமுகர்களும் பயன்படுத்தும் பகுதி என்பது. கலாநிதி ஜோன்-லுஸ் ரசீன் அவர்களைத் திரும்பிப் பார்த்தேன். அவரது முகத்தில் அசடு வழிந்து கொண்டிருந்தது. கண்ணாடிக் கட்டிடத்திற்குள் நாம் நுழைந்த மறுகணமே எம்மை அங்கிருந்த இரண்டு குடிவரவு அதிகாரிகள் வரவேற்றார்கள். பொதுவாகக் குடிவரவு அதிகாரிகள் பயணிகளை சந்தேகக் கண்ணோடுதான் பார்ப்பார்கள். ஆனால் நான் நின்ற இடத்தில் நிலைமை அவ்வாறு இல்லை. எனது தோளில் மீண்டும் வாஞ்சையுடன் தனது கையால் தட்டி விட்டு, தனது குடும்பத்துடன் றிஸ்கார் அலி அவ்விடத்தை விட்டு அகன்றார். ஏனைய பிரமுகர்களும் சென்றார்கள்.

இப்பொழுது கலாநிதி அடல் பகவான் தலைமையிலான அரசறிவியலாளர்களைக் கொண்ட குழு மட்டுமே மிஞ்சியிருந்தது. எங்களை வரவேற்பதற்கென்று குர்தி பெண்மணி ஒருவர் காத்திருந்தார். அவரது பெயர் கலாநிதி நிக்கொலா சாலி அஸ்ரப். அவரும், அங்கு நின்ற குடிவரவு அதிகாரிகளும் எம்மை அருகில் இருந்த சொகுசு அறையொன்றுக்குள் அழைத்துச் சென்றார்கள்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# தமிழர்களுக்கு சம்பந்தர் பரிசளித்திருக்கும்....

அலாவுதீன் அற்புத விளக்கைத் தேய்த்த பொழுது அதிலிருந்து பூதம் ஒன்று கிளம்பியதாகவும், அந்தப் பூதம் அலாவுதீன் கேட்டதையெல்லாம் அள்ளியள்ளிக் கொடுத்ததாகவும் அம்புலி மாமா கதையொன்று உண்டு. அப்படித்தான் ரணில் விக்கிரமசிங்க திரைநீக்கம் செய்துவைத்த இடைக்கால அறிக்கைப் பெட்டகத்தைத் தேய்த்துப் பார்த்தால் தமிழ் மக்கள் கேட்பதையெல்லாம் அள்ளிக் கொடுக்கும் பூதம் ஒன்று அதிலிருந்து கிளம்பும் என்று எம்மவர்களில் சிலர் நம்பினார்கள்.

ஆனால் தேய்த்துப் பார்த்த பின்னர்தான் தெரிந்தது: அது காலம் காலமாகச் சிங்கள ஆட்சியாளர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்படும் அதே பழைய கறள் பிடித்த அரசியல் தீர்வுப் பெட்டகம் தான் என்று.

முதன் முதலாக 26.07.1957 அன்று சொலமன் வெஸ்ற் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்கவால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட பெட்டகம் அது. அப்பொழுது அது பண்டா-செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது. அதற்குள் இருந்தும் கிளம்பும் பூதம் தமிழர்களுக்கு வடக்குக் கிழக்கு மாநிலங்களில் அதிகாரங்களையும், மாநில மட்டத்தில் தமிழ் மொழிக்கு சம தகுதியையும் வழங்கும் என்று அன்று தமிழர்கள் எதிர்பார்த்தார்கள்.

எதிர்பார்த்தபடி பூதம் ஒன்று கிளம்பியதுதான். ஆனால் கிளம்பியது தமிழர்கள் கனவு கண்ட அற்புதப் பூதம் அல்ல. மாறாக பண்டாரநாயக்கவால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட பெட்டகத்தை எரிப்பதற்காகவென்று ஜூனியஸ் றிச்சார்ட் ஜெயவர்த்தனா கிளப்பிய சிங்கள-பௌத்த இனவாதப் பூதம்தான் அன்று வெளிப்பட்டது. சிங்கள தேசம் சன்னதம் ஆடியது. பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழிந்து போனது.



நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக நாட்கள் கழிய சிங்கள தேசத்தின் சிம்மாசனத்தில் டட்லி சேனநாயக்கா அமர்ந்து கொண்டார். மீண்டும் தீர்வுப் பெட்டகம் பற்றிய பரபரப்பு ஈழத்தீவைப் பற்றிக் கொண்டது.

24.05.1965 அன்று தனது பெட்டகத்தை டட்லி சேனநாயக்க திரைநீக்கம் செய்து வைத்தார். இதோ வந்து விட்டது டட்லி-செல்வா ஒப்பந்தம் என்று, அலாவுதீனின் அற்புத விளக்கைக் கண்ட மகிழ்ச்சியில் எம்மவர்கள் குதூகலித்தார்கள். வானத்திற்கும், பூமிக்கும் இடையில் பறந்தார்கள்.

ஆனால் பெட்டகத்தைத் தமிழர்கள் தேய்த்துப் பார்த்த பின்னர் தான் தெரிந்தது. அது பண்டாரநாயக்காவின் அதே கறள் பிடித்த பெட்டகம் என்று. டட்லி - செல்வா என்ற முலாம் அப்பெட்டகத்திற்குப் பூசப்பட்ட பொழுதும், அதிலிருந்து சிங்கள - பௌத்த இனவாதப் பூதமே கிளம்பியது.

இருபத்திரண்டு ஆண்டுகள் கழித்து ஜெயவர்த்தனாவின் முறை வந்தது. போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று 1977ஆம் ஆண்டு முழங்கிய ஜெயவர்த்தனா, புலிப்பொடியன்களுடன் போரிட முடியாமல் ராஜீவ் காந்தியிடம் தனது முதிசத்தைக் கையளித்தார்.

சிங்களக் கிளர்ச்சிக்காரர்களை வெள்ளைக்காரனுக்குக் காட்டிக் கொடுத்ததால் முதலியார் பட்டம் எடுத்த கொள்ளுப்பேரனார் வழிவந்த ஜெயவர்த்தனாவிற்குக் குள்ளநரித்தனம் பற்றியா சொல்லிக் கொடுக்க வேண்டும்? மீண்டும் 'பழைய குருடி, கதவைத் திறவடி' என்ற கதையாக ராஜீவ் காந்தியிடம் பண்டாரநாயக்காவின் கறள் பிடித்த பெட்டகத்தை ஜெயவர்த்தனா கொடுத்தார். ஆட்கள் மாறியிருந்தார்கள். காட்சிகள் மாறியிருந்தன. பெட்டகத்திற்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்றும், பதின்மூன்றாம் திருத்தச் சட்டம் என்றும் இரட்டை முலாம் பூசப்பட்டது.

ஆனால் பெட்டகத்தை ராஜீவ் காந்தி தேய்த்த பொழுது அதிலிருந்து கிளம்பிய சிங்கள-பௌத்த இனவாதப் பூதம் அவரது நடு மண்டையில் துப்பாக்கிப் பிடியால் அடிக்க முயன்றது. நல்லவேளை: அவர் சுதாகரித்துக் கொண்டு சற்று விலக, அடி அவரது தோள்பட்டையில் விழுந்தது.

**அலாவுதீன் அற்புத விளக்கைத் தேய்த்த பொழுது வெளிப்பட்ட பூதம் கேட்டதையெல்லாம் கொடுத்தது போல் மைத்திரியிடமிருந்து சம்பந்தர் என்ற மாயாவி பெற்றுத் தரப் போகும் அரசியல் தீர்வுப் பெட்டகம், தமிழர்களை இந்திரலோக வாழ்வில் இலயிக்க வைத்து விடும் என்று நம்பியிருந்த எல்லோரின் முன்னாலும் தனது கோரப் பற்களைக் காட்டியவாறு சிங்கள-பௌத்த இனவாதப் பூதம் நிற்கின்றது.**

அத்தோடு பூதம் நின்று விடவில்லை. சிங்கள தேசத்தின் சேகுவாரா என்று தனக்குத் தானே பட்டம் சூட்டிக் கொண்ட றோகண விஜயவீரவின் வடிவத்தில் சன்னதம் ஆடியது. தென்னிலங்கையில் குருதியாறு ஓடியது. மூன்று ஆண்டுகளின் பின்னர் பெட்டகமும் ஒருவாறு இறுக மூடப்பட்டது.

அடுத்தது ரணசிங்க பிரேமதாசவின் முறை. சர்வகட்சி மாநாடு என்று அவர் ஒரு பெட்டகத்தை திரைநீக்கம் செய்து வைத்தார். அதற்குள் இருந்து ரஞ்சன் விஜயவீர என்றும், டிங்கிரி பண்டா விஜேதுங்க என்றும் அடுத்தடுத்து சிங்கள - பௌத்த இனவாதம் பூதம் அவதாரமெடுத்து ஆடியது.

பிறகு சந்திரிகா அம்மையாரின் முறை. அவரைத் தொடர்ந்து ரணில். பின்னர் மகிந்தர். இப்பொழுது மைத்திரிபால சிறீசேனவின் முறை. இதில் நூதனமான விடயம் என்னவென்றால் இம்முறை சிங்கள-பௌத்த இனவாதத்தின் தனியொரு அவதாரமாக மட்டும் மைத்திரி வரவில்லை. சந்திரிகா, ரணில், மைத்திரி என்ற மூம்மூர்த்திகளாக அவர் வந்துள்ளார்.

ஆனாலும் ரணிலின் கையால் மைத்திரியார் திரைநீக்கம் செய்து வைத்திருக்கும் பெட்டகம், பண்டாரநாயக்கா திரைநீக்கம் செய்து வைத்த அதே கறள் பிடித்த பெட்டகம் தான். இடைக்கால அறிக்கை என்ற முலாம்பூசப்பட்ட இந்தப் பெட்டகத்திற்குள், தமிழர்களுக்கு சம்பந்தர் பறையடித்த அரசியல் தீர்வு என்ற தங்கப் புதையல் இல்லை என்பது வேறு கதை. ஆனால் பெட்டகம் தேய்க்கப்பட்ட மறுகணமே அதிலிருந்து அதே பழைய சிங்கள-இனவாதப் பூதம் வெறியுடன் கிளம்பியிருக்கின்றது.



புதிய அரசியலமைப்புத் தேவையில்லை என்கின்றார்கள் பௌத்த தேரர்கள். புதிய அரசியலமைப்பு ஆபத்தானது என்கின்றார் நவீன துட்டகாமினி மகிந்த ராஜபக்ச. புதிய அரசியலமைப்பை எவராவது ஆதரித்தால் அவர்களைக் கொல்லப் போவதாக நந்திக்கடல் வரை நவீன துட்டகாமினிக்காகப் படை நடத்திச் சென்ற கமால் குணவர்த்தன சபதம் எடுத்திருக்கின்றார். புதிய அரசியலமைப்பை நாடாளுமன்றம் நிறைவேற்றினால் நாடாளுமன்றம் வெடிவைத்துத் தகர்க்கப்படும் என்று முழங்கியிருக்கின்றார் இன்றைய சிங்களச் சேகுவாரா விமல் வீரவன்ச.

பிறகென்ன? சம்பந்தரின் சாணக்கியம் பண்டாரநாயக்காவின் கறள் பிடித்த பெட்டகத்தில் இருந்து காலம் காலமாகக் கிளம்பும் சிங்கள-பௌத்த இனவாதப் பூதத்தின் காலடியில் தமிழர்களை மீண்டும் கொண்டு வந்து விட்டிருக்கின்றது. அலாவுதீனின் அற்புத விளக்கைத் தேய்த்த பொழுது வெளிப்பட்ட பூதம் கேட்டதையெல்லாம் கொடுத்தது போல் மைத்திரியிடமிருந்து சம்பந்தர் என்ற மாயாவி பெற்றுத் தரப் போகும் அரசியல் தீர்வுப் பெட்டகம், தமிழர்களை இந்திரலோக வாழ்வில் இலயிக்க வைத்து விடும் என்று நம்பியிருந்த எல்லோரின் முன்னாலும் தனது கோரப் பற்களைக் காட்டியவாறு சிங்கள-பௌத்த இனவாதப் பூதம் நிற்கின்றது.

துட்டகாமினியை வயிற்றில் சுமந்த பொழுது எல்லாளனின் தளபதியின் தலையை வெட்டி, அதைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்து, அதிலிருந்து வழியும் குருதியைக் குடிப்பதற்காகத் துடித்த விகாரமாதேவியின் வழியில் தமிழ்க் குருதியை மைத்திரியார் தேய்த்த பெட்டகத்திலிருந்து கிளம்பியிருக்கும் சிங்கள - பௌத்த இனவாதப் பூதம் குடிக்குமா? அல்லது எட்டரை ஆண்டுகளுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் ஊழித் தாண்டவமாடிக் குடித்த தமிழ்க் குருதி போதும் என்ற திருப்தியில் வாளாவிருக்குமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



எது எப்படியிருந்தாலும் தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானிப்பதற்கு ஈழத்தமிழர்கள் துணிந்தாலே தவிர, சம்பந்தரும் சரி, வேறு எவராயிருந்தாலும் சரி, நாடாளுமன்ற அரசியல் ஊடாகத் தமிழர்களுக்கு வழங்கப் போவது பண்டாரநாயக்காவின் கறள் பிடித்த பெட்டகத்தையும், அதற்குள் வாழும் சிங்கள-பௌத்த இனவாதப் பூதத்தையும் தான்.

# குருதி ஆற்றிலிருந்து....

அங்கே இருந்த சொகுசு இருக்கைகளில் எம்மை சிறிது நேரம் ஓய்வெடுக்குமாறு கூறினார்கள். எமது இருக்கைகளில் நாம் அமர்ந்ததும் எமது கடவுச் சீட்டுக்களை ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக வந்து நிக்கொலா பெற்றுக் கொண்டார். அவற்றை அவரிடமிருந்து அவரது அருகில் நின்ற குடிவரவு அதிகாரி வாங்கிக் கொண்டு வெளியில் செல்ல, அடுத்த அதிகாரி எமக்குத் தேனீர், கோப்பி, குடிநீர், குளிர் பானம் போன்றவற்றைக் கொண்டு வந்து பரிமாறினார். அங்கு நின்ற எல்லோருக்குமே அது ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

இப்பொழுது நாங்கள் எங்களுக்குள் உரையாடத் தொடங்கினோம். எனது அருகில் அமர்ந்திருந்த திரு சேவியர் குய்னார்ட் என்னிடம் பேச்சுக் கொடுக்கத் தொடங்கினார். அவர் ஒரு பிரெஞ்சு அரசறிவியலாளர். பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவர். அடிக்கடி பலஸ்தீன மேற்குக்கரைக்கும், காசாவிற்கும் சென்று வருவதால் இஸ்ரேலிய அரசாங்கத்தின் கெடுபிடிகளுக்கு ஆளாகுபவர். 'நீங்கள் தமிழரா?' என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் 'ஆம்' என்ற பொழுது, சிறீலங்காவில் நீங்கள் எந்த இடம் என்று கேட்டார். நான், 'யாழ்ப்பாணம்,' என்று கூறிய பொழுது, 'யாழ்ப்பாணத்தில் எந்த இடம்?' என்று கேட்டார். எனக்கு எதுவும் புரியவில்லை. பொதுவாகத் தமிழர்கள் தான் இப்படிக் கேட்பார்கள். இவர் ஒரு பிரெஞ்சுக்காரர். இவர் ஏன் இப்படிக் கேட்கின்றார் என்று எண்ணியவாறு எனது சொந்த ஊரைக் கூறிய பொழுது, சாதாரணமாக சேவியர் கூறினார், 'நான் உங்கள் ஊருக்குச் சென்றிருக்கிறேன். அங்கு கொத்து ரொட்டியும், முட்டை அப்பமும் விரும்பி உண்டேன்.'

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'எப்பொழுது சென்றீர்கள்?' என்று கேட்டேன். தான் 2014ஆம் ஆண்டு தமிழீழம் சென்றதையும், அங்கு தான் அவதானித் தவற்றையும் என்னிடம் சேவியர் எடுத்து விளக்கினார். அப்பொழுது சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த கலாநிதி ஜோன்-லுஸ் ரசீன், என்னைப் பார்த்து வியப்புடன் கேட்டார், 'நீங்கள் தமிழரா?' என்று. இப்பொழுது நான் வியப்படைந்தேன். தமிழர் என்றதும் ஏதோ நன்கு தெரிந்த ஒரு இனத்தைப் பற்றி விசாரிப்பது போன்ற தொனியில் அவர் பேசியதுதான் நான் வியப்படைந்ததற்குக் காரணம். ஆனாலும் அதனையிட்டு அப்பொழுது நான் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

நேரம் அதிகாலை 3:15 மணியை எட்டியிருந்தது. எமது கடவுச்சீட்டுக்களுடன் வெளியில் சென்றிருந்த குடிவரவு அதிகாரி திரும்பி வந்து அவற்றை நிக்கொலாவிடம் கையளித்தார். அவரும் ஒவ்வொரு கடவுச் சீட்டாகச் சரிபார்த்து அவற்றை உரியவர்களிடம் கையளித்தார்.

இப்பொழுது எனது பயணப் பையிற்கான காத்திருப்பு. சிறிது நேரம் கழித்து இன்னுமொரு குடிவரவு அதிகாரி விமானத்தில் இருந்து இறக்கப்பட்ட எனது பயணப் பையுடன் வந்து சேர்ந்தார். அதனை நான் வாங்கிக் கொள்ள, எல்லோரும் வெளியில் நின்ற இன்னுமொரு பேருந்தில் ஏறத் தயாராகினோம். அப்பொழுதுதான் அவதானித்தேன். முன்னர் இருந்தது போன்றே விமான நிலையம் வெறிச்சோடிக் கிடந்தது. எம்முடன் விமானத்தில் வந்த நூற்றுக்கணக்கான ஏனைய பயணிகள் எவரையும் காணவில்லை. சந்தேகமே இல்லை. நாம் நின்று கொண்டிருப்பது விமான நிலையத்தின் இன்னுமொரு பக்கம் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

விமான நிலையத்தை விட்டு எமது பேருந்து வெளியில் வந்து வீதியில் ஏறிய பொழுது என்னால் நடப்பதை நம்ப முடியவில்லை. ஐரோப்பிய நாடுகள் போன்று வீதிகள் நவீனமயப்படுத்தப்பட்டு, உரிய வீதிச் சமிக்ஞை விளக்குகள், வீதி வழிகாட்டிப் பலகைகள் பொருத்தப்பட்டு காணப்பட்டன. ஏதோ புழுதி படிந்த பாலைவனத் தேசத்திற்குள் கால்பதிக்கப் போகும் கற்பனையில் இலண்டனில் இருந்து விமானம் ஏறிய எனக்கு, வீதிகளின் இரு மருங்கிலும் காணப்பட்ட மரங்களையும், புல்வெளிகளையும் பார்த்த பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் கிளிநொச்சி நகரம் இருந்த பொழுது அங்கு சென்று வந்த உணர்வே ஏற்பட்டது.

எமது பேருந்து சுலைமானியா நகருக்குள் நுழைந்த பொழுது அங்கு எழுந்து நின்ற கட்டிடங்களும், மேம் பாலங்களும் அந்நகரம் எவ்வளவு தூரம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், சுலைமானியா விடம் சிங்கள தேசத் தலைநகர் கொழும்புகூடத் தோற்றுப் போகும் என்பதையும் பறைசாற்றிக் கொண்டிருந்தன. ஒரு கணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இருந்த தமிழீழத்தின் நிர்வாகத் தலைநகர் கிளிநொச்சியை நினைத்துப் பார்த்தேன். 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஏறத்தாள இரண்டு ஆண்டுகளை எட்டிய நிலையில் 2003ஆம் ஆண்டின் இறுதியில் நான் கிளிநொச்சி சென்றிருந்த பொழுது அங்கு ஏற்பட்டிருந்த கடுகதியிலான வளர்ச்சிகளுடன் சுலைமானியா நகரை ஒப்பிட்டுப் பார்த்தேன். அப்பொழுது விமானத்தில் என்னிடம் றிஸ்கார் அலி அவர்கள் கூறியவை நினைவுக்கு வந்தன.

1991ஆம் ஆண்டு சதாம் உசேனிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, பின்னர் மேற்குலகின் ஆதரவுடன் குர்திஸ்தான் மாநிலத்தில் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிய குர்தி மக்கள், கடந்த இருபத்தாறு ஆண்டுகளில் தமது தேசத்தைக் கட்டியெழுப்பியிருந்தார்கள் என்பதை என்னிடம் விமானத்தில் வைத்து றிஸ்கார் அலி பெருமையுடன் கூறியிருந்தார். ஆம், தமிழர்களைப் போன்று குருதியில் குளித்த ஒரு தேசம் தான் குர்திஸ்தான். குருதியும், தசையுமாக ஆயிரமாயிரம் உறவுகளைத் தமது விடுதலைக்காகப் பலிகொடுத்தவர்கள் குர்தி மக்கள்.

இவ்வாறு குருதியாற்றில் குளித்த குர்தி மக்கள், அதிலிருந்து சிலிர்த்தெழுந்து ஒரு பிரமாண்டமான தேசத்தைக் கட்டியெழுப்பியிருப்பதைப் பார்த்த பொழுது ஒரு புறம் பெருமையாகவும் இருந்தது: மறு புறம் குர்திஸ்தானைப் போன்று எமது தேசமும் அழிக்கப்படாமல் இருந்திருக்கும் பட்சத்தில், தென்னாசியாவில் தமிழீழம் என்ற தேசம் இப்படித்தானே ஒரு அபிவிருத்தியடைந்த நாடாக மாறியிருக்கும் என்று எண்ணத் தோன்றியது.

இவ்விடத்தில் குர்திஸ்தானின் இன்றைய நிலவரத்தைப் பதிவு செய்வது பொருத்தமானது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் நான் குர்திஸ்தான் சென்ற பொழுது அங்கு யுத்த மேகங்கள் நீங்கி அது ஒரு அமைதியான பிராந்தியமாகவே திகழ்ந்தது. ஆனால் இப்பொழுது நிலைமை அவ்வாறு இல்லை. தனியரசுக்கான வாக்கெடுப்பை குர்தி மக்கள் மேற்கொண்டமைக்கான தண்டனையாக ஈரானிய துணைப் படைகளின் உதவியுடன் குர்திஸ்தான் நோக்கிய ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஈராக் தொடுத்துள்ளது. முதலில் குர்திஸ்தானுக்கான பன்னாட்டு விமானப் போக்குவரத்துக்களை முடக்கிய ஈராக், கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஈரானிய துணைப் படைகளின் உதவியுடன் குர்திஸ்தானின் கேர்க்குக், ருஸ் குர்மாற்றூ ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது.

இவ்விரு பகுதிகளும் தமிழீழத்தின் மணலாறு, திருகோணமலை போன்றவை. எவ்வாறு சிங்களக் குடியேற்றங்களை நிறுவி மணலாற்றையும், திருகோணமலையையும் சிறீலங்காவின் ஆட்சியாளர்கள் சிங்கள மயப்படுத்தித் தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை சிதைத்தார்களோ, அவ்வாறே கேர்க்குக், ருஸ் குர்மாற்றூ ஆகிய பகுதிகளைக் கடந்த காலங்களில் அரபுமயப்படுத்திய ஈராக், தற்பொழுது அப்பகுதிகளை ஆக்கிரமித்து, குர்தி மக்களின் தாயகக் கோட்பாட்டை சிதைக்க முற்படுகின்றது. இப்பகுதிகளை விட்டு ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கு அஞ்சி ஈராக்கிய படைகள் ஓடிய பொழுது, அவற்றை குர்தி பெஸ்மேகா வீரர்களே மீட்டெடுத்துத் தமது மக்களையும், அரபுக் குடியேற்ற வாசிகளையும் பாதுகாத்தார்கள். ஆனால் இன்று நிலைமை அவ்வாறு இல்லை. கடந்த காலத்தில் எவ்வாறு கருணாவைப் பயன்படுத்தி தென்தமிழீழத்தை சிங்களம் ஆக்கிரமித்ததோ, அவ்வாறே குர்தி அரசியல்வாதிகள் சிலரது உதவியுடன் இப்பொழுது கேர்க்குக், ருஸ் குர்மாற்றூ ஆகிய பகுதிகளை ஈராக் ஆக்கிரமித்துள்ளது. ஆனாலும் இதில் வியப்புக்குரிய செய்தி ஒன்றுண்டு.

என்னுடன் விமானத்தில் பயணித்த குர்தி சுதந்திரப் போராட்டத் தளபதிகளில் ஒருவரும், குர்திஸ்தானின் ஆளும் கூட்டணிக் கட்சியான தேசப்பற்றுள்ள குர்திஸ்தான் ஒன்றியத்தின் அரசியல்பீட உறுப்பினரும், அக்கட்சியின் வெளியுறவு விவகாரப் பொறுப்பாளருமான றிஸ்கார் அலி கமஜான் அவர்கள்தான் அக் கட்சியின் கேர்க்குக் மாநகருக்கான முதல்வர் வேட்பாளராகக் களமிறங்க இருக்கின்றார் என்பது தான் அந்தச் செய்தி. ஈராக்கிய-ஈரானிய படைகளால் கேர்க்குக் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையிலும், அங்கு துணிச்சலுடன் முதல்வர் வேட்பாளராக அவர் களமிறங்க முன்வந்திருப்பது பாராட்டுக்குரிய விடயம் என்றே கூறுவேன்.

குர்திஸ்தான் பயணம் தொடரும்...

# ஊடகங்களை அச்சுறுத்தும்....

யாழ்ப்பாணத்தின் தமிழ் ஊடகங்களுடன் தொடர்புகளையும், அச்சுறுத்தல்களையும் மேற்கொள்வதற்கும், அரசாங்கப் பணியாளர்களைக் காட்டிக்கொடுப்பதற்கும், உளவுப்பிரிவின் பயிற்சி பெற்ற இவனைத் தற்போது, வடமாகாணத்தின் சிங்கள அடக்குமுறையின் ஆளுநராக உள்ள ரெஜினோல்ட் கூரே, மற்றும் சிறீலங்கா உளவுப் பிரிவினரும் பயன்படுத்தி வருகின்றனர்.

முக்கியமாக வெளிநாட்டவர்களின் சந்திப்புக்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகளின் போது, அவற்றின் செய்திகளை, அரசாங்கச் சார்புச் செய்திகளாக வெளியிடுவதற்கான ஆணைகளை, யாழ்ப்பாண ஊடகங்களிற்கு முரளியே வழங்கி வருகின்றான். இவனின் ஆணைகள் அச்சுறுத்தல் பாணியிலேயே இருக்கின்றது. இதற்கு இணங்காதவர்கள் காணமற்போகும் ஆபத்தும் இருந்து வருகின்றது. ஆளுநரின் அனைத்துச் சந்திப்புகளிலும், அவரின் சிங்களக் காரியதரிசி சோமசிறியும், முரளியும் இணைந்தே இருப்பார்கள்.

கடந்த சில நாட்களிற்கு முன்னர் மைத்ரிபால சிறீசேன யாழ்நகரிற்கு வந்தபோது, அவரின் வருகையை எதிர்த்துக் கறுப்புக் கொடிப் பேராட்டம் நடாத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் பங்குபற்றிய அரசாங்க உத்தியோகத்தர்களின் தரவுகள், முரளியினால் சிறீலங்கா ஜனாதிபதிச் செயலகத்தின் உளவுப் பிரிவினரிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ஈடுபட்டவர்கள் மீது பழிவாங்கல் மற்றும் தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இவர்களின் பட்டியல் முரளியினால் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலின் அடிப்படையில், ஏற்கனவே நடவடிக்கைகள், அச்சுறுத்தல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவர்களின் இடமாற்ற ஆணைகள் கூட உடனடியாக வழங்கப்பட்டுள்ளன. விக்னேஸ்வரனுடன் ஆதரவாக இருக்கும் அரசாங்க உத்தியோகர்களும் இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம், யாழ்ப்பாணம் வந்த மைத்ரி சிறிசேன, யாழ் இந்துக் கல்லூரிக்குச் சென்று உரையாற்றிபோது, அங்குள்ளவர்களைக் கண்காணிப்பதற்காக முரளியும் அந்த நிகழ்வு மேடையில் இருந்துள்ளான். இந்த நிகழ்விற்கு கூரேயின், பிரத்தியேகச் செயலாளர் சோமசிறீயின் இராணுவ வாகனத்திலேயே சென்று இறங்கித் தன்னை நோக்கிய அச்சத்தை மற்றவர்களிற்கு ஏற்படுத்தி உள்ளான்.

முரளியின் பெற்றோர், ஈ.பி.ஆர்.எல்.எப் இல் வரதராஜப்பெருமாளுடனும் சுபத்திரனுடனும் நெருக்கமாக இயங்கி வந்தவர்கள். இவர்கள் முரளியை இளம் வயதிலேயே ஈ.பி.ஆர்.எல்.எப் இன் ஒட்டுக்குழுவில் இணைத்து இராணுவத்துடன் செயற்பட வைத்துள்ளனர். 90களில் வெளிவந்த ஒட்டுக் குழுக்களின் ஊடகமான கண்ணோட்டம் சஞ்சிகையில் கொழும்பிலிருந்து முரளி இயங்கி வந்துள்ளான். இவனின் தமிழினத் துரோகமானது சிறு வயதிலிருந்தே வித்திடப்பட்டு சிங்கள் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினரால் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

உளவுப் பிரிவினரால் பயிற்றுவிக்கப்பட்ட முரளி மற்றும் அவரது அணி, வெளிநாட்டில் இருந்து விடுமுறைக்காக வரும் தமிழர்களையும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது. இவர்களின் செயற்பாடுகளில் சந்தேகங்கள் ஏற்பட்டால், அல்லது இவர்களின் முன்னைய செயற்பாடுகள் தொடர்பாக தகவல்கள் கிடைக்கப் பெற்றாலோ, அவர்களின் மீதான அச்சுறுத்தல்கள் மேற்கொண்டு தாக்குதல் அல்லது படுகொலைகளை நடாத்தப்படுகின்றன. அண்மையில் வெளிநாட்டில் இருந்து சென்ற ஒருவர் பொய்க் காரணங்கள் கூறப்பட்டுச் சுட்டுக் கொல்லப்படமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு சிங்கள அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பாடுகளில் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள், வாள் வெட்டுக்குழுக்கள் என்ற பெயரில் தாக்கப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும், வருகின்றனர். இதன் பின்னணியிலும் முரளியின் காட்டிக்கொடுப்புக்களின் தரவுகள் பயன்படுத்தப்படுவது உறுதி.

கடந்த சில வாரங்களாக, யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்கள், வெளியான திரைப்படங்களிற்கான ஆரவாரங்களிலும், மது போதையில் வன்முறைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். தியாகதீபம் திலீபன் அவர்களின் முப்பதாவது ஆண்டு நினைவெழுச்சியின் போது, யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் திரைப்படக் கதாநாயகர்களின் உருவப் படங்களிற்குப் பாலாபிசேகம் நடாத்தி உள்ளனர். இப்படியான போக்கில் இளைஞர்களைத் திருப்புவதிலும், சிறீலங்கா இராணுவத்தினதும், ஜனாதிபதிச் செயலகத்தினதும் ஒட்டுக் குழுக்கள் பெருமளவில் ஈடுபட்டு வருகின்றனர். அளவிற்கு மீறிய பணத்தினை வெளிநாட்டில் இருக்கும் உறவுகள் அனுப்பி வைப்பதானது, கெட்ட பழங்கங்களிற்கு அடிமையாகும் இளைஞர்கள் முரளி போன்ற மேலும் பல துரோகிகளை உருவாக்குவதோடு, அவர்களின் ஒட்டுக்குழுக்களாக அவர்களை உள்வாங்கும் ஆபத்தும் உள்ளது என்பதை நாம் அனைவரும் ஒரு கணம் சிந்தித்தேயாக வேண்டும்.

இன்று யாழ்ப்பாணத்தில் ஊடகங்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி, அரசாங்கப் பணியாளர்களும் சரி, சிங்கள அரசின் அடக்குமுறைக்குள்ளேயே தொடர்ந்தும் வைக்கப்படுவதற்கு, முரளி போன்ற தமிழ்த்தேசியத் துரோகிகள் ஆயுதங்களாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றனர். இது தொடர்ந்தும் தமிழினத்தின் மீதான இரகசிய இனப்டுகொலையின் சாட்சியமாக இருக்கின்றது.

# கொம்யூனிஸ்ட் கட்சியின்...

மற்றவை இனிதான் நிறைவேற்றப்பட வேண்டும். சீனா நவீன மயம் என்ற புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளது. பல்லாண்டு கால கடின உழைப்பு, சீன பண்புநலன்களுடனான சோசலிசம் ஆகியவை புதிய சகாப்தத்தில் அடியெடுத்து வைத்துள்ளன. அந்த வகையில் நாம் ஒரு புதிய தோற்றத்தைப் பெற வேண்டும், அதோடு நிறைய சாதனைகளை படைக்க வேண்டும் என்பதுதான் மிக முக்கியம். அமைதியும், வளர்ச்சியும் விலை மதிக்க முடியாதவை. அவை மதிக்கப்படவேண்டும். சீன கொம்யூனிஸ்டு கட்சி பிற நாடுகளுடன் இணைந்து பணியாற்றும். இவ்வாறு அவர் கூறினார்.

இதேவேளை, சீன அதிபராக இரண்டாவது முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜின்பிங்குடன் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தொலைபேசியில் தொடர்புகொண்டு பாராட்டு தெரிவித்தார். மேலும், நவம்பர் மாதத்தில் சீனா வர ஆவலுடன் உள்ளதாக டிரம்ப் தெரிவித்தார். ஜின்பிங்குக்கு வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் உன்னும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டாவது பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சீன ஜனாதிபதி, போருக்கு முழு அளவில் தயாராக இருக்கும்படி இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளது உலகளவில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த 5 ஆண்டுக்கான பதவியை தொடங்கிய அவர், மத்திய இராணுவ ஆணையத்தின் கூட்டத்தையும், இராணுவ அதிகாரிகள் கூட்டத்தையும் கடந்த 26ம் திகதி கூட்டினார். ஜின்பிங்குக்கு எதிரான 2 மூத்த இராணுவ தளபதிகள் கலந்து கொள்ளவில்லை. இந்த கூட்டத்தில் பேசிய அதிபர் ஜின்பிங், இராணுவம் முழுமையாக கட்சிக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். போருக்கு தயார்நிலையில் இருப்பதோடு, போரில் வெற்றி பெறுவதற்கான திட்டங்களை வகுத்து வைக்க வேண்டும். பாதுகாப்புத் துறையில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும். மக்கள் விடுதலை இராணுவத்தின் எதிர்கால மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுக்க வேண்டும். 21ம் நூற்றாண்டின் உலகின் மிகச்சிறந்த முன்னணி இராணுவம் என்ற பெருமையை சீனா பெற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்கிடையே, சீனாவும், ரஷ்யாவும் ஏவுகணை எதிர்ப்பு பயிற்சியில் கூட்டாக ஈடுபட முடிவு செய்துள்ளன.

## 2018ல் உலகக் கோப்பை வெல்லும் அணிக்கு 12 மடங்கு அதிக பரிசு!

2018 கால்பந்து உலகக் கோப்பை வெல்லும் அணிக்கு 400 மில்லியன் டொலராக பரிசுத்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உலகில் அதிக மக்களால் விரும்பி பார்க்கப்படும் விளையாட்டுகளின் வரிசையில் கால் பந்து இடம்பெற்றுள்ளது. இதனால் கால்பந்து உலகக் கோப்பையும் மிகவும் பிரமாண்ட திருவிழாவாகவே கொண்டாடப்படுகிறது. 2014ல் நடந்த உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் போது, அதில் வெற்றி பெற்ற ஜேர்மானி அணிக்கு 35 மில்லியன் டொலர் பரிசாக அளிக்கப்பட்டது. இரண்டாவது இடம் பெற்ற அர்ஜெண்டினா 25 மில்லியன் டொலர் பரிசு வென்றது. அடுத்தாண்டு 2018ல் ரஷ்யாவில் உலகக் கோப்பை கால்பந்து போட்டி நடைபெற உள்ளது. இந்த போட்டியில் பங்கேற்கும் அணிகளுக்கு வழங்கப்படும் மொத்த பரிசுத் தொகை 400 மில்லியன் டொலராக உயர்த்தப்பட்டுள்ளது. வெற்றி பெறும் அணிக்கு 38 மில்லியன் டொலர் பரிசளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொடரில் 32 முன்னனி அணிகள் பங்கேற்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயிர்பறிக்கும் உதவிகள்....

இவர்களும் ஏதாவது செய்துவிடுவார்களோ என்ற பயத்தில் மிகவும் பாதுகாப்பாக பார்த்து வந்ததாகத் தெரிவித்த சிறிய தாயார், தாய் மற்றும் 3 பிள்ளைகளும் வீட்டில் தமது அறைக்குள்ளேயே இருந்து வந்துள்ளனர். சம்பவம் நடைபெற்ற அன்றைய தினம் சிறு பிள்ளைகள் அறையிலிருந்து வெளியே வந்தபோது வாய்க்குள் இருந்து நுரை தள்ளியதை கண்டதாகவும் ஏன் நுரை வருகின்றதென தேடிப் பார்த்தபோது நஞ்சருந்தியிருப்பதை தெரிந்துகொண்டேன் என உயிரிழந்த பெண்ணின் சிறிய தாயார் தெரிவித்துள்ளார்.

வீட்டில் இருந்த மேசையின் மீது கடித உறைக்குள் இட்டவாறு 3 கடிதங்களையும் உறவினர்கள் எடுத்துள்ளனர். அதில் தனது நிலைமைகள் குறித்தும் அந்த கடிதத்தில் விவரித்துள்ளார்.

அந்தக் கடிதங்கள் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மற்றும் தற்கொலை செய்து கொண்டவரின் சிறிய தாயார் உட்பட தனது பெற்றோருக்குமாக எழுதி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

*அன்புள்ள அம்மா, அப்பா, அண்ணா, தம்பி, அன்ரா.... என்னை மன்னியுங்கள். பிறந்தவர்கள் யாவரும் இறப்பவர்களே. ஒன்றைமட்டும் நினைந்து மனதை ஆறுதல் படுத்துங்கள். உங்கள் பிள்ளையின் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றினீர்கள் என்று. வாழ்ந்த வருடங்கள் குறைவானாலும் நான் இறைவனின் அனுக்கிரகத்தை பெற்றவள். காரணம் நான் உங்களுடன் வாழ்ந்த வாழ்வும் நிறைவானதே. 1000 குறைகள் சூழ இருந்தும் அவையாவும் ஒரு தூசிக்கு சமன் ஆக வைத்து மேலோங்கிய அன்பைத் தந்து என் புருசன் தந்த வாழ்வும் நிறைவானதே. ஒரே ஒரு கவலைதான் நாங்கள் குடும்பமாக நீடித்த காலம் வாழ ஆசைப்பட்டோம். இறுதிவரை அதற்காகப் போராடினோம் முடியவில்லை. போகின்றோம். என்ரை அம்மாவைக் கவனித்துக்கொள்ளுங்கள். என்னை விட என் புருசன் அவவை இறுதிக் காலம் வைத்துப்பாதுக்காக்க ஆசைப்பட்டார். அதுவும் முடியவில்லை. நாங்கள் போகின்றோம்.*

*அன்புடன் பவா, பேரப்பிள்ளைகள்.*

*என்னுடையதும் என் பிள்ளைகளினதும் இறுதிச் சடங்கை என் வீட்டார் நடத்தவேண்டும். எக்காரணம் கொண்டும் என் கணவர் வீட்டுப் பகுதிக்குக் கொடுக்கவேண்டாம். இதுவே எனது விருப்பம். தேவைப்பட்டால் இக்கடிதத்தைக் காட்டி பொலிசாரிடம் எப்பிரச்சினையும் இல்லாமல் எம் மரண வீட்டை மிகவும் எளிமையாக மேளம் போஸ்மோட்டம் இல்லாமல் உடனடியாக எடுக்கவும்.*

*அன்பு மகள் சுனேத்திரா (பவா)*

*மேன்மை தங்கிய நீதிபதி இளஞ்செழியன் அவர்களுக்கு!*

*எனது தாழ்மையான வணக்கம், எனது பெயர் திருமதி கிரிசாந் சுனேத்திரா. எனது கணவர் கடந்த 03.07.2017 அன்று ரூபா 1கோடி 17 இலட்சம் கொடுத்து ஏமாந்த காரணத்தால் தற்கொலை செய்திருந்தார். என் கணவர் இல்லாத வாழ்க்கையை என்னால் வாழ முடியவில்லை. என் கணவர் ஒரு வீல் கதிரையில் உட்கார்ந்து எம்முடன் வாழ்ந்தால் கூட போதும் என வேண்டினேன். பலன் கிடைக்கவில்லை. பிள்ளைகளுக்காக வாழ்வோம் என்றாலும் என் பிள்ளைகளின் கேள்விக்கு என்னால் பதில் கூற முடியவில்லை.*

*அப்பா எப்போ வருவார்?*

*அப்பா கண்திறந்துட்டாரா? எப்போ பார்ப்பார்? ஏன்வரவில்லை? காதுல களட்டிட்டாரா டொக்ரர்? போஸ்ட் மோட்டத்தில் தந்தையைப் பார்த்துட்டு எங்கட அப்பா வெள்ளைதானே ஏன் கறுத்தவர்? வெள்ளையா வருவாரா? அப்பா வர நாங்கள் பாக்குக்கு போவம்.*

*அடுக்கடுக்கான என் பிள்ளைகளின் கேள்விகளுக்கு என்னால் பதில் கூற முடியவில்லை. எத்தனை காலம் ஏமாற்றுவது? .......!*

என மனதை உலுக்கும் அக்கடிதம் தொடர்ந்து செல்கின்றது.

சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனை செய்யப்பட்டன.

இவ்வாறு பல தமிழ் குழந்தைகளின் கேள்விகளுக்கு பதில் மரணங்கள் தானா? உரியவர்களே விடை உங்களின் மனங்களில்தான். சிந்தியுங்கள் செயற்படுங்கள்.

(சூறையாடல்கள் தொடரும்)

# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## 27 ஆண்டுகளின் பின் ஈராக் – சவுதி இடையே விமான சேவை

ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு 27 ஆண்டுகளுக்கு பிறகு நேரடி விமான சேவையை சவுதி அரேபியா தொடங்கியுள்ளது. ஈராக் அதிபர் சதாம் உசைன் 1990ம் ஆண்டு குவைத் மீது படையெடுத்தார். அப்போது ஏற்பட்ட வளைகுடா போரில் இருந்து இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவை நிறுத்தப்பட்டது. தற்போது சதாம் உசைன் அழிக்கப்பட்டு புதிய ஆட்சியாளர்களின் கையில் நாடு சென்றதன் பின்னர், ஈராக்குடன் நெருங்கிய தொடர்புகள் வைத்துக்கொள்ள சவுதி அரேபியா விரும்பியது. இதனை அடுத்து சவுதி அரேபியாவின் உயர் தலைவர்கள் சிலர் ஈராக்கிற்கு பயணம் மேற்கொண்டனர்.

இதனை தொடர்ந்து இரு நாட்டு உறவு துளிர்விடத் தொடங்கியதை பிரதிபலிக்கும் வகையில் சவுதி அரேபியாவின் விமான சேவை நிறுவனமான பிளைனாஸ், ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு நேரடி விமான சேவையை தொடங்கியுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் வர்த்தக உறவை புதுப்பிப்பதற்கான முயற்சியாக இந்த விமான சேவை தொடங்கப்பட்டுள்ளதாக ஈராக் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே 1990ல் மூடப்பட்ட அரார் பகுதியில் உள்ள தரைவழி எல்லையை மீண்டும் திறக்கவும் சவுதி அரேபியா திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சிங்கப்பூரில் கார் விற்பனைக்கு கடும் கட்டுப்பாடு

அடுத்த ஆண்டு முதல் கார் விற்பனைக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்க சிங்கப்பூர் அரசு முடிவு செய்துள்ளது. வாகனங்களின் விலை அதிகமாக உள்ள நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் ஒன்றாக உள்ளது. இருப்பினும், அங்கு ஏற்பட்டுள்ள இட நெருக்கடியை கருத்தில் கொண்டு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் கார் விற்பனையை கட்டுக்குள் கொண்டு வர அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. 2016ம் ஆண்டு நிலவரப்படி 6 இலட்சத்துக்கும் அதிகமான தனியார் கார்கள் சிங்கப்பூர் சாலைகளில் வலம் வருகின்றன. இந்நிலையில், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் சாலைகளில் தனியார் வாகனங்களின் இயக்கத்துக்கு கட்டுப்பாடுகள் விதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், பொதுபோக்குவரத்து அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் சாலை போக்குவரத்து ஆணையம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. புதிய வாகனங்கள் விற்பனைக்கு கூடுதல் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தவும் கார்கள் மட்டும் அல்லாது உந்துருளிகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கவும் சிங்கப்பூர் முடிவு செய்துள்ளது. சிங்கப்பூர் நாட்டில் வாகனம் வாங்குவது அவ்வளவு எளிதான விடயம் அல்ல. ஒருவர் கார் வாங்க விரும்பினால், 10 ஆண்டுகள் செல்லுபடியாக கூடிய உரிமச்சான்றிதழை அரசிடம் இருந்து பெறவேண்டும். இந்த சான்றிதழ் பெற மட்டுமே சுமார் 3700 டொலர்கள் வரை கட்டணம் செலுத்த வேண்டும். மேலும், தனியார் கார்களுக்கு அதிக வரியும் வசூலிக்கப்படுகிறது.



## 1.2 மில்லியன் கார்களை திரும்பப் பெறுகிறது நிசான்!

ஜப்பானின் பிரபல கார் தயாரிப்பு நிறுவனமாக நிசான் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 1.2 மில்லியன் கார்களை திரும்பப் பெற முடிவு செய்துள்ளது. உலகின் பல நாடுகளிலும் நிசான் தனது கார் உற்பத்தி மையங்களை நிறுவியுள்ளது. இங்கு ஏராளமான கார்கள் உற்பத்தி செய்யப்படுகிறன. இந்நிலையில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஜப்பானில் வெளியான கார்களை திரும்பப் பெற நிசான் நிறுவனம் முடிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில் ஒக்டோபர் 2014 முதல் செப்டம்பர் 2017 வரை உற்பத்தி செய்யப்பட்ட 1.2 மில்லியன் கார்களை நிசான் நிறுவனம் திரும்பப் பெறுகிறது. ஜப்பான் அரசு நடைமுறைப்படுத்தியுள்ள கார்களின் தரம் தொடர்பான அளவுக்கு நிசான் நிறுவனத்தின் இந்தக் கார்கள் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக 3ஆம் தனிநபர் குழுவை வைத்து விசாரணை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்த சிக்கல்களுக்கு ஜப்பான் மக்களிடத்தில் நிசான் நிறுவனம் மன்னிப்புக் கோரியுள்ளது. அத்துடன் விற்பனை செய்யப்பட்ட கார்களை மீளத் தரத்துடன் வழங்குவதற்கும் இணங்கியுள்ளது. இதேவேளை, இதன்காரணமாக நிசான் நிறுவனத்தின் சந்தை மதிப்பு ஜப்பான் நாட்டில் கடுமையாகச் சரிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும், வெளிநாடுகளில் அதன் கார் விற்பனை சரிவைச் சந்திக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.


தமிழீழ தேசிய
மாவீரர் நாள்
பிரான்சு
Journée des Héros
27.11.2017
திங்கட்கிழமை
நேரம் 12 :30
நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம் அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.
-தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள்-
இடம்: EUROSITES LES DOCKS DE PARIS
50 Avenue du Président Wilson,
93210 La Plaine Saint Denis
Aubervilliers Front Populaire 12
BUS 153 302 Pont Hainguerlot
தொடர்புகளுக்கு:
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு
0143150421

பிரான்சு துயிலும் இல்லத்தில்

# லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் 21 வது ஆண்டு வணக்க நிகழ்வு!

பரிசில் 26.10.1996 அன்று படுகொலைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் லெப்.கேணல் நாதன், ஈழமுரசு பத்திரிகையின் நிறுவக ஆசிரியர் கப்டன் கஜன் ஆகியோரின் 21 ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு, இம் மாவீரர்கள் விதைக்கப்பட்டுள்ள ஒபர்வில்லியே பன்தன் துயிலும் இல்லத்தில் கடந்த (26) பகல் 15.00 மணிக்கு இடம் பெற்றது. பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். மாவீரர்களுக்கான ஈகச்சுடரினை ஏற்றி மலர்மாலையினை கப்டன் கஜனின் சகோதரர்கள் அணிவித்தனர். அகவணக்கத்தைத் தொடர்ந்து சுடர்வணக்கமும், மலர் வணக்கமும் இடம் பெற்றது.



சிறப்புரையினை தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பரப்புரைப் பொறுப்பாளர் திரு. சத்தியதான் ஆற்றினார், அவர் தனதுரையில் சர்வதேச நிதிப்பொறுப்பாளராக இருந்து லெப்.கேணல் நாதன் ஆற்றிய பங்குகள் குறித்தும், கவிதை, இசை, நாடகம், ஆகிய துறைகளில் இருந்து ஈழமுரசின் பத்திரிகை ஆசிரியராக பரணமித்த கப்படன் கஜனின் செயற்பாடு குறித்தும் விபரித்தார்.

# போராட்டத்தையும், தியாகங்களையும் குழிதோண்டிப் புதைக்க அனுமதிக்க மாட்டோம்

கடந்த 25.10.2017 அன்று, ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் முன் தமிழினப்படுகொலைக்கு அனைத்துலக விசாரணையை வலியுறுத்தி சிங்களப் பேரினவாத அரசால் தமிழர்கள் என்ற காரணத்தினால் பொய் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நீதிமன்று முன் நிறுத்தப்படாது தடுத்து வைத்திருக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் கவனயீர்ப்பு நடைபெற்றது. 2009 ம் ஆண்டு அனைத்துலகத்தின் பரிந்துரையைக் கேட்டு ஆயுதங்களை மௌனித்து இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த போராளிகளையும் பொது மக்களையும் இலங்கை இராணுவம் என்ன செய்தது? தொடரந்தும் காணமல் ஆக்கப்பட்டோரின் நிலைமை என்ன? தமிழர் பாரம்பரிய நிலங்கள் இன்னும் சிங்கள பேரினவாத






இராணுவம் ஆக்கிரமித்துக்கொண்டே இருக்கின்றது. சிங்கள பேரினவாத அரசின் பொய்ப்பரப்புரையை நம்பி இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட ஐரோப்பிய ஒன்றியம் துணை போய் விட்டது. தமிழினம் பாதுகாக்கப்பட ஒரே ஒரு தீர்வு தமிழீழம் தான். போன்ற கோசங்களுடன் நூற்றுக்கணக்கான தமிழீழ மக்கள் தாயக மக்களுக்கு வலுச் சேர்ந்திருந்தனர்.

அனைத்துலகம் இனியும் பொறுமை காக்காது தமிழீழத்தை அங்கீகரித்து இன்று உலகத்தில் தமது விடுதலைக்காகப் போராடி விடுதலையடைந்துள்ள நாடுகள் போன்று எமது தமிழீழத்தையும் அங்கீகரித்து எம்மையும் எமது நிலத்தையும் பாதுகாக்க வழி செய்யுமாறு கோரப்பட்டது. 70 ஆண்டுகளாக நடைபெறும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் இந்தப் போராட்டத்திற்கான தியாகங்களை குழிதோண்டிப் புதைக்க அனுமதிக்க மாட்டோம் என்று கூறியும் சிங்கள பேரினவாத அரசால் நிறைவேற்றப்படுகின்ற யாப்புகள் எதுவும் எமக்கு விடுதலையைப் பெற்றுத்தராது எனக் கூறியும் சிறீலங்கா அரசினால் நிறைவேற்றப்பட்ட இடைக்கால அரசியல் யாப்பும் கிழித்தெறியப்பட்டது. இவ்வாறான கவனயீர்ப்புகள் உலகெங்கும் நடாத்தப்படவேண்டும் என்று அறைகூவி நிகழ்வு நிறைவுக்கு வந்தது.

பிரான்சில் ...

# குமரப்பா, புலேந்திரன், சந்தோசம் மாஸ்ரர், நாதன், கஜன் நினைவு வணக்க நிகழ்வு!

சிறீலங்கா இந்திய கூட்டுச்சதியால் பலாலியில் வீரகாவியமாகி திருவில் தீயில் சங்கமமாகிய மூத்த தளபதிகளான லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல் குமரப்பா மற்றும் லெப்.கேணல் சந்தோசம் மாஸ்ரர், பரிசு மண்ணில் வீரகாவியமான சர்வதேச நிதிப் பொறுப்பாளர் லெப்.கேணல் நாதன், ஈழமுரசு பத்திரிகையின் நிறுவக ஆசிரியர் கப்டன் கஜன் உட்பட ஒக்டோபர் மாதத்தில் தமிழீழ விடுதலைப்போரில் வீரகாவியமாகிவிட்ட மாவீரர்களின் நினைவு வணக்க நிகழ்வு பரிசின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான இவிறியில் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு, இவிறி தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக கடந்த 28.10.2017 அன்று இடம் பெற்றது.










அரங்கநிகழ்வுகளாக நொய்சிலி குறோண்ட் தமிழ்ச்சோலை மாணவிகள், சோதியா கலைக்கல்லூரி மணவிகள், சேர்ஜி தமிழ்ச்சோலை மாணவிகள், இவிறி தமிழ்சோலை மாணவிகள் பங்கு பற்றிய எழுச்சி நடனங்களும், இவிறி தமிழ்ச்சோலை மாணவியின் கவிதையும் இடம் பெற்றது. சிறப்புரையினை தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் உறுப்பினர் திரு பொ.பாலசுந்தரம் ஆற்றினார். அவர் தனதுரையின் போது இவிறி தமிழ்சங்கம் தமது தமிழ்ச் சோலை மாணவர்களை இந்நிகழ்வில் பங்குபற்றவைத்தது எமது வருங்காலச் சந்ததியினர் இந்நிகழ்வு பற்றி தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைந்தது என்று தெரிவித்தார்.



# கொம்யூனிஸ்ட் கட்சியின் அசைக்கமுடியாத தலைவராக மாவோ சேதுங்குக்கு இணையானார் ஜனாதிபதி ஜின்பிங்



உலக நாடுகள் அனைத்திலும் அரசின் கட்டுப்பாட்டில்தான் இராணுவம் உள்ளது. ஆனால், சீனாவில் மட்டும் அது தலைகீழ். ஆளும் கொம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் இராணுவம் உள்ளது. கட்சியை வழி நடத்த, 7 தலைவர்கள் கொண்ட நிலைக்குழு உள்ளது. இந்த உறுப்பினர்கள் எண்ணிக்கையை 5 ஆக குறைக்க ஜின்பிங் முயற்சித்தார். ஆனால், முன்னாள் தலைவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், தனது முயற்சியில் ஜின்பிங் தோல்வி அடைந்தார்.

இச் சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் 19வது மாநாடு கடந்த 18ம் திகதி மிகப் பிரமாண்டமாக இடம்பெற்றது. இம்மாநாட்டின் முடிவில் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் (64 வயது), நவீன சீனாவின் நிறுவுநரான மாவோ சேதுங்குக்கு இணையாக, சீனாவின் ஆளுங்கட்சியான கொம்யூனிஸ்ட் கட்சியால் அங்கிகரிக்கப்பட்டுள்ளார். கட்சியின் யாப்பில், சேதுங்கைப் போன்றே ஜனாதிபதி ஜின்பிங்கும் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே, சீன ஆளுங்கட்சியின் வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி ஜின்பிங்குக்கு இக்கௌரவம் வழங்கப்பட்டது. கொம்யூனிஸ்ட் கட்சியின் யாப்பில், புதிய யுகத்துக்கான சீனப் பண்பியல்புகளுடன் கூடிய சமூகவுடைமை குறித்து, ஜின்பிங் எண்ணினார் என்ற சொற்றொடரைச் சேர்ப்பதற்கு, ஏகோபித்தமான ஆதரவும் வழங்கப்பட்டது. அத்துடன், அவர் நாட்டின் ஜனாதிபதியாக மேலும் 5 ஆண்டுகள் பதவி வகிப்பதற்கு கட்சியின் தேசிய மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கட்சியின் யாப்பில் ஜனாதிபதி ஜின்பிங் தனது பெயரைச் சேர்க்க முடியுமா என்பது தான், முக்கியமான எதிர்பார்ப்பாக இருந்தது. இது, அவரது அதிகாரத்தின் அளவை அளவிடுவதற்கான ஒரு கருவியாகக் கருதப்பட்டது. இதன்மூலம், ஏற்கனவே உச்சபட்ச அதிகாரத்தைக் கொண்டுள்ள அவர், வரலாற்று ரீதியாகவும் முக்கியமான ஒருவராக மாறுவதற்கான வாய்ப்புக் காணப்படுவதாகக் கருதப்பட்டது. இந்நிலையில் தான், அந்தக் கௌரவம் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநாட்டில் பங்கேற்றிருந்த 2,287 கொம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரதிநிதிகளிடம் கேள்வி எழுப்பப்பட்டது. யாருக்கேனும் இதை சீன கொம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் சாசனத்தில் சேர்ப்பதில் ஆட்சேபம் இருக்கிறதா? என்று கேட்கப்பட்ட போது, அனைவரும் ஒருமித்த குரலில், யாருக்கும் ஆட்சேபம் இல்லை என்று பதில் அளித்தனர். நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் கைகளை உயர்த்தலாம் என்று ஜின்பிங் அறிவித்தபோதும், யாரும் அவ்வாறு செய்யவில்லை. உடனே அவர், ஒரு புதிய சகாப்தம் தொடங்குகிறது, சீன மக்களுக்கும், நாட்டுக்கும் ஒரு மாபெரும், ஒளிமயமான எதிர்காலம் வரப்போகிறது என்று மகிழ்ச்சி பொங்க குறிப்பிட்டார்.

சீன கொம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்தே அவரது பெயர் சேர்க்கப்பட்டது. அவரது சித்தாந்தமும் யாப்பில் இணைக்கப்பட்டது. சீன அதிபர் ஜீ ஜின்பிங்கின் அரசியல் சித்தாந்தம் பாடசாலைக் கல்வி பாடத் திட்டத்தில் விரைவில் சேர்க்கப்படும் என்று கல்வித்துறை அமைச்சர் சென் பாவோ ஷெங் அறிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது காணப்படும் யாப்பில், இன்னும் சில முக்கியமான மாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டன. இதன்படி, இராணுவத்தை மேவிக்கொண்டு, கட்சியின் தலைமைத்துவமே அதிக அதிகாரத்தைக் கொண்டிருக்கும் என்பதுவும், ஊழலுக்கெதிரான போர் தொடரும் என்பதும், ஜனாதிபதி ஜின்பிங் கொண்டு வந்த ஒரு பட்டை ஒரு பாதை அபிவிருத்தித் திட்டம் தொடரும் என்பதுவும் உட்பட, சில மாற்றங்களே ஏற்படுத்தப்பட்டன.



கொம்யூனிஸ்ட் கட்சியின் 7 தலைவர்கள்

2012ம் ஆண்டு இறுதியில், கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஸி ஜின்பிங், அடுத்தாண்டே ஜனாதிபதியாகத் தெரிவானார். ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்தார். இதனால் ஊழலுக்கு எதிரான இவருடைய நடவடிக்கையில் 10 இலட்சம் அரசு ஊழியர்கள் தண்டிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து, அதிகாரத்தைத் தக்கவைப்பதில் கவனஞ்செலுத்திவரும் அவர், ஓராண்டுக்கு முன்னர், உள்ளகத் தலைவர் என்ற, உயர் கௌரவத்தை, கட்சியில் பெற்றுக் கொண்டார். தற்போது, கட்சியின் யாப்பிலும் அவரது பெயர் இணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கட்சியின் நிறுவனரான மாசேதுங், அவரை தொடர்ந்து தலைமைப்பதவிக்கு வந்த டெங் ஜியாவோபிங் ஆகியோருக்கு சமமான இடத்தை ஜின்பிங் பெற்றுவிட்டார். கட்சியில் அவருக்கு எதிர்ப்பே இல்லாத நிலை உருவாகி உள்ளது. இதன் மூலம் இனி வரும் காலங்களிலும் அவர் அனைத்து அதிகாரங்களும் படைத்த தலைவராக வலம் வருவார். அடுத்து 2022ம் ஆண்டு நடக்க உள்ள சீன கொம்யூனிஸ்டு கட்சி மாநாட்டிலும் மீண்டும் ஜின்பிங் அதிபராகவும், கட்சி தலைவராகவும் வருவது உறுதியாகி உள்ளது.

இம்மாநாட்டில், புதிய உறுப்பினர்களை பத்திரிகையாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து ஜின்பிங் பேசினார். அப்போது அவர், கடந்த 5 ஆண்டுகளில் நாங்கள் மிகப்பெரிய செயல்திட்டம் ஒன்றை உருவாக்கினோம். அவற்றில் பல இலக்குகள் நிறைவேறி உள்ளன.

தொடர்ச்சி 16ம் பக்கம்

# நாயுடன் நடுகடலில் ஐந்து மாதங்கள்! தனியாக தத்தளித்த பெண்கள் மீட்பு

அமெரிக்காவிற்கும் தாய்வானுக்கும் இடையில் இருக்கும் கடல் பகுதியில் திசை தெரியாமல் கடந்து ஐந்து மாதங்களாக கடலிலேயே மாட்டிக்கொண்டு இருந்திருக்கிறார்கள் அமெரிக்காவை சேர்ந்த இரண்டு பெண்கள். ஐந்து மாதம் முன்பு தனிப் படகில் சுற்றுலா சென்ற பொது இவர்கள் படகு வழி மாறியிருக்கிறது. இந்த நிலையில் ஐந்து மாதங்களாக நடுக்கடலில் தனியாக மாட்டிக்கொண்டுள்ளார்கள்.

மிகவும் ஆபத்தான கடலில் கடந்த மே மாதத்தில் இருந்த இருக்கும் இவர்கள் தற்போது அமெரிக்க கப்பற்படையால் மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் செல்லமாக வளர்த்த நாயும் இவர்களுடன் மீட்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமெரிக்காவை சேர்ந்த ஜெனிபர் மற்றும் டா'ா என்ற இரண்டு பெண்மணிகள் கடந்த மே மாத தொடக்கத்தில் விடுமுறையை கழிப்பதற்காக அமெரிக்காவில் இருந்து பசுபிக் கடலில் இருக்கும் தஹிதி என்ற தீவுக்கு செல்ல முடிவு எடுத்து இருக்கின்றனர். இதை மிகவும் வித்தியாசமாக செய்ய முடிவு செய்த இவர்கள் சொந்தமாக சிறிய ரக கப்பல் ஒன்று வாங்கி அதில் சென்று இருக்கின்றனர். புறப்பட்ட முதல் நாளே



ஜெனிஃபரின் கைபேசி கைதவறிக் கடலில் விழுந்து மூழ்கியது. அத்துடன் பயணம் செய்தபோது ஏற்பட்ட சீரரற்ற காலநிலையால் கடல்நீர் இநய்திரத்திற்குள் புகுந்து வேலை செய்யாமல் நின்றுவிட்டது. அத்துடன், கப்பலின் உச்சிக் கோபுரமும் சேதமடைந்தது. இதனால் தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டது.

வர்கள் நின்றிருந்த கடல் பகுதி சுறா மீன்களுக்குப் பிரசித்தி பெற்றது. சுறாக்கள் இவர்களது படகை அடிக்கடி தாக்கின. எனினும், அவற்றால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. வேறு வழியின்றி துடுப்பால் வலித்துப் பயணத்தைத் தொடர்ந்தனர். இதன்காரணமாக அவர்கள் எப்படி திரும்பி செல்வது என தெரியாமல் குழம்பிப் போய் இருக்கிறார்கள். ஐந்து மாதம் கடலில் பயணம் இந்த நிலையில் அவர்கள் கைகளால் துடுப்பு போட்டு அப்படியே கரைக்கு சென்று விடலாம் என முடிவு செய்து துடுப்பு போட்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சென்ற கப்பலின் திசை மாறி அதற்கு எதிர் திசையில் இருக்கும் தாய்வான் கடல் பகுதிக்கு சென்றுள்ளது.

இதன் காரணமாக நடுக்கடலில் கடந்த ஐந்து மாதங்களாக தத்தளித்து இருக்கின்றனர். இவர்களுடன் இவர்கள் அழைத்து சென்ற நாய் ஒன்றும் மாட்டிக் கொண்டு இருக்கின்றது. சுமார் ஆறு மாதங்களுக்குத் தேவையான உணவுகளைப் படகில் களஞ்சியப்படுத்தியிருந்தனர். ஆனால், குடிநீர் இல்லாமல் இவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு இருக்கின்றனர். இந்த நிலையில் இரண்டு நாட்களுக்கு முன்பு இவர்கள் தாய்வான் கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டனர். இதையடுத்து அவர்கள் தாய்வான் கடல்துறைக்கு தகவல் அளித்து அதன்மூலமாக அமெரிக்க கப்பற் படைக்கும் தகவல் சென்று இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

# ஒபாமாவின் காதல் கடிதம் வெளியீடு

அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா தற்போது ஓய்வில் இருந்து வருகிறார். இவரது மனைவி மிச்செலி. இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். ஒபாமா தனது இளம் வயதில் கல்லூரியில் படித்த போது முதன்

## 2015ல் 360,000 பேர் நீரில் மூழ்கி பலி

2015ம் ஆண்டு மட்டும் உலகம் முழுவதும் 3 இலட்சத்து 60 ஆயிரம் பேர் நீரில் மூழ்கி உயிரிழந்திருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேவேளை, இந்தியாவில் ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் 80 பேர் என்ற அடிப்படையில் ஆண்டு



தோறும் 29 ஆயிரம் பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பதாக இந்திய தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

## சீனாவின் சாதனை!

ஆட்டிபிசியல் இன்ரெலிஜென்ற் தொழிநுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட ரோபோக்கள் ஒலிபரப்பட்ட பாடல்களுக்கு ஒரே மாதிரி நடனம் ஆடி உலக சாதனை படைத்துள்ளன. சீனாவில் கடந்த 23ம் திகதி 1069 ரோபோக்கள் ஒன்றாக சேர்ந்து ஒரே மாதிரி நடமாடி கின்னஸ் சாதனை படைத்துள்ளன.



இதற்கு முன்பு இதேபோல் 1007 ரோபோக்கள் சீனாவில் 2016ம் ஆண்டு நடனமாடி சாதனை படைத்தன. அதனை இது முறியடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாடிய டிரம்ப்!

அமெரிக்காவில் வெள்ளை மாளிகையில் இந்தியர்களுடன் அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தில் பங்கேற்



றார். டிரம்ப்பின் மகள் இவான்க்காவும் பங்கேற்ற இந்த விழாவில் அவரது நிர்வாகத்தில் தலைமை பொறுப்புகளை வகித்துவரும் இந்திய அமெரிக்க அதிகாரிகளான நிக்கி ஹாலே, ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதர் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த இந்திய பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். அவர்களிடையே பேசிய டொனால்ட் டிரம்ப், அமெரிக்கா மற்றும் உலகிற்கு இந்திய அமெரிக்கர்கள் அளப்பரிய பங்களிப்பை ஆற்றிள்ளதாக குறிப்பிட்டார்.

## கூகுள் உதவியுடன் வேற்றுக் கோள்களிலும் உலா வரலாம்!

கூகுள் வரைபடம் (கூகுள் மப்) கொண்டு பூமியை மட்டுமல்லாமல்

→ 20

சூரிய குடும்பத்தில் இருக்கும் மற்றைய கோள்களையும் தெளிவாக பார்க்க முடியும் என கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த வசதிகளை பெற்ற கூகுள் மப்பின் புதிய செயலி விரைவில் வெளியிடப்பட இருக்கிறது. இந்த புதிய செயலி எப்படி இருக்கும் என மொத்த உலகமும் தற்போதே எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டது. இந்த புதிய செயலியை (அப்ளிகேஷன்) செல்பேசியிலும், கணினியிலும் எப்போதும் போல பயன்படுத்தலாம் என கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்காக தனியாக எதுவும் உபகரணம் வாங்க வேண்டியது இல்லை எனவும் கூறியுள்ளது.

விண்வெளியில் இருக்கும் கோள்களை அனைவரும் இரசிக்கும் பொருட்டு இந்தச் செயலி வெளியிடப்பட இருப்பதாக கூறப்படுகிறது. மிக துல்லியமாக அனைத்தையும் காணலாம் அதுமட்டும் இல்லாமல் அருகில் உள்ள துணைக் கோளான நிலா, செவ்வாய், புதன், வியாழன் போன்ற கோள்களின் மேற்பரப்பை மிக துல்லியமாக பார்க்க முடியும் என கூறப்படுகிறது. அத்துடன், தொலைவில் உள்ள புளூட்டோ, நெப்டியூன் போன்ற கோள்களின் மேற்பரப்பையும் பார்க்கலாம் என கூறப்படுகிறது.

## ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு 15 நாடுகள் தேர்வு

ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபையின் புதிய உறுப்பினர்களாக 15 நாடுகள் தேர்வாகியுள்ளன. நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. பொதுச்சபையில் இதற்கான தேர்தல் நடைபெற்றது. வருகிற ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 2020ம் ஆண்டு வரையிலான உறுப்பினர் பதவிக்கான தேர்தல் ஆகும். இந்த தேர்தலில், மனித உரிமைகள் சபைக்கு ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், அங்கோலா, அவுஸ்திரேலியா, சிலி, கொங்கோ, மெக்சிக்கோ, நேபாளம், நைஜீரியா, பெரு, கட்டார், செனகல், ஸ்லோவாக்கியா, ஸ்பெயின் மற்றும் உக்ரைன் ஆகிய 15 நாடுகள் தேர்வாகியுள்ளன.

## உலகின் முதல் முப்பரிமாண பாலம் திறப்பு

முப்பரிமாண (3டி) அச்சுத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பல பொருட்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தற்போது நெதர்லாந்தில் முப்பரிமாண தொழில்நுட்பம் மூலம் பாலம் உருவாக்கப்பட்டுள்ளது. அது ஸ்மார்ட் என்ற இடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 800 அடுக்குகளால் ஆன பொருட்களால் இந்த பாலம் உருவாக்



கப்பட்டுள்ளது. இதன் மொத்த நீளம் 8 மீற்றர். மேலும் இந்த பாலம் 40 பாரவண்டிகளையும் ஒரே நேரத்தில் தாங்கும் அளவு வலிமை வாய்ந்தது என கூறப்பட்டுள்ளது. இதனை உருவாக்க 3 மாத காலம் ஆனதாகவும், இதற்கு சாதாரண பாலத்தை உருவாக்கும் செலவில் பாதிதான் ஆனது என்றும் நெதர்லாந்து பொறியியலாளர்கள் குழு தெரிவித்துள்ளது.

முறையாக அலெக்ஸ்சாண்ட்ரா என்ற பெண்ணை காதலித்தார். 1980ம் ஆண்டுகளில் அவருக்கு பல கடிதங்கள் எழுதியுள்ளார். அவற்றில் 9 கடிதங்கள் மட்டும் காதல் கடிதங்கள் ஆகும். அதில் அலெக்ஸ்சாண்ட்ராவை உருகி உருகி வர்ணித்து இருக்கிறார். அதன் மூலம் அவரின் தீவிர காதலை புரிந்து கொள்ள முடியும். இக்கடிதங்கள் 30ற்கும் அதிகமான பக்கங்கள் கொண்டது. இவை அனைத்தும் அட்லாண்டா பல்கலைக்கழகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதற்கான அனுமதியை ஒபாமா தனது குடும்பத்துடன் கலந்து பேசி வழங்கி இருக்கிறார். மேலும், இக்கடிதங்களில் தான் பட்ட பொருளாதார கஷ்டங்கள், கறுப்பினராக பிறந்ததால் பட்ட துயரங்கள், அவருக்கு ஏற்பட்ட காதல் தோல்விகள், என அனைத்தையும் எழுதியுள்ளார்.

## அமைச்சரின் முட்டாள் தனத்தைக் கேட்டு வாய்விட்டு சிரித்த புட்டின்

இந்தோனேசியாவுக்கு பன்றி இறைச்சியை ஏற்றுமதி செய்ய தனது விவசாயத்துறை அமைச்சர் வழங்கிய ஆலோசனையை கேட்டு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வாய்விட்டு சிரித்தார். விவசாயத் துறை கூட்டம் ஒன்றில் பங்கேற்ற ஜனாதிபதி புட்டினிடம், அந்நாட்டின் விவசாயத்துறை அமைச்சர் அலக்சாண்டர் டசெவ், நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்க, உலகின் அதிக



முஸ்லிம்கள் வாழும் இந்தோனேசியாவுக்கு பன்றி இறைச்சியை ஏற்றுமதி செய்யும் ஆலோசனையை வழங்கினார்.

ஜேர்மனி வருடமொன்றுக்கு 5.5 மில்லியன் தொன் பன்றி இறைச்சியை உற்பத்தி செய்கிறது. அதில் 3 மில்லியன் தொன் பன்றி இறைச்சியை சீனா தொடக்கம் இந்தோனேசியா, ஜப்பான், கொரியா என்று ஏற்றுமதி செய்கிறது என்று டசெவ் குறிப்பிட்டார். அப்போது சிரித்தபடி பதிலளித்த புட்டின், இந்தோனேசியா ஒரு முஸ்லிம் நாடு. அவர்கள் பன்றி இறைச்சி உண்பதில்லை என்றார். எனினும், அவர்கள் சாப்பிடுகிறார்கள் என்று டசெவ் கூறியபோது, இல்லை, அவர்கள் சாப்பிடுவதில்லை என்று பதில் கூறிய புட்டின் சிரிப்பை அடக்க முடியாமல் முகத்தை மறைத்துக் கொண்டார். தான் தென் கொரியாவுக்கு பதில் இந்தோனேசியாவின் பெயரை குறிப்பிட்டுவிட்டதாக அமைச்சர் பின்னர் சமாளித்துக்கொண்டார்.

## பெண்களுக்கு பாதுகாப்பே இல்லாத நகரங்கள்!

உலகில் பெண்களுக்கு பாதுகாப்பே இல்லாத நகரங்கள் எது என்ற பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. உலகில் உள்ள முக்கிய நகரங்களில் எந்த நகரங்கள் எல்லாம் பெண்கள் வாழ தகுதியற்ற நகரங்கள் என்பதை ஆராய்வதற்கான ஆய்வு ஒன்றை தொம்சன் ரியூட்டர்ஸ் பவுண்டேன் என்ற தனியார் நிறுவனம் நடத்தியது. ஐ.நா சபையால் குறிப்பிடப்பட்டுள்ள அதிக மக்கள் தொகை கொண்ட முதல் 19 பெரும் நகரங்களில் இந்த நிறுவனம் ஆய்வு நடத்தியது.

ஒரு நகரத்தில் பெண்கள் எவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறார்கள், அவர்களின் பொருளாதார நிலை எப்படி இருக்கிறது, அவர்களின் கல்வி நிலை எப்படி இருக்கிறது, அவர்கள் எந்த வகையில் இன்னல்களுக்கு ஆளாகிறார்கள், மேலும் அந்தப் பகுதியில் பெண்கள் இதற்கு முன் எத்தனை முறை தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள், என்பதையெல்லாம் கருத்தில் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில் இந்த நிறுவனம் பாதுகாப்பற்ற நகரங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. வெளிவந்துள்ள இந்த ஆய்வு முடிவுகள் மிகவும் அதிர்ச்சி அளிப்ப

# 90 மில்லியன் டொலர் செலவில் மன்னரின் மரணச் சடங்கு

தாய்லாந்தின் காலஞ்சென்ற முன்னாள் மன்னர் பூமிபோல் அதுல்யதேஜின் மரணச் சடங்குகளை சுமார் 90 மில்லியன் டொலர் செலவில் அந்நாட்டு அரசு



நடத்தியுள்ளது. மன்னர் பூமிபோல் அதுல்யதேஜ் கடந்த ஆண்டு ஒக்டோபர் 13ம் திகதி 88 வயதில் காலமானார். தாய்லாந்தில் 70 ஆண்டுகளுக்கும் மேலாக மன்னராக இருந்தவர் இவர்தான் என்ற பெருமையை பெற்றவர் பூமிபால்.இவர் 1946ம் ஆண்டு, யூன் 9ம் திகதி முடிசூட்டப்பட்டார். 9ம் ராமர் என அழைக்கப்பட்டார். கடவுளுக்கு நிகராக மதிக்கப்பட்டவர். மரணமடைந்த அவரது உடல் அந்நாட்டு மன்னர்குல வழக்கப்படி ஓராண்டு காலத்தின் பின் எரித்துப் பின் புதைக்கப்படும். அதன்படி, கடந்த 26ம் திகதி அவரது உடல் எரிக்கப்பட்டது.



இதேவேளை, கடந்த ஓராண்டாக மன்னரின் இறுதிக் கிரியைகளுக்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வந்தன. ஐந்து நாள் நிகழ்வாக நடத்தப்பட்ட இந்த இறுதிக் கிரியைகளுக்காக, ஆடம்பர அலங்காரங்கள் செய்யப்பட்டன. இதற்காக, சுமார் 90 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக தகன மேடையை அமைக்கும் பணியில் அந்நாட்டு அரசு ஈடுபட்டிருந்தது. அவரது சாம்பல் புதைக்கப்பட்டுள்ள இடத்தில் தங்கத்தில் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன. தாய்லாந்தின் அயல் நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட தலைவர்கள், அரசியல்வாதிகள் உட்பட சுமார் மூன்று இலட்சம் பேர் இந்த இறுதி நிகழ்வில் கலந்துகொண்டனர்.



இராணுவத்தினர் மன்னரின் உடலை கொண்டு வரும்போது அளிக்க வேண்டிய மரியாதைக்காக பலமுறை ஒத்திகையில் ஈடுபட்டிருந்தனர். அவரை கடைசியாக பார்த்துவிட வேண்டும் என மன்னரின் உடல் கொண்டுவரப்படும் வழிநெடுகிலும் மக்கள் கடந்த ஒரு வாரமாக மழை மற்றும் வெயிலைப் பொருட்படுத்தாமல் வந்து அங்கு காத்துக்கிடந்தனர்.

இந்நிலையில் அலங்கரிக்கப்பட்ட தங்கத்தேரில் மன்னர் பூமிபாலின் உடல் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. அப்போது வழி நெடுகிலும் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கறுப்பு உடையணிந்து மன்னருக்கு இறுதியாக கண்ணீர் அஞ்சலி செலுத்தி பிரியாவிடை கொடுத்தனர். மன்னரின் உடல் தகனத்தையொட்டி தாய்லாந்து நாட்டில் பொது விடுமுறை விடப்பட்டிருந்தது. அங்கு அனைத்து அலுவலகங்களும், கல்வி நிறுவனங்களும், வணிக நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன. இறுதிச்சடங்கு நிகழ்ச்சிகளில் மன்னரின் குடும்பத்தினருடன், பிரித்தானியா, டென்மார்க், பெல்ஜியம், ஜப்பான், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் 40 நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதில் கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்பட்டன. இறுதிச்சடங்கை யாரும் செல்பி எடுக்க கூடாது என கடுமையாக எச்சரிக்கப்பட்டது.

முன்னதாக, மன்னர் பூமிபால அதுல்யதேஜின் உடல் கடந்த ஓராண்டு காலமாக அரண்மனையில் வைக்கப்பட்டிருந்தபோது அஞ்சலி செலுத்த வந்தோரின் எண்ணிக்கை சுமார் 1.2 கோடி என்று கூறப்படுகிறது. வஜிரலோங்கோன் புத்த மத வழக்கப்படி இரவு 10 மணிக்கு மன்னர் உடலுக்கு அவரது மகனும், புதிய மன்னருமான வஜிரலோங்கோன் தீ மூட்டினார். பின்னர் மன்னரின் அஸ்தி ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, வாட் ராஜ போபித் மற்றும் வாட் பவராணிவேஸ் புத்த கோவில்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் என தகவல்கள் கூறுகின்றன. மன்னர் உடல் தகனம் முடிந்து விட்டதால், இனி முறைப்படி புதிய மன்னராக வஜிரலோங்கோன் முடி சூட்டப்படுவார். அவர் 10ம் ராமர் என்று அழைக்கப்படுவார்.

# தனிநாடாக அறிவித்தது கத்தலோனியா

## ஸ்பெயினுடன் பல்வேறு நாடுகள் எதிர்ப்பு

ஸ்பெயின் நாட்டின் முக்கிய மாகாணங்களில் ஒன்றாக தன்னாட்சியுரிமையுள்ள மாகாணமாக இருந்த கத்தலோனியா, கடந்த 27ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் தன்னை தனிநாடாக அறிவித்துக்கொண்டது. ஸ்பெயின் நாட்டின் பொருளாதாரத்தில் கத்தலோனியா மாகாணம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன் தலைநகரமாக பார்சிலோனா விளங்குகிறது. ஸ்பெயின் நாட்டின்



மக்கள் தொகையில் 16 சதவீதம் பேர் இங்கு வாழ்கிறார்கள். நாட்டின் ஏற்றுமதியில் 25.6 சதவீத பங்களிப்பை இந்த மாகாணம்தான் செய்கிறது.

ஸ்பெயினின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் கத்தலோனியாவின் பங்கு 19 சதவீதம் ஆகும். ஸ்பெயினுக்கு வருகிற அந்நிய நேரடி முதலீட்டில் 20.7 சதவீதம் இந்த மாகாணத்துக்குப் போகிறது. இந்த மாகாணத்தில் கூடுதல் சுயாட்சி உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும், ஸ்பெயின் அரசியல் சட்டம் அதை தனி நாடாக அங்கீகரிக்கவில்லை. அங்கு கடந்த 5 ஆண்டுகளாக தங்கள் தலையெழுத்தை தாங்களே நிர்ணயித்துக்கொள்வதற்காக சுயநிர்ணய அதிகாரம் (தனி நாடு) வேண்டும் என்ற உணர்வு தலைதூக்கி வந்தது. ஆனால் ஸ்பெயின் ஒற்றுமையாளர்கள், கத்தலோனியா அதிகாரமிக்க தன்னாட்சி மாகாணமாக திகழ்கிறதே போதும் பிரிந்து செல்லக் கூடாது என்று வலியுறுத்திவந்தார்கள்.




இந்நிலையில், ஸ்பெயினில் இருந்து பிரிந்து தனி நாடாக செயல்படுவது தொடர்பாக ஒக்டோபர் முதலாம் திகதி அங்கு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், ஸ்பெயினில் இருந்து பிரிந்து தனிநாடாக செயல்படுவதற்கு அம்மாகாண மக்கள் 90 சதவீதத்துக்கும் மேல் ஆதரவு தெரிவித்தனர். இதை ஸ்பெயின் அரசு அங்கீகரிக்கவில்லை. அந்த நாட்டின் அரசியல் சாசன கோர்ட்டும் அங்கீகாரம் தரவில்லை. அதை மீறி வாக்கெடுப்பு நடத்தப்பட்டதாகக் கூறியது.

கத்தலோனியா அரசின் நடவடிக்கையினால் ஸ்பெயினில் கடும் விமர்சனங்கள், எதிர்ப்புக்கள் எழுந்த நிலையில், ஸ்பெயினில் இருந்து அதிகாரப்பூர்வமாக பிரிவதாக கத்தலோனியா நாடாளுமன்றம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. கத்தலோனியா நாடாளுமன்றத்தில் ஸ்பெயினில் இருந்து விடுதலை தொடர்பான மசோதா தாக்கலானது. 135 இடங்களை கொண்ட அவையில் 70 பேர் கத்தலோனியா தனிநாடு பிரகடனத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்கள், 10 பேர் எதிர்ப்பு தெரிவித்து வெளியேறினர். இரண்டு பேர் அவைக்கு வரவில்லை.

ஸ்பெயின் அரசின் உத்தரவுகள் எங்களை கட்டுப்படுத்ததாது என தெரிவித்த கத்தலோனியா அதிபர் கார்லஸ், கத்தலோனியா விடுதலை பிரகடனத்தில் மட்டும் கையெழுத்திட்டார். இதனையடுத்து கத்தலோனியாவின் தன்னாட்சி அதிகாரத்தை பறிப்பது தொடர்பாக ஸ்பெயின் நாடாளுமன்றம் நடவடிக்கையை தொடங்கியது. தனிநாடாக பிரகடனம் செய்து கொண்ட கத்தலோனியாவின் அரசை கலைப்பதாக ஸ்பெயின் அறிவித்துள்ளது.

ஸ்பெயின் பிரதமர் ரஜோய், கத்தலோனியாவில் சட்டம், ஜனநாயகம் மற்றும் நிலைத்தன்மை திரும்ப நேரடி ஆட்சி அவசியமானது என அந்நாட்டு நாடாளுமன்ற செனட் சபையில் தெரிவித்தார். சுதந்திரம் பெற்றதாக கத்தலோனியா அறிவித்துள்ள நிலையில் ஒருங்கிணைந்த ஸ்பெயின் ஆதரவாளர்கள் அமைதி காக்கும்படி கோரிக்கை விடுத்துள்ள ரஜோய், சட்டப்பூர்வமாக கத்தலோனியா ஸ்பெயினுடையதாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, தனிநாடாக பிரகடனம் செய்த கத்தலோனியா மீண்டும் ஸ்பெயினுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என அருகிலுள்ள பிரான்ஸ் உட்பட ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்தி வரும் நிலையில், மெக்சிக்கோ, கொலம்பியா உள்ளிட்ட தென் அமெரிக்க நாடுகளும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளன. இது பற்றி பேசிய கொலம்பிய அதிபர், ஒருங்கிணைந்த ஸ்பெயின் தான் தங்களது விருப்பம் என்றார். இது உலகநாடுகள் அனைத்திற்கும் பொருந்தும் என்றார்.

தாக உள்ளது. பெண்களுக்கு பாதுகாப்பற்ற நகரங்களின் முதல் இடத்தில் எகிப்தின் தலைநகர் கெய்ரோவும், இரண்டாம் இடத்தில் பாகிஸ்தான் தலைநகர் கராச்சியும், மூன்றாம் இடத்தில் கொங்கோ நாட்டின் தலைநகர் கின்ஷொஷாவும் இருக்கின்றன. இந்திய தலைநகர் டில்லி பெண்கள் வாழ தகுதியற்ற நகரங்கள் பட்டியலில் 4வது இடத்தில் இருக்கின்றது. இதேவேளை இந்தப் பட்டியலில் ஜப்பானின் தலைநகர் டோக்கியோ உலகிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான முதல் நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 110 கோடி பேர் கண் பார்வை இன்றி அவதி

உலக வங்கியின் வளர்ச்சி திட்டங்களை கண்டறிதல் என்ற அமைப்பு சமீபத்தில் சர்வதேச நாடுகளில் ஆய்வு மேற்கொண்டபோது, அதில் 110 கோடி பேர் கண் பார்வை இன்றி அவதிப்படுவதும் அடையாளம் இன்றி தவிப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு காரணம் உலக மக்களில் பெரும்பாலானோருக்கு சுகாதாரம் மற்றும் கல்வி அறிவு இல்லாததே என கண்டறியப்பட்டுள்ளது. ஆபிரிக்கா மற்றும் ஆசியா கண்டங்களில் கண் பார்வையற்றவர்கள் அதிகம் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும் பார்வையற்றவர்களில் மூன்றில் ஒரு பங்கு பேர் குழந்தைகள். இங்குள்ள பெரும்பாலான நாடுகளில் வறுமை, வன்முறை, ஆயுத கலாசாரம் மற்றும் வளர்ச்சியின்மை நிலவுவதால் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் போதுமான ஊட்டச்சத்து கிடைப்பதில்லை. அதனால் குழந்தைகளும், பெரியவர்களும் பார்வை இழப்பதாக ஆய்வில் கூறப்பட்டுள்ளது. சீனா உள்ளிட்ட பல நாடுகளில், குழந்தைகளின் பிறப்பை பதிவு செய்யாத காரணத்தால் குழந்தைகளின் உடல்நலம் குறித்த முழு தகவலும் அறிய முடிவதில்லை என உலக வங்கி தெரிவித்துள்ளது.

## நாட்டு மக்களுக்காக ஒன்றுகூடிய 5 முன்னாள் அதிபர்கள்

சமீபத்தில் அமெரிக்காவை ஹார்வி, இர்மா எனும் இரண்டு புயல்கள் அடுத்தடுத்து தாக்கியது. இதனால் அதன் கடலோர மாகாணங்கள் பெரிய அளவிலான சேதத்தைச் சந்தித்தன. பல இலட்சம் மக்களின் அன்றாட வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமெரிக்க அர



சாங்கம் விரைவாக சீரமைத்து வருகிறது. இதற்கு பல்வேறு சமூக அமைப்புகளும் தங்களின் பங்களிப்பை அளித்து வருகிறது. இந்நிலையில், புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைக்க நிதி திரட்டும் பிரமாண்ட நிகழ்ச்சி அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் கடந்த 21ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர்கள் 5 பேர் பங்கேற்றதுதான் தனிச்சிறப்பாக அமைந்தது. மக்களுக்கான நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் அமெரிக்காவைச் சேர்ந்த 5 முன்னாள் அதிபர்களும் மக்களுக்காக ஒன்று கூடி நிதி திரட்டினர். அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்ட இந்நிகழ்வுக்கு Deep From the Heart: The One America Appeal" என்று பெயரிடப்பட்டிருந்தது.

இதில், ஜிம்மி கார்டர், பில் கிளிண்டன், ஜோர்ஜ் ஏச்.டபிள்யூ. புஷ், ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், பராக் ஒபாமா ஆகிய 5 முன்னாள் அமெரிக்க அதிபர்களும் ஒரே மேடையில் கலந்துகொண்டு புயல் பாதிப்புக்கான நிவாரண நிதி திரட்டினர். இவர்களில் ஜோர்ஜ் டபிள்யு புஷ், ஜோர்ஜ் ஏச்.டபிள்யு. புஷ் ஆகிய இருவரும் குடியரசு கட்சியினர். மற்ற 3 பேரும் ஜனநாயக கட்சியினர். இதன்மூலம் மொத்தம் 31 மில்லியன் டொலர்கள் புயல் நிவாரண நிதியாக திரண்டதாக விழா ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## கனடாவில் கருணைக் கொலை

கனடாவில் கடந்த ஓராண்டில் மட்டும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கனேடியர்கள் கருணைக்கொலை செய்யப்பட்டுள்ளதாக ஒரு அறிக்கை தெரிவிக்கின்றது. கருணைக்கொலை செய்யப்பட்ட அனைவரும் வைத்தியர்களின் உதவியுடன் சட்டபூர்வமாக தங்களது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக அவ் அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. குறித்த விடயம் தொடர்பாக கனேடிய சுகாதார நிறுவனம் தெரிவிக்கையில், பெரும்பாலும் புற்றுநோயால் அவதிப்பட்டு வருபவர்களே இவ்வாறு உயிரிழப்பதாகக் கூறியுள்ளனர். வைத்தியர்களின் உதவியுடன் உயிரை மாய்த்துக் கொள்ளும் நடவடிக்கை 2016ம் ஆண்டு கனடாவில் சட்டபூர்வமாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியில் புதுவித பாலியல் தொழிலாளிகள்!

ஜேர்மனியில் புதுவித பெண் பாலியல் தொழிலாளிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் பாலியல் உறவுக்கு ஆண், பெண் சிலிக்கான் பொம்மைகளை பயன்படுத்தும் வழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வரும் நிலையில், முழுக்க முழுக்க பொம்மைகள் கொண்ட விபச்சார விடுதி ஒன்றை ஜேர்மனியில் உள்ள 29 வயது பெண் ஒருவர் டோட்மூண்ட் நகரில் ஆரம்பித்துள்ளார். ஜேர்மனியின் முதல் பொம்மை விபச்சார விடுதி என்று அழைக்கப்படும் இந்த விடுதியை எவலின் ஸ்வார்ஸ் என்பவர் தொடங்கியுள்ளார். இந்த விடுதியில் 11 வகையாக விதவிதமான பெண்களின் பொம்மைகள் உள்ளது. நிறம், உயரம், மார்பளவு, இடுப்பளவு என ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவில் உள்ளது. ஆசிய நாடொன்றில் இருந்து ஒவ்வொன்றும் 1786 ஈரோக்கள் பெறுமதியில் இறக்குமதி செய்துள்ளார். 30 கிலோ நிறைகொண்ட இந்தப் பொம்மைகளை ஒரு மணி நேரத்திற்கு 80 ஈரோக்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளார். ஜேர்மனியில் இருந்து மட்டுமின்றி பக்கத்து நாடுகளில் இருந்தும் வாடிக்கையாளர்கள் இந்த பொம்மைக்காக வருவதாகவும், அவர்களில் ஒருசிலர் உயர் பதவியில் உள்ளவர்கள் என்றும் எவலின் ஸ்வார்ஸ் கூறியுள்ளார்.

## ரொபோவுக்கு குடியுரிமை

உலகிலேயே ரொபோவுக்கு முதன் முறையாக குடியுரிமை வழங்கிய நாடு என்ற பெருமையை சவுதி அரேபியா பெற்றுள்ளது. பல்வேறு நாடுகளில் வாழும் வெளிநாட்டினருக்கு குடியுரிமை கிடைப்பதில் கடும் பிரச்சினையும், சிக்கலும் உள்ளது. இந்நிலையில் சவுதி அரேபியா பெண் ரொபோவுக்கு குடியுரிமை வழங்கியுள்ளது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. சோபியா என பெயரிடப்பட்ட அந்த ரொபோவை ஹொங்கொங்கின் ஹன்சன் ரொபோடிக் நிறுவனத்தை சேர்ந்த டேவிட் ஹன்சன் வடிவமைத்துள்ளார். இது பெண் போன்று மிக இனிமையாக பேசுகிறது. மனிதர்கள் கேட்கும் கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் இந்த ரொபோ வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ரோபோ அமெரிக்க நடிகை ஆட்ரி ஹெப்பர்ன் போன்ற தோற்றத்தில் உள்ளது. சவுதி அரேபியா அரசின் குடியுரிமை பெற்ற பின் சோபியா ரோபோ செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்தது.

# தமிழர் பகுதிகளில்...

அவ்வாறு முகாமிற்கு அருகில் உள்ள அரிசி ஆலையில் நிலைகொண்டிருந்த போது வைக்கப்பட்ட புத்தர் சிலை கட்டடமும் இன்னும் அகற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறுதான் திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலளார் பிரிவிலுள்ள சாம்பல்தீவு எனும் கிராமத்தில் ஆக்கிரமிப்புப் படைகளினால் வைக்கப்பட்ட இவ்வாறான சிறியளவிலான கூடாரத்தினை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பொதுமக்கள் அகற்ற முற்பட்டபோது பௌத்த துறவி தலையிட்டு பெரிய பிரச்சினையை ஏற்படுத்தியமையும் கவனிக்கப்படவேண்டியது.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச செயலளார் பிரிவிலுள்ள மாணிக்கமடு ஒதுக்குப்புறமாகவுள்ள தமிழர் பிரதேசத்தில் காணப்படும் மயாக்கல்லி மலையில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் புத்தபெருமானின் சிலையை வைத்துள்ளனர். இது சிறுபான்மை மக்களின் பிரச்சினை. இதன் பின்னாலிருப்பது ஆக்கிரமிப்பு என்பது தெளிவான விடயம். நிலத்தை ஆக்கிரமிப்பதற்கான ஒரு ஆரம்ப நடவடிக்கையாகத்தான் பார்க்கவேண்டும். தமிழர்களின் காணிகளை முஸ்லிம்கள் ஆக்கிரமிப்புச் செய்தார்கள். தற்போது எல்லைக்கற்களாக புத்தசிலை வைக்கப்பட்டு பௌத்தர்களினால் ஆக்கிரமிப்புச் செய்யப்படுகிறது.

புத்தர் சிலை வைப்பதற்கு சில பேரினவாத சக்திகள் எடுத்துள்ள முயற்சியானது வலிந்து வம்புக்கு இழுப்பதாகும். ஆட்களே இல்லாத மாணிக்கமடுவில் எதற்கு புத்தர் சிலைகளை வைக்கவேண்டும். இவற்றுக்கு கையை கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்த காக்கிச்சட்டைக்காரர்கள், மாணிக்கமடுவில் சிலை வைக்கும் போது உற்சாகமாக பூரண அனுசரணை வழங்கிக் கொண்டிருந்தார்கள். கடந்த ஆட்சியாளர்கள் கற்றுக்கொண்ட பாடங்களை இந்த ஆட்சியாளர்களும் கற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் வரக்கூடாது.

இவற்றில் இன்னுமொரு விடயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும் கிழக்கு மாகாணசபை இயங்கிக் கொண்டிருந்த காலத்தில் நல்லிணக்கம் எனக் கூறிக்கொள்ளும் அரசாங்கத்தில் இவ்வாறான அநியாயங்கள் நடந்தது. எனவே, கடந்த அரசாங்கம்போல, இந்த அரசாங்கமும் கூறுவதொன்று நடத்துவதொன்று.

இதிலிருந்து மாகாணசபைகளுக்கு சட்டமும் ஒழுங்கும் கிடைக்கக்கூடாது என்பதில் பேரினவாத சக்திகள் ஒருமித்து செயற்படுவதை தெட்டத்தெளிவாக அவதானிக்கலாம். தமிழர்களும், முஸ்லிம்களும் மாகாணசபையை கைப்பற்றி எங்களுக்குரிய காணி, காவல்துறை அதிகாரங்களை தட்டிக் கேட்கின்ற அதிகாரம் வழங்கக்கூடாது என்பதில் பௌத்ததுறவிகளும் தெளிவாகவுள்ளனர்.

இவற்றுக்கெல்லாம் நடவடிக்கை எடுப்பது யார்? நிச்சயமாக இவ்விடயத்தில் தனிப்பட்டவர்களின் நடவடிக்கை என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. அத்துடன், இவ்விடயத்தில் சிவில் அமைப்புக்களின் பங்களிப்பு மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் கவனிப்பும் இன்றியமையாதது. எனவே, தமிழ் பேசும் அரசியல் தலைவர்கள் ஒருமித்து நடவடிக்கை எடுக்கப்பட்டால் பேரினவாத சக்திகளின் அடாவடி அட்டூழியங்களுக்கு முடிவுகட்டலாமே தவிர, இல்லாவிட்டால் தமிழர்களுக்கு மாத்திரமல்ல தமிழ் பேசும் முஸ்லிங்களுக்கும் எதிர்காலத்தில் இருப்புக்களில் ஆபத்து ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## மைத்திரி ஆட்சியில்...

இதைவிட, பருத்தித்துறை, மன்னார், முல்லைத்தீவு கடற்பிரதேசங்களில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்களும் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கடற்படையால் தாக்கப்பட்டனர்.

மீனவர்களைத் தாக்குகின்ற கடற்படையினர், அவர்கள் வைத்திருக்கின்ற மீன்கள், வலைகள் உள்ளிட்ட கடற்றொழில் உபகரணங்களை பறித்துச் செல்கின்றனர். இவ்வாறு பறித்துச் செல்லப்படுகின்ற கடற்றொழில் உபகரணங்களைப் பயன்படுத்தி பலாலி, முல்லைத்தீவு சாளைக் கடற்பரப்புகளில் கடற்படையினர் கடற்றொழில் செய்கின்றனர்.

வெளியே கூறினால், இனிமேல் தொழில் செய்ய முடியாது எனக் கடற்படையினர் எச்சரிப்பதால் தமிழ் மீனவர்கள் கடலில் தாக்கப்படும் பல சம்பவங்கள் வெளித்தெரியாமல் மறைக்கப்படுகின்றன.

இவற்றைவிட, இராணுவப் புலனாய்வாளர்கள் எனக் கூறப்படும் தமிழ்க் கோடரிக் காம்புகளால் இன்றும் தமிழ் இளைஞர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இதன் பிந்திய துன்பமாகவே அரியாலை இளைஞன் மீதான படுகொலை அமைந்திருக்கின்றது.

அரியாலை உதயபுரத்தைச் சேர்ந்த டொன் பொஸ்கோ டெஸ்மன் (வயது-25) என்ற இளைஞர் இராணுவப் புலனாய்வாளர்களாலேயே சுட்டுக்கொல்லப்பட்டார் என தகவல்கள் கசிந்துள்ளன. கடற்றொழிலாளியான இவரைக் கொலை செய்யவேண்டிய அவசியம் எவருக்கும் இல்லை. இவ்வாறு, தமிழர் தேசத்தில், தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படும் சம்பவங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. நல்லாட்சி அரசு என்றும், ஜனநாயக ஆட்சி என்றும் உலகுக்கு தன்னை பறைசாற்றிக்கொண்டிருக்கும் சிங்கள அரசு தமிழர் தேசத்தில் அராஜக ஆட்சியையே நடத்திக்கொண்டிருக்கின்றது என்பதற்கு இவற்றைவிட வேறு ஆதாரங்கள் தேவையில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து தமிழ் மக்களுக்கு ஜனநாயக விடுதலையைப் பெற்றுக் கொடுத்துள்ளோம் என சர்வதேச இராஜதந்திரிகளுக்கு மைத்திரி அரசு பிரச்சாரப்படுத்திக்கொண்டிருக்கின்ற நிலையில், அதை மறுத்துரைத்து, தமிழர் தேசத்தில் நடைபெறும் உண்மைச் சம்பவங்களை உலகுக்கு அம்பலப்படுத்தவேண்டிய பெரும் பணி இன்று எங்கள் முன் இருக்கின்றது.

குறிப்பாக, புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற தமிழ்த் தேசியப் பற்றாளர்கள், தமிழீழ செயற்பாட்டாளர்கள் நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றுவதன் மூலமே சிங்கள அரசின் பொய்யான பிரச்சாரத்தை முறியடிக்க முடியும்.

ஒற்றையாட்சித் தேசத்தை மீண்டும் பிரகடனப்படுத்தி, அதற்குள்வைத்து தமிழ் மக்களைத் தொடர்ந்தும் நசுக்குவதற்கு சிங்கள அரசு வெளிப்படையாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. இது பாரிய பொறி என்பதைத் தெரிந்தும், தமிழ்த் தலைமைகள் அதற்குள் விழுந்து கிடக்கின்றன. மீட்சி பெற வழிகள் இருந்தும் அதற்கு அவை தயாராக இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

இது ஒரு முக்கியமான காலகட்டம். தமிழர் தேசத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சிங்களப் படைகளின் அராஜக செயற்பாட்டை வெளி உலகுக்கு அம்பலப்படுத்த முதலில் நடவடிக்கை எடுங்கள்.

சிங்களப் படைகளின் துணையுடன் தமிழர் தேசத்தில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள், பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு பௌத்த மயமாக்கல் போன்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த முன்வாருங்கள். தமிழர் தேசத்தை சிங்கள அராஜகம், சிங்கள ஆக்கிரமிப்பு அற்ற தமிழர் தேசமாகவே வைத்திருப்போம்.

# அவலச் சாவுகளும்...

கொலைசெய்யப்பட்டவர்கள் சவுக்கடி முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த 26 வயதான மதுவந்தி பீதாம்பரம் மற்றும் அவரது 11 வயது மகன் மதுசன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த தாயும் மகனும் தனிமையில் இருந்தபோது, வீட்டுக்குள் புகுந்த கும்பலொன்று தாயையும் மகனையும் கழுத்தறுத்துக்கொலை செய்து அங்கிருந்த பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுள்ளனர்.

படுகொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கொலை செய்யப்பட்ட வீட்டில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் மோப்ப நாயின் உதவியுடன் உடைந்த கோடரி ஒன்று மீட்கப்பட்டது. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி ஆறுமுகத்தான்குடியிருப்பில் ஆரப்பாட்டமும், பேரணியும் நடத்தப்பட்டன. கலைமகள் வித்தியாலய சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞன் பலி

வவுனியாவில் குளத்திற்கு குளிக்கச்சென்ற இளைஞன் மாலையில் உயிரிழந்த நிலையில் சடலமாக குளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் கடந்த 22ம் திகதி இடம்பெற்றுள்ளது. வவுனியா ஈச்சங்குளம், மறவன்குளம் பகுதியிலுள்ள நடராசா சந்தனகுமார் என்ற 36 வயதுடைய இளைஞன் கல்மடு குளத்திற்கு குளிக்கச் செல்வதாக தெரிவித்து விட்டுச் சென்றுள்ளார். இதையடுத்து மாலை அக்குளத்திற்கு குளிக்கச் சென்ற வேறொருவர் குறித்த நபர் குளத்தில் சடலமாக இருப்பதை அவதானித்து அறிவித்துள்ளார். குறித்த நபருக்கு வலிப்பு வருவதாகவும் அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## உந்துருளி விபத்தில் சுழிபுரம் வாசி பலி

அராலி கிழக்கு கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக இரண்டு உந்துருளிகள் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் சுழிபுரத்தைச் சேர்ந்த சிவராசா ஆனந்தகுமார் (வயது–35) என்பவரே உயிரிழந்தார். சுழிபுரத்தில் வசிக்கும் ஆனந்தகுமார், வீட்டில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள இடத்திற்கு குடிதண்ணீர் எடுத்துவரச் சென்றுள்ளார். அவர் குறுக்கு வீதியில் பயணித்துள்ளார். வீதித் திருப்பத்தில் எதிரே வந்த உந்துருளியுடன் மோதயதில் படுகாயமடைந்த ஆனந்தக்குமார் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியிலேயே உயிரிழந்துவிட்டார்.

## மாரடைப்பால் சிறுவன் உயிரிழப்பு

முல்லைத்தீவு செம்மலை முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கமலநாதன் பிறையாளன் (வயது 8) என்ற சிறுவன் மாரடைப்பினால் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது. உடல் உபாதை காரணமாக சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுவன் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தான்.

## அதிக மதுவால் குடும்பத் தலைவர் இறப்பு

அதிக மது அருந்தியதால் ஒருவர் உயிரிழந்துள்ளதார். கோப்பாய் தெற்கைச் சேர்ந்த நடராஜா மனோராஜ் (52) என்ற ஒரு பிள்ளையின் தந்தை, குடும்பத் தகராறு காரணமாக மனைவியை விட்டுப் பிரிந்து தனது தாயுடன் வாழ்ந்து வந்தார். தீபாவளி தினத்துக்கு முதல் நாளும் மறுநாளும் அதிக மது அருந்தியுள்ளார். மது அருந்திய அவர் தனது தாயுடன் தீபாவளியன்று கடற்கரைக்குச் சுற்றுலா சென்றுள்ளார். அவருடன் சென்றவர்கள் கடலுக்குச் சென்ற போதிலும் அவர் வாகனத்திலேயே இருந்துள்ளார். வானில் மயக்க நிலையில் இருந்த அவரை பல முறை எழுப்பிய போதிலும் அவர் எழும்பவில்லை. இதனால் அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்ற தாயும் உறவினர்களும் வீட்டில் வைத்து அவரை எழுப்பினர் எனினும் அவர் எழும்பவில்லை. இதனால் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மனோராஜ் வைத்தியசாலைக்குக் கொண்டுவர முன்னரே இறந்து விட்டார் என மருத்துவர்கள் தெரிவித்தனர். மது அருந்திய நிலையில் அவருக்கு ஏற்பட்ட வாந்தியால் இரப்பைக்குள் இருந்த உணவுப் பதார்த்தம் சுவாசப்பைக்குள் சென்ற நிலையிலேயே இறப்பு நிகழ்ந்துள்ளது என சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

## கடும் குளிரால் மூதாட்டி உயிரிழப்பு

மட்டக்களப்பு ஏறாவூர், மயிலம்பாவெளியிப் பகுதியில் நேற்று நிலவிய கடும் குளிர் காரணமாக, மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்தில் மயிலம்பாவெளியைச் சேர்ந்த, சதாசிவம் பாக்கியம் தவசி (69) என்பவரே உயிரிழந்துள்ளார். குறித்த மூதாட்டியின் நிலைமையை அறிந்த உறவினர்கள் மருத்துவமனைக்கு கொண்டுச்சென்றபோது, ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பிலுள்ள பல பிரதேசங்களில் கடும் குளிரான காலநிலையுடன் கூடிய மழை பெய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## அதிகரித்த கடனால் உயிரை மாய்த்த பெண்

நிதி நிறுவனங்களிடம் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத குடும்பப்பெண் ஒருவர் தவறான முடிவை எடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார். மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்தார். கணவர் கட்டாருக்குத் தொழிலுக்குச் சென்றிருந்ததால், அவர் பல நிதி நிறுவனங்களிடம் கடனைப் பெற்றுள்ளார். எனினும் கணவர் மீண்டும் நாடு திரும்பியதால், கடன் தொகையைச் செலுத்த முடியாது திண்டாடினார். கடன் பெற்ற நிதி நிறுவனங்கள் குறிக்கப்பட்ட காலத்தில் கடனைச் செலுத்துமாறு அழுத்தம் கொடுத்ததால், அதற்குரிய பணத்தைப் பெறுவதற்குத் திண்டாடியவர், தவறான முடிவை எடுத்துள்ளார்.

# மரண அறிவித்தல்

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 | 26 |
| 03 | 10 |
| 1932 | 2017 |



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் பாரிஸை வதிவிடமாகவும் கொண்ட

**பிலோமினா வெலிச்சோர்**

( முன்னாள் ஆங்கில ஆசிரியை யாழ்/வசாவிளான் மத்திய கல்லூரி )

அவர்கள் 26.10.2017 அன்று பிரான்ஸில் காலமானார்

**அன்னார்**

காலஞ்சென்ற வெலிச்சோர் பிள்ளை - முத்தம்மா அவர்களின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்ற எட்வேட் (பொறியியலாளர்) அவர்களின் அன்பு சகோதரியும், ஜோசப் (பிரான்ஸ்) , கிறிஷாந்தி (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தாயாரும், வேதா (பிரான்ஸ்), கரன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், லீலா (இலங்கை) அவர்களின் மைத்துனியும், ஜொபிற்றா-ஜெகன் (பிரான்ஸ்), சதாநந்தன்-அஞ்சலின் (பிரான்ஸ்), சுரேஷ்-தர்ஷினி (பிரான்ஸ்), ஜெனிற்றா-ரவீந்திரன் (லண்டன்), ஜசிந்தா-முருகவேல் (இலங்கை) ஆகியோரின் மாமியும், அந்திரேயா, பியோலினா,கலிஸ்ரா, றபாயல், மிக்காயல், ஆனியல், கபிரியேலா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்

Funérarium
7 Boulevard de Ménilmontant 75011 Paris
Dimanche 14h à 16h30
Lundi 14h00 à 17h00

mardi 31.10.2017 14h30
Eglise Saint Yves
18 Avenue Lénine
93120 La Courneuve

Cimetière : 31.10.2017 16h15
Parisien de Pantin
164 avenue jean jaurès
93500 Pantin

தொடர்புகளுக்கு :
ஜோசப் – 0033663004449
கரன் – 0033613488149
கிறிஷாந்தி – 0033658184086
கில்மன் – 0033768902201

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

விரைவில்...
தமிழ்க்கதிர்
TAMILKATHIR.COM
இணையத் தொலைக்காட்சி!
TKTV.TV
TAMILKATHIR.COM
தொடர்புகளுக்கு:
tktv.info@gmail.com
ஊடக மையம்

பரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris



VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60



ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152



பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
திரு.சகாதேவன்
SAGADEVAN PIERRE
எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.
தொடர்பு கொள்ள
சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
(Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
199 rue du Fbg St Denis, 75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42



சுவர்ண மஹால்
SWARNA MAHAL
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஒடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
www.swarnamahal-france.com
122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com




Mohan
Jewellery Mart
பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
VISA
Aurore
3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord


கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30


Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65


பாரீஸ் அறிவாலயம்
Paris
Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.


செல்லில் - உங்கள் அபிமான பேபியின்
புதிய உதயம்
அபி சலூன்
தொடரூந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்
11 avenue Maréchal Foch
77500 Chelles
07 82 31 73 94
07 51 28 81 34


பொண்டியில் ஆச்சி இறைச்சிக்கடை
உங்களிற்காக மிகவும் மலிவு விலையில்
தரமான இறைச்சி வகைகள்
AACHI BOUCHERIE
ஆட்டிறைச்சி,
மாட்டிறைச்சி,
உயிர்க்கோழி,
கோழிக்கால்,
பங்கிறைச்சிகள்
120 Rue Roger Salengro
93140 Bondy
Tél : 07 51 08 14 83
07 51 27 72 38


Ragawa Tailor
அனைத்து விதமான ஆடைகளும்
உங்கள் வசதிக்கேற்ப
வடிவமைத்துக்
கொடுக்கப்படும்.
01 40 35 14 77
190 Rue Fbg St. Denis
75010 Paris
M°: Gare du Nord


DEVI Textiles & Tailors
சாரி பிளவுஸ்
30
நிமிடங்களில்
தைத்துத்
தரப்படும்
ஆண் பெண்
இருபாலாருக்கும்
அனைத்து விதமான ஆடைகளும்
மற்றும் உங்கள் வசதிக்கு
அமைவான தோல்பைகளும்
உங்கள் எண்ணத்திற்கேற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
29, Bld de la Chapelle, 75010 Paris
Tél: 09 51 01 85 59 - Suresh: 07 81 29 86 50
M°: La Chapelle (ligne 2)


Baby Baloon
பேபி பலூன் டெக்கரேஷன்
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23


ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் - கடைகள் - தொழிற்சாலைகள் போன்றவற்றில்
STOP !
எலிகள் - சுண்டெலிகள்
கரப்பான் பூச்சிகள்
தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V,
75004 Paris.
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
Tél.: 01 60 07 34 29
சுதா / விமல் : 06 34 18 80 04